மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதிகளுக்கு அந்தியூர் 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த பகுதி என்பதால் மும்முனை மின்சாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பகலில் 6 மணிநேரம்; இரவில் 3 மணிநேரம் என ஒரு நாளைக்கு 9 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல், இப்போது மின்சாரம் தேவைக்கு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், கிட்டத்தட்ட 15, 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

முற்பகல் 10—20

ஒரு பகுதியிலே மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொன்னால், உயரழுத்த மின்சாரம் தேவை இருக்கின்ற பட்சத்தில்தான் அந்தப் பகுதியிலே மும்முனை மின்சாரம் வழங்க முடியும். அங்கே தொழிற்சாலைகளோ அல்லது நீரேற்று மின் நிலையங்களோ தேவையான அளவிற்கு இருந்தால்கூட, அதற்காக மின் பாதை அமைக்கின்றபொழுது மும்முனை மின்சாரம் வழங்க இயலும். அந்தப் பகுதியிலே மும்முனை மின்சாரம் தேவைப்படுகின்ற மருத்துவமனை இல்லாத காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் மும்முனை மின்சாரம் வழங்கத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

[2017 மார்ச் 23

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழித்தடத்தில் பர்கூர் மலைப் பகுதியும் உள்ளடங்கி இருக்கின்றது. பர்கூர் மலைப் பகுதியில் அரசு மருத்துவமனை–PHC உள்ளது; ஆலாம்பாளையத்திலும் அரசு மருத்துவமனை உள்ளது; எண்ணமங்கலத்திலும் அரசு மருத்துவமனை உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதியும், விவசாயிகளின் நலன் கருதியும் அந்த இடத்தில் முழுமையாக மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதனைச் செய்யும் என்று மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தியூர் துணை மின் நிலையத்திலிருந்துதான் கடைக்கோடியிலுள்ள பர்கூர் ஊராட்சிக்கும் மின்சாரம் சென்று கொண்டிருக்கின்றது. அந்தக் கடைக்கோடிப் பகுதி என்பது கிட்டத்தட்ட 70 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மும்முனை மின்சாரம் வழங்கும்பட்சத்தில், அதாவது, எண்ணமங்கலம் feeder-க்கு உட்பட்ட ஒரு பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டால், அதன்மூலம் பர்கூர் வழித்தடத்திற்கும் சீரான மின்சாரம் கிடைக்கும். அந்த எண்ணமங்கலம் feeder-ஐச் சுற்றியுள்ள மைக்கேல்பாளையம் feeder வெள்ளித்திருப்பூர், மாத்தூர், சங்கராபாளையம், கெட்டிசமுத்திரம் உள்ளடக்கிய ஊராட்சிப் பகுதிகளுக்கும் சீரான மின்சாரம் கிடைக்க வழிவகுக்கும் என்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துணை மின் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. உயரழுத்த மின்சாரம் தேவைப்படுகின்ற அளவுக்கு அங்கு மருத்துவமனை இல்லையென்றுதான் சொன்னேன். மருத்துவமனையே இல்லையென்று சொல்லவில்லை. உயரழுத்த மின்சாரத்தைப் பெறுகின்ற அளவுக்கு அங்கே தனியார் மருத்துவமனையோ

2017 மார்ச் 23]

அல்லது அரசு மருத்துவமனையோ இல்லாத காரணத்தினால், உயரழுத்த மின் அழுத்தம் இல்லை; மும்முனை மின்சாரம் வழங்கத் தேவையில்லை என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விட்டுவிட்டு இப்பொழுது துணை மின் நிலையம் கேட்கின்றார்கள். ஏற்கெனவே அந்தியூர் பகுதியிலிருந்து 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்து, எதிர்காலத்தில் தேவையிருப்பின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட நெய்யூர் பேரூராட்சியில் மிகப் பழமை வாய்ந்த நெய்யூர் மருத்துவமனை இருக்கிறது. அங்கு International Cancer Centre–ம் இருக்கின்றது. அந்தப் பகுதியில் மின்னழுத்தம் சரியாக இல்லை; மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

மேலும், என்னுடைய குளச்சல் நகராட்சிப் பகுதியிலே Ice Plants இருக்கின்றன. அங்கு சீரான மின்சாரம் கிடைப்பதில்லை. அந்தப் பகுதியிலே மும்முனை மின்சாரம் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சிப் பகுதியிலே சீரான மின்சாரம் இல்லையென்று சொல்கிறார்கள். நகராட்சிப் பகுதியிலே மும்முனை

[2017 மார்ச் 23

மின்சாரம்தான் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் மின் தேவை அதிகமாக இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

தார்ச் சாலையைச் சீரமைத்தல்

***2557—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தப்பட்டி கிராமத்திலிருந்து ரெங்கபாளையத்திற்கு வெங்கடாபுரம் வழியாகச் செல்லும் தார்ச் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தப்பட்டி கிராமம் முதல் ரெங்கபாளையம் வரை வெங்கடாபுரம் வழியாகச் செல்லும் தார்ச் சாலை அமைக்கும் பணி 2016–2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தட்டு மக்களுக்கான அடிப்படை வசதிகளை உடனுக்குடன் செய்வதில் அம்மா அவர்களுக்கு நிகர் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தம் வழி நடக்கும் அரசுதான் இந்த அரசு என்பதை நிரூபிக்கும் விதமாக மக்கள் கேட்டுக்கொண்ட சித்தப்பட்டி–ரெங்கபாளையம் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையினை சட்டமன்றத்திலே வினாவாக எழுதிக் கொடுத்து, அதை இந்தச் சபையிலே எடுத்துக்கொள்வதற்கு முன்னதாகவே, அம்மா அவர்களுடைய அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற செய்தி உள்ளபடியே மகிழ்ச்சியை அளிக்கிறது. தேர்தல் காலங்களிலே பொதுமக்கள் எங்களிடத்திலே கேட்டுக்கொண்ட முக்கியமான சாலைப் பணிகளையெல்லாம், அம்மா அவர்களுடைய அரசு ஓராண்டு நிறைவு செய்வதற்கு முன்னதாகவே, உள்ளாட்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளின் மூலமாக 27 கோடி ரூபாயினை ஒதுக்கி, முக்கிய சாலைகள் மற்றும் பாலங்களுக்கான பணிகள் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நல்ல நேரத்திலே என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு சிறு கோரிக்கையை மட்டும் இந்த நேரத்திலே வைத்து அமர விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த திட்டம் 'தாய்' திட்டம். ஒவ்வொரு வருடமும் கிராமங்களைத் தேர்வு செய்து, அந்தக் கிராமங்களுடைய அடிப்படை வசதிகள், சிறு சிறு தேவைகள் ஆகியவற்றை 'தாய்' திட்டத்தின்மூலம் நிறைவேற்றவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொடுத்தார்கள். 'தாய்' திட்டத்தின்கீழ் சாலைகளைத் தேர்வு செய்யும்போது ஒரு கிலோ மீட்டருக்குக் குறைவாக உள்ள சாலைகளைத் தேர்வு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. Road code-ல் அச்சாலை இல்லை. ஒரு கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ள

[2017 மார்ச் 23

சாலைகளை மட்டுமே அந்தத் திட்டத்திலே இணைக்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கனிவோடு பரிசீலனை செய்து, இனிவரும் காலங்களில் 600 மீட்டர், 800 மீட்டர் என்று ஒரு கிலோ மீட்டருக்குக் குறைவாக இருக்கின்ற, அந்தக் கிராம மக்களுக்குத் தேவையான இணைப்புச் சாலைகள் அல்லது முக்கியமான சாலைகளையும்கூட கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை பணிவோடு அவரிடம் வைத்து, மீண்டும் ஒரு முறை நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கோரிக்கையை வைத்துள்ளார். அதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய மையப் பகுதியில், தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், என்னுடைய ஆளுகைக்குட்பட்ட இடங்களில் ஏதாவது குறைகள் இருந்தால், அதுகுறித்து என்னிடம்தான் பேசவேண்டும். அந்தப் பிரச்சினையை அவையில் பேசுவது முறையல்ல. எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) திரு. சு. புகழேந்தி, நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 23]

(குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, பழனி போன்ற ஊராட்சி ஒன்றியங்களில் போடப்பட்ட ஊராட்சி சாலைகள் சுமார் 10 ஆண்டுகளுக்குமேல் சீர் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, சாலைகளைச் செப்பனிடுவதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி, பொது நிதியாக இருந்தாலும் சரி, மற்ற இனங்களிலிருந்து ஒதுக்கப்படுகின்ற நிதியாக இருந்தாலும் சரி, அது போதுமானதாக இல்லை. அந்தச் சாலைகளெல்லாம் இன்றைக்குக் குண்டும், குழியுமாக இருக்கின்றன. இந்தச் சாலைகளைச் செப்பனிட சிறப்பு நிதியொதுக்க வேண்டும். தமிழகம் முழுவதும், 385 ஊராட்சி ஒன்றியங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் இப்படி இருக்கின்ற அத்துணை சாலைகளையும் ஏதேனும் சிறப்பு நிதியை ஒதுக்கியாவது செப்பனிட மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற 385 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதர சாலைகளை இணைக்கின்ற ஊராட்சிச் சாலைகளை அங்கிருக்கின்ற நெடுஞ் சாலைத் துறை கோட்டப் பொறியாளர், ஊரக வளர்ச்சித் துறையின் செயற்பொறியாளர், மாவட்ட திட்ட அலுவலர் ஆகிய மூன்று அலுவலர்களும் எந்தெந்தச் சாலைகள் அவ்வாறு இருக்கின்றன என்பதை ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால் ஒரு சாலையின் பாதிப் பகுதி நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருகிறது. மீதிப் பாதிப் பகுதி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. அவ்வாறான சாலைகளையெல்லாம் கண்டறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக, அறிக்கையைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி—இரண்டு துறைகள் சம்பந்தப்பட்டதாக இருக்கின்ற காரணத்தால்—அப்படிப்பட்ட சாலைகளையெல்லாம் இணைத்து, நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்ட மாவட்ட இதர சாலைகளின் பட்டியலில் சேர்ப்பதற்கு மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக

[2017 மார்ச் 23

வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் ஒட்டன்சத்திரம் தொகுதியில் 10 ஆண்டுகள் ஆன சாலைகளைப் பழுது பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே, ஊரகப் பகுதிகளில் மட்டும் 46,555 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 8,786 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டங்களின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, சிறப்பான முறையில் அமைக்கப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல சிறப்பான திட்டங்களைக் கொண்டு வந்து இதுபோன்ற பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் கிராமச் சாலைகள் திட்டம்–PMGSY ஆகிய திட்டங்களின்கீழ் அதிகமான சாலைகள் கிராமங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதேபோல நபார்டு இப்படி நகர்ப்புறச் சாலைகளையும் பல திட்டங்களில் எடுத்துக்கொள்கிறோம்.

முற்பகல் 10–30

மாண்புமிகு கொறடா அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை, தனிப்பட்ட எந்தச் சாலை என்று சொன்னால், கண்டிப்பாக உடனடியாக அது எடுத்து மேம்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையின் கீழுள்ள சாலைகளை ஆய்வு செய்து, முன்பே 7 ஆயிரம் சாலைகளை நெடுஞ் சாலைத் துறைக்கு ஒப்படைத்திருக்கின்றோம். அந்த மாதிரியான நடைமுறை இருக்கிறது. அதிலே சிறு, சிறு பிரச்சினைகள் இருந்ததால், பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன. கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23]

கடந்த முறை நீங்கள், சட்டமன்ற உறுப்பினராக, கொறடாவாக இருந்தீர்கள். நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இரண்டின் கீழும் வரும் சாலைகளை, யார் செய்வது என்பதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அப்போதே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று 7 ஆயிரம் சாலைகளை ஒப்படைத்திருக்கின்றோம். இப்போது அதை implement *செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

உங்களுடைய 5 ஆண்டு ஆட்சியில் 28,628 கிலோ மீட்டர் சாலைகளை ஊரக வளரச்சித் துறையில் மேம்படுத்தியிருக்கின்றீர்கள். 3,863 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறீர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 46,555 கிலோ மீட்டர் சாலைகள் 8,756 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி இருக்கின்றோம். எனவே, 10 வருடங்களுக்கும் மேற்பட்ட சாலைகள் விடுபட்டிருந்தால் அவை கண்டிப்பாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பல்வேறு ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலைகள் மற்றும் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு லாயக்கற்ற சூழ்நிலையில் இருக்கின்றன. மழை தொடர்ந்து பெய்யக்கூடிய மாவட்டம். ஆகையால், நகராட்சிப் பகுதிகளில் தார்ச் சாலைகள் விரைவில் அரித்துக்கொண்டு போகக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.* Paver block *போடக்கூடிய தகுதி பெற்ற சாலைகள் அங்கே அதிகமாக இருக்கின்றன. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அதனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதுமட்டுமல்ல. தற்போது மத்திய அரசாங்கத்திடமிருந்து ஊரக வளர்ச்சித் துறைக்கு 14,500 கோடி ரூபாய் வர வேண்டி இருக்கின்றது. அந்த நிதியினையும் பெற்று முழுமையாக சாலைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமாய்*

[*2017 மார்ச் 23*

கேட்டுக்கொள்கிறேன். நிறைய இடங்களில், major roads-ல் இதரச் சாலைகளும், மாவட்டச் சாலைகளும் இடையிடையே குறுக்கிடுகின்றன. எங்களுடைய பகுதியில் கேரளா பார்டர் வருகின்றது. எல்லைப் பகுதியில் இருக்கக்கூடிய அந்தச் சாலைகளை இணைக்கக்கூடிய பகுதிகளிலும் நிறைய கிராமச் சாலைகள் சென்று இணைகின்றன. இந்தச் சாலைகள் எல்லாமே பல ஆண்டுக் காலமாக செப்பனிடப்படாமல் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. பெரிய அளவில் முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, எங்கள் தொகுதிக்கு ஒரு தனி fund கொடுத்து உதவ வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கிடு) மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியானது ஊராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய சாலைகளைப் பற்றியதாகும். இருந்தாலும் பேரூராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஊரகப் பகுதிகளைப் பற்றிதான் நான் சொன்னேன். இதற்கு முன்பு *46,555* கிலோ மீட்டர் develop செய்திருக்கின்றோம். பேரூராட்சி சாலைகளைப் பற்றி கேட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் எந்தச் சாலை என்பதை குறிப்பிட்டுச் சொல்வீர்களென்றால், கண்டிப்பாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், *234* தொகுதிகளிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில், அதிகமான சாலைகள் இந்த ஐந்தாண்டுகளில் போடப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில், உங்களுடைய தொகுதியில் எந்தச் சாலைகள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவை மேம்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***7229—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் பகுதியில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் பகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு மறையாது தன்னுடைய செயல் திட்டங்களால் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனங்களில் நீங்காத இடம் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். கழகப் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும், கழக துணைப் பொதுச் செயலாளர் அவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2017 மார்ச் 23

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி கிராமப்புறங்கள் நிறைந்த மலைப் பகுதியாகும். தமிழக மக்களுடைய நலனுக்காக தமிழக கிராமப்புற வளர்ச்சிக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தந்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களை மனதில் நிறுத்தி, கிராமப்புற மாணவர்களின் வளர்ச்சிக்காக பவானிசாகர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்க கனிவோடு பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தில், ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, இரண்டு அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 12 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் என மொத்தம் 15 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருமாண்டிசெல்லிப்பாளையம் கிராமத்தில் 2012–2013 ஆம் கல்வியாண்டில் புதிதாக ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்கப்பட்டு, அக்கல்லூரிக்கான புதிய கட்டடமும் வழங்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 30–11–2015 அன்று திறந்து வைக்கப்பட்டு, தற்போது அந்தக் கல்லூரி சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

மேலும், ஈரோடு மாவட்டம், அந்தியூர் தாலுகா, நாச்சிமுத்துபுரத்தில் சக்தி பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கவுந்தபாடியில் இ.ஐ.டி பலவகை தொழில்நுட்பக் கல்லூரி என இரண்டு அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில், ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2015–2016 ஆம் ஆண்டில் 300 மாணவ, மாணவியர் பயிலும் வகையில் சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருந்தன.

2017 மார்ச் 23]

இவற்றில் 246 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டன. 54 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை. 2016–2017 ஆம் ஆண்டில் 90 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை. அவை காலியாக இருக்கின்றன. அதேபோல் அரசு உதவி பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 2015–2016 ஆம் ஆண்டில் 297 இடங்கள் காலியாக உள்ளன. 2016–2017 ஆம் ஆண்டில் 286 இடங்கள் காலியாக உள்ளன.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கெல்லாம் புதிதாகக் கல்லூரிகள் வேண்டுமோ அங்கெல்லாம் கல்லூரிகளை வழங்கி, கடந்த 2011–2016 ஆட்சிக் காலத்தில் ஏழை எளிய மாணவர்கள் படிக்கின்ற வகையில் வாய்ப்பினை உருவாக்கித் தந்துள்ளார்கள். அந்த வகையில் பார்க்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் பகுதியில் புதிதாக ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியினைத் தொடங்குவதற்கான கோரிக்கையை தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழி தொடர்கின்ற இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையினை பரிசீலனை செய்து, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்யுமாறு கோரி, என் நன்றியையும் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்டு, 7 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்று வரையில் அது அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகவே செயல்பட்டு வருகிறது. இதனால் அங்கு படிக்கக்கூடிய மாணவர்கள், மேல் படிப்பிற்காக வெளிநாடுகளுக்குச்

[2017 மார்ச் 23

செல்கின்றபோது, All India Council for Technical Education என்கின்ற website-ஐ பார்க்கின்றபோது அந்தக் கல்லூரி அங்கீகாரம் பெறப்படாத கல்லூரியாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகின்றது. எனவே, அதற்கான அனுமதியை இந்த அரசாங்கம் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிரந்தர ஆசிரியர் பணியிடங்கள் காலியாகவே இருந்து கொண்டிருக்கின்றன. அதேபோன்று, 1-8-2012 முதல் அங்கு பணியாற்றக்கூடிய நிரந்தர ஆசிரியர்கள் ஊதிய உயர்வு இல்லாமல் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசின் கவனத்திற்கும் அவர்கள் கோரிக்கைளை வைத்திருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதனை உடனடியாகச் சீர் செய்து, மாணவர்களது வாழ்க்கையை பாதுகாக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அரசு இவற்றை செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கல்லூரியானது, அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் உறுப்புக் கல்லூரியாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அங்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத அளவிற்கு அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பாக அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த சாதாரண சமூக மக்களுடைய மாணவர்கள் படிக்கக்கூடிய பகுதி. 12 ஆம் வகுப்பிற்குமேல் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகளே இல்லை. 12 அல்லது 20 கிலோ மீட்டர் தொலைவில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் பகுதிகளில்தான் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த அரசின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

2017 மார்ச் 23]

சிறப்பான கவனத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்குமேல் மேற்கொண்டு படிக்க முடியாமல் அந்த மாணவர்கள் மீண்டும் விவசாயக் கூலி வேலைக்கு செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த 2011 முதல் 2016 வரையிலான ஆட்சிக் காலம் உயர் கல்வியில் ஒரு மிகச் சிறந்த பொற்காலமாகவே திகழ்ந்தது என்று குறிப்பிடுகின்ற அளவிற்கு இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களால் எங்கெங்கு புதிதாகக் கல்லூரிகள் தேவைப்பட்டனவோ அங்கெல்லாம் 67 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டு, ஒரு வரலாற்றுச் சாதனையை படைத்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏழையெளிய மாணவர்கள் அத்தனைபேரும் அவர்கள் விரும்புகின்ற பாடப் பிரிவில் சேர வேண்டுமென்பதற்காக புதிதாக 959 பாடப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுகின்ற வகையில், இந்தியாவே இன்றைக்கு தமிழ்நாட்டை திரும்பிப் பார்க்கின்ற வகையில், உயர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாகும். இந்தியா முழுவதும் மாணவர்கள் சேர்க்கை 23.6 சதவிகிதமாக இருந்தாலும்கூட தமிழகத்தில் 44.3 சதவிகிதமாக உயர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் தேவையிருப்பின் ஆய்வு செய்து, பரிசிலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

76—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***8392—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள கணியூர், சோழமாதேவி மற்றும் குமரலிங்கம் ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) 2015–2016 ஆம் பருவத்தில் திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதியில் மடத்துக்குளம், கணியூர் மற்றும் கல்லாபுரம் ஆகிய கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, 2,088 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து நெல் முழுவதும் கொள்முதல் செய்யப்பட்ட பிறகு தற்போது கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. நெல் வரத்து இருக்கும்பட்சத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைகேற்ப திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத்

2017 மார்ச் 23]

தொகுதியில் மடத்துக்குளம் ஒன்றியத்தில் சங்கராமநல்லூர், குமரலிங்கம், மடத்துக்குளம் மற்றும் கணியூர் என்ற நான்கு பேரூராட்சிகள் உள்ளன. மேலும், கிராம ஊராட்சிகளான கொழுமம், பாப்பான்குளம், சோழமாதேவி, வேடப்பட்டி, துங்காவி காரத்தொழுவு, கடத்தூர் மற்றும் ஜோத்தம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் அமராவதி பாசனக் காலங்களில் நெல் பயிரிடுவது வழக்கம். உடுமலை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரம் கிராமத்தையும் உள்ளடக்கியதாகும். இந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகள் முதலாவதாக நெல்லும் அதையடுத்து கரும்பு மற்றும் தென்னையும் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆகவே, சோழமாதேவி கிராமத்தில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும், குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும் அமைத்துத் தரப்படுமா என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் விவசாயிகளுக்கு நெல்லுக்காக 474 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கிய தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பகுதிகளிலெல்லாம் நெல் வரத்து இருக்கிறதோ அந்த இடங்களிலெல்லாம் நெல்லைக் கொள்முதல் செய்வதற்காக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துகொள்ளலாம் என அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த இடங்களில் எல்லாம் நெல் வரத்து இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

[2017 மார்ச் 23

முற்பகல் 10–45

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகின்ற சோழமாதேவி ஊராட்சி மற்றும் குமரலிங்கம் பேரூராட்சி முழுமையாக பிரதானக் கால்வாய் மற்றும் ஆற்றுப் பாசனப் படுகை சார்ந்த பகுதிகளாகும். ஆகவே, அந்த இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்துத்தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நெல் கொள்முதல் செய்கின்ற கால அளவை குறிப்பாக 3 மாதங்கள் அறுவடைக் காலம் என்று சொன்னால் ஓரிரு மாதங்களிலேயே நெல் கொள்முதல் நிலையங்களை மூடிவிடுகின்றார்கள். ஆகவே, அனைத்து விவசாயிகளும் பயனடையாத ஒரு சூழ்நிலைதான் ஏற்படுகிறது. மேலும், எந்த இடத்தில் கொள்முதல் செய்கிறார்கள் என்பது குறித்த விளம்பரத்தினை, பதாகைகளை விவசாயத் துறை மூலமாகவோ அல்லது நெல் கொள்முதல் செய்கின்ற அந்தத் துறை மூலமாகவோ வெளியிட்டால் மக்கள் அனைவரும் அதில் பயனடைவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொருநாளும் இத்தனை மூட்டைகள்தான் நெல் கொள்முதல் செய்யப்படும் என்ற அளவுகோல் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆகவே, விவசாயிகள் முழுமையாக தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் வழங்க முடியாத சூழ்நிலை நிலவுகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகள் விளைவிக்கின்ற நெல்லை முழுமையாகக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவை எனக் கேட்டார்கள். தேவைக்கேற்ப திறக்கப்படும் என நான் உங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்திருந்தேன். அவர் மேலும் கூறுகின்றபோது, அதற்குக் கால நிர்ணயம் வைக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு கால நிர்ணயம் கிடையாது. எப்பொழுது நெல்

2017 மார்ச் 23]

வரத்து இருக்கின்றதோ அப்பொழுதெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திருக்கும். மக்கள் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கோரிக்கைகள் வைப்பதன் அடிப்படையில் அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் எத்தனை நாட்களுக்குத் தேவைப்படுகின்றனவோ அத்தனை நாட்களுக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா காலங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைக்க வேண்டும் என்கிறார்கள். ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்படுவதற்கு ஒரு மாதத்திற்கு 25,000 ரூபாய் செலவாகும் என்ற அடிப்படையில், நெல் வரத்தே இல்லாதபோது நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைத்திருக்க முடியாது. எனவேதான், தேவைக்கேற்ப, நெல் வரத்து இருக்கின்றபோது, நிச்சயமாக, உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

கைத்தறி விற்பனை நிலையம்

***12774—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஒ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என

[2017 மார்ச் 23

மாண்புமிகு போளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியில், போளூர் நகரில் பல ஆண்டுகளாக கைத்தறி விற்பனை நிலையம் நல்ல முறையில் இயங்கி வந்தது. ஏனோ தெரியவில்லை, சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த கைத்தறி விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளது. ஆகவே, மூடப்பட்ட கைத்தறி விற்பனை நிலையத்தினை மீண்டும் திறக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, போளூர் நகரில் இயங்கிவந்த கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், வாடிக்கையாளர்கள் குறைந்துகொண்டே வந்த காரணத்தினாலும், துறை ஆய்வுக்குப் பின் 1994 ஆம் ஆண்டில் மூடும் நிலை ஏற்பட்டது. திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது போளூர், வந்தவாசி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மூன்று இடங்களில் கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், தேவைக்கேற்ப போளூர் பகுதியில் உள்ள அரசு சார் நிறுவனங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் இந்த விற்பனை நிலையங்களின் ஊழியர்கள் நேரில் சென்று campus sales எனப்படும் வளாக விற்பனை செய்து கைத்தறித் துணிகளை விற்பனை செய்து வருகின்றனர். எனினும், போளூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசுக் கட்டடங்களில் குறைந்த வாடகைக்கு இடம் கிடைக்கும்பட்சத்தில் அங்கு விற்பனை நிலையம் அமைப்பது குறித்து மீண்டும் ஆய்வு செய்து உரிய

2017 மார்ச் 23]

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில் கைத்தறி ஆடையினை உடுத்த பெரும்பான்மையான மக்கள் விரும்புகின்றனர். மேலும், பட்டு மற்றும் காஞ்சிபுரம் பட்டு போன்ற சேலைகளும் தேவைப்படுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைத்தறி விற்பனை நிலையத்தினைத் திறக்க முன்வரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த காரணத்தினாலேயே போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் மூடப்பட்டிருக்கிறது. அங்கே கைத்தறித் துணியை அணிகிறவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆய்வுக்குப் பின், தேவையிருப்பின், முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த பண்பாட்டுச் சின்னமாய் இருக்கக்கூடிய பட்டுப் புடவைகளை தயாரிக்கக்கூடிய காஞ்சி மாநகரில் தனியார் மற்றும் அரசு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகத் தயாரிக்கக்கூடிய பட்டுப் புடவைகளை பெரும்பான்மையான மக்கள் விரும்பி வாங்குவதற்கு வருகை தருகிறார்கள். நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஈரோட்டில்*

[2017 மார்ச் 23

புறவழிச் சாலையில் அமைந்திருக்கக்கூடிய Tex Valley போல காஞ்சியின் புறவழிச் சாலையில் Silk Valley என்ற பெயரில் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தனியாரின் பங்களிப்போடு Public–Private participation-ல் ஒரு Food Court, வாகன நிறுத்தம் மற்றும் அனைத்து வசதிகளும்கொண்ட மிகப்பெரிய ஒரு தனி விற்பனை வளாகத்தினை உருவாக்குவதன் மூலமாக, பட்டு, கைத்தறி நெசவுத் தொழிலும் காக்கப்படும், விற்பனையும் பெருகும் என்ற எண்ணத்தில் அதுபோன்ற வளாகத்தினை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: முதலீட்டாளர்கள் முன் வருவார்கள் என்று சொன்னால், அரசு கண்டிப்பாகப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரசியல் தலைவர்களில், இந்திய அரசியல் தலைவர்களில், தமிழகத்தின் அரசியல் தலைவர்களில் 'எனது தலைமையிலான தமிழக அரசு' என்று சொல்லக்கூடிய, தகுதி வாய்ந்த தலைவியாக, தமிழகத்தை தனித்துவம் வாய்ந்த மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) வழிநடத்திய ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தலைமைக்கு ஒரு சோதனை வரும்பொழுது, தாயின் தலைமகனாகத் தமிழகத்தைத் தாங்கி நின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடியாத்தம் நகராட்சி, குடியாத்தம் பகுதியில், ஜவுளி நெசவு, கைலி என்று சொல்கின்ற லுங்கிகளை உற்பத்தி செய்து, தங்களுடைய வாழ்வாதாரத்தினை முன்னிறுத்தி கைத்தறி நெசவாளர்கள் தொழிலைச் செய்து வருகின்றனர். எனவே, குடியாத்தம் பகுதியில் ஒரு விற்பனை நிலையத்தை உருவாக்கி, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்து, வாழ்க்கையில் மேன்மையடைய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

யோகா மற்றும் தியான மையம்

***7135—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டில் யோகா மற்றும் தியான மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) யோகா மற்றும் இயற்கை வாழ்வியல் மருத்துவமனைப் பிரிவு, நாமக்கல் மாவட்ட தலைமை மருத்துவமனையில் நல்லமுறையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் மக்கள் பெரிதும் பயன்பட்டு வருகிறார்கள். ஆகையினால், திருச்செங்கோட்டிலே யோகா மையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2017 மார்ச் 23*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானுலகை ஆட்சி செய்ய, வானவர்கள் களவாடிச் சென்ற ஏற்றமிகு சாதனை, சரித்திரத்தின் போற்றுதலுக்குரிய தவப் புதல்வி, வசந்த காலப் பூக்கள் எல்லாம் அசந்து போகும் புன்னகை தவழும் அழகு முகம், கம்பீரமான சிங்கப் பார்வை கொண்ட அறிவுலக மேதையரும் அடிபணிந்து ஞானம் பெறும் (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துகளின் பெட்டகமாய்த் திகழ்ந்த, தவ வாழ்வின் மகத்துவத்தை உலகறியச் செய்த 'மக்களால் நான்' என்று மக்களுக்காகவே வாழ்ந்த மங்காப் புகழ் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் இன்றும், என்றும் வீற்றிருக்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை முதலில் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), கழகப் பொதுச் செயலாளர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யோகா தியான மையம் அமைப்பது திருச்செங்கோடு பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. யோகாவும், தியானமும் செய்வதனால் மனதிற்கும், உடம்பிற்கும் புத்துணர்வு ஏற்படுகிறது. ஆகையால் எனது தொகுதியில் அனைத்து மக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மைதான். யோகா மற்றும் தியானம் செய்வது மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்ச்சி அளிக்கும். இந்தக் கருத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்த காரணத்தினால்தான், இந்தியாவிலேயே எந்த*

2017 மார்ச் 23]

மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) முதன் முதலாக Lifestyle Clinic for Yoga *என்ற வாழ்வியல் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என்று விதி 110-ன்கீழ் அறிவித்து, 9 கோடியே, 60 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அதாவது 31 மாவட்ட தலைமை மருத்துவமனைகள், 18 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் ஓமந்தூரார்* Multi Super Speciality Hospital *உள்ளிட்ட 50 இடங்களில் அமைத்து, அவை மிகச் சிறப்பாக செயல்பட்டு, பொது மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருக்கின்றன. வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று இல்லை. தாங்கள் பொது மக்களுக்காக கேட்பது நியாயம். இனி வருங்காலத்தில், திருச்செங்கோட்டிலும் அந்த மையத்தைத் தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டில் யோகா மற்றும் தியான மையங்கள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் எனத் தெரிவித்துள்ள மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து, தமிழக மக்கள் அனைவருடைய இதயங்களிலும், மறைந்தும், மறையாமலும் குடிகொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தியாகத் தலைவி சின்னம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி வேட்பாளர் அண்ணன் தினகரன் அவர்களையும் வணங்குகிறேன்.*

[2017 மார்ச் 23

விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட வேப்பூர் தாலுகாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தரமுயர்த்தித் தந்தமைக்கு, முதலில் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தாலுகா மருத்துவமனையில், போதிய மருத்துவர்களை உடனடியாக நியமனம் செய்து அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு மருத்துவ வசதியை சிறப்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா மருத்துவமனையில் ஒப்பனிக்கப்பட்ட பணியிடங்கள் எத்தனை இருக்கின்றனவோ, அவை உடனடியாக நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***9632—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2017 மார்ச் 23]

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் பகுதியில் 400 காப்பீட்டு நபர்கள் வகிப்பதாகக் கண்டறியப்பட்டு, 1–2–2008 முதல் தென்காசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் மாவட்டவாரியான கணக்கெடுப்பின்படி, கடையநல்லூர் பகுதியை உள்ளடக்கிய தென்காசி வட்டத்தில், தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர, 475 தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகத்தின்மூலம்செயல்படுத்தப்பட்டுவரும்திட்டமாகும். அக்கழகத்தின் விதிமுறைகளின்படி, காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 50,000–க்கு மேல் இருந்தால் மட்டுமே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியில் பீடி சுற்றக்கூடிய தொழிலாளர்கள், விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் என பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். தரம் வாய்ந்த E.S.I. மருத்துவமனை திருநெல்வேலியில்தான் உள்ளது. இத்தகைய தொழிலாளர்கள் காச நோய் மற்றும் புற்று நோய் போன்ற கொடூரமான நோய்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவதால், உடனடி சிகிச்சையை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அவர்கள் திருநெல்வேலிக்கு சென்றுதான் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: ஏற்கெனவே அங்கே பல்வேறுநிலைகளிலேசுகாதாரக்கேடுகளால்பாதிக்கப்படுகின்றனர். எனவே, இதுபோன்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு

[2017 மார்ச் 23

கடையநல்லூர் தொகுதியிலேயே ஒரு தரம் வாய்ந்த E.S.I.– தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை கண்டிப்பாக அமைக்க அரசு முன்வர வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த E.S.I. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, organised sector தொழிலாளர்களுக்கு மட்டும்தான் அமையும். 4–12–2014 அன்று புதுதில்லியில் நடைபெற்ற தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் 163 வது கூட்டத்தில் 100 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டுவதற்கு அப்பகுதியில் ஐம்பதாயிரம் காப்பீடு நபர்கள் வசிக்க வேண்டுமென்ற புதிய வரன்முறை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் விதிமுறைகளின்படி காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்திற்கும் மிகும் இடங்களில் மட்டுமே மருத்துவமனை அமைக்க முடியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: எனவே, கடையநல்லூர் பகுதியிலே தற்போது குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளர்கள் இருப்பதால் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் E.S.I. மருத்துவமனை துவங்குவதற்கு ஐம்பதாயிரம் பயனாளிகள் இருக்க வேண்டுமென்ற விவரத்தைச் சொன்னார்கள். ஆனால், அங்கே பீடித் தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றவர்கள் புற்றுநோய்,

2017 மார்ச் 23]

காசநோயினாலே அதிகமாக பாதிக்கப்பட்டு வருவதாலே அதைத் தடுப்பதற்குண்டான ஒரு நடவடிக்கையாக வேறு ஏதாவது ஒரு மருத்துவமனையையாவது அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதைத் தங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஏதாவது ஓர் அரசு மருத்துவமனை தேவையென்றால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஆலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

பேருந்து வசதி

***6741—திரு. மு. கோதண்டபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வேயிலிருந்து மாமல்லபுரத்திற்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பயணிகள் பிராட்வேயிலிருந்து மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலமாக அடையாறு வந்தடைந்தால் அங்கிருந்து மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்தி மாமல்லபுரம் வந்தடையலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி அவர்கள்.

திரு. மு. கோதண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய தலைசிறந்த முதல்வராகவும், அனைத்துத் தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்து, எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 'அம்மா' என்கிற மூன்றெழுத்து சொல்லுக்கு இலக்கணத்தை வகுத்து, நீண்ட நல்லாட்சி செய்து, இன்னும் 100 ஆண்டுகளானாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியை நடத்த அமர்ந்த இடத்தினையும், அவர்களுடைய ஆன்மாவையும் நன்றியோடு வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நல்லாட்சியின் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், எங்களின் கழகப் பொதுச் செயலாளர் மதிப்புமிகு சின்னம்மா அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பாரம்பரிய கலாச்சாரச் சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தை காண்பதற்கு உள்நாட்டினர் மற்றும் வெளிநாட்டினர் ஆண்டுதோறும் பல இலட்சக்கணக்கில் வருகை தருகின்றனர் என்பதைக் கனிவோடு நினைத்துத்தான் இந்தக் கேள்வியை நான் இந்த அவைமுன் வைத்திருக்கின்றேன். எனவே, சென்னை பிராட்வேயிலிருந்து சென்ட்ரல் இரயில் நிலையம் வழியாக மாமல்லபுரம் வரை கூடுதலாகப் பேருந்துகளை இயக்கினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கும், அன்றாடம் சென்னைக்கு வேலைக்காக வருவோர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். எனவே, இதைக் கனிவோடு பரிசீலித்து, பேருந்துகளை இயக்க தங்கள் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் வழக்கிற்குள்ளே செல்லவில்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் உங்கள் பெயரைச் சொன்னேனா? நான் வழக்கிற்குள்ளே செல்லவில்லை. வழக்கில் இருப்பது வேறு. வழக்கிற்குள்ளே சென்று ஒருவருடைய பெயரை உச்சரித்திருந்தால் நீங்கள் இதைச் சொல்லலாம். நான் வழக்கைப் பற்றியும் சொல்லவில்லை; வழக்கிற்குள்ளும் போகவில்லை. (குறுக்கீடுகள்) நடந்த சம்பவத்தைச் சொல்வது வேறு, உங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தால் கூட . . .(குறுக்கீடுகள்) நான் அதை விட்டுவிடுகிறேன். ஆகவே, இங்கு அமர்ந்துகொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைப் போன்று காங்கிரஸ் நண்பர்கள் சொல்லட்டும் அதை, நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஏனென்று சொன்னால், அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். என்ன காரணம் என்பதை நீங்கள் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் கண்ணியத்தோடு உங்களுக்கு நேரத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நான் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆளும்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கொடுக்கப்பட்ட நேரம் 33 மணி 11 நிமிடங்கள். ஆனால் திராவிட முன்னேற்றக்

2017 மார்ச் 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

கழகத்திற்கு கொடுக்கப்பட்ட நேரம் 50 மணி 32 நிமிடங்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (குறுக்கீடுகள்) அந்த வகையில், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நடுநிலையோடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் நடந்துகொண்டார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அவர் முடிக்கட்டும். அவர் முடித்த பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) சரி பேசுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைச் சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் பேசிய நேரம் எவ்வளவு? 15 நிமிடங்கள் துரைமுருகனுக்கு ஒதுக்கினால் 10 நிமிடங்கள் இவர்களே பேசுவார்கள். (குறுக்கீடுகள்) பிறகு நாங்கள் என்ன செய்வது? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் பேசினார்கள், யார் பேசவில்லை என்பதல்ல. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற, நீங்கள் பேசத் துவங்கியதிலிருந்து முடியும் வரையுள்ள நேரத்தை நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். யார் குறுக்கிட்டார் என்பதல்ல. இங்கிருக்கிற காங்கிரஸ் நண்பரைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். அவர் செய்தது நியாயமா என்பதை மட்டும் நீங்கள் தெரிவித்தால் நன்றாக இருக்கும். ஆகவே, சட்டமன்றப் பேரவைத் தலைவரைப் பொறுத்தவரையிலும், மனிதநேயத்தோடு, கண்ணியம் காக்கின்ற வகையில் எதிர்க்கட்சி என்று பார்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வேண்டுமானாலும் அமருங்கள் என்று சொல்வார்களே தவிர, எதிர்க்கட்சித் தலைவர் எழுந்தவுடனேயே அவருக்கு அனுமதி வழங்கியிருக்கிற நியாயமான, நேர்மையான ஒரு சட்டமன்றப் பேரவைத் தலைவர்மீது (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை முறியடித்துக்காட்டி, மீண்டும் சட்டமன்றப் பேரவைத் தலைவரை இங்கே அமர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) தாமரைபோல மலர்ந்து, இந்தப் பேரவையிலே அமர வேண்டும், அமர வேண்டும் என்று வாழ்த்தி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–05

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறையாத பெரும் சக்தி திராவிட சக்தி. தன்மான சக்தி தமிழர்களைக் காக்கும் தெய்வ சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 8 கோடி தமிழர்களின் இதய சக்தி, மாண்புமிகு அம்மா என்னும் அற்புத சக்தியால் (மேசையைத் தட்டும் ஒலி) அடையாளம் காட்டப்பட்டவர் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்கள். 10–10–2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களை வாழ்த்தி, பாராட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரையாற்றினார்கள். அப்போது அவர் 'மாண்புமிகு பேரவைத் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற தாங்கள் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில், பின்தங்கிய பகுதியில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதுகலைப் பட்டம் பெற்றவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த முதல் பேரவைத் தலைவர் தாங்கள்தான் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் இந்தப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டதிலும் எனக்கு மிக்க மகிழ்ச்சி. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் தாங்கள் வரலாறு படைத்தீர்கள்' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்களோடு குறிப்பாக, ஏழை எளிய மக்களோடு நெருக்கமான தொடர்பும், உறவும் கொண்டவராக தாங்கள் விளங்கியிருக்கின்றீர்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து 3 முறை சங்கரி சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள் அனைவரும் பாராட்டும்வண்ணம் திறம்படப் பணியாற்றியிருக்கின்றீர்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

15–வது சட்டமன்றத்தின் பேரவைத் தலைவராக இரண்டாவது முறையாக மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்கள்

2017 மார்ச் 23] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'ஒரு சிறந்த சபாநாயகராக விளங்க வேண்டுமென்றால், திரு. ஜி. சிவசண்முகம் பிள்ளை அவர்களின் கண்டிப்பும், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களுடைய எளிமையான அணுகுமுறையும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே பெற்றவர் தாங்கள் என்பதில் (மேசையைத் தட்டும் ஒலி) இரு வேறு கருத்திற்கு இடம் இல்லை' என்று சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களின் திறமை, அணுகுமுறை ஆகியவற்றைப் பாராட்டி புகழாரம் சூட்டினார் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாமெல்லாம் தெய்வமாக வணங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே சட்டமன்றப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப்பற்றி இவ்வளவு சிறப்பாகக் கூறியுள்ளார். இதற்குமேல் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வேறு எந்தவொரு சான்றிதழும் தேவையில்லை என்று நான் திடமாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மனவளம், தைரியம், அன்பு, அடக்கம், பண்பு, பகைமை பேசுபவரிடம் அன்பு காட்டுதல், விடாமுயற்சி, தன்னடக்கம் ஆகிய நற்பண்புகள் ஒருங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் புதைந்து கிடந்ததை அறிந்த காரணத்தினால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் பேரவைத் தலைவர் பதவிக்கு அடையாளம் காட்டப்பட்டார் என்று கருதுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட அனைவரும் பணியில் சிறந்து விளங்கினர். அந்த வகையில் சிறப்பாகப் பணியாற்றி, தான் வகித்த பதவிக்கு மேலும் சிறப்புச் சேர்த்தவர் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த மாதம் 16 ஆம் தேதி என்னைப் பதவி ஏற்க அழைப்பு விடுத்தார். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு அமைந்த இந்த அரசை '15 நாட்களுக்குள் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்' என மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மாண்புமிகு ஆளுநரின் உத்தரவிற்கிணங்க சென்ற மாதம் 18 ஆம் தேதியன்று சட்டமன்றத்திலே நம்பிக்கை வாக்குக் கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் 'நான் சட்டமன்றப் பேரவையின் விதிகளின்படிதான் சட்டமன்றத்தை நடத்துகின்றேன்' என்று கடைசிவரையில் இச்சபையின் கண்ணியத்தையும், மாண்பையும்

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2017 மார்ச் 23*

காக்க (மேசையைத் தட்டும் ஒலி) விதிமுறைகளின்படி சட்டமன்றத்தை நடத்திய விதம் அனைத்து சட்டமன்றப் பேரவைத் தலைவர்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

இத்தகைய சட்டப் பேரவைத் தலைவர் தலைமையில் நடைபெறும் இம்மாமன்றத்தில் நான் முதலமைச்சராக இருப்பதை பெருமையாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரைப்பற்றிச் சொன்ன கருத்துகள் ஏற்புடையதல்ல என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரி எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தினை நான் முழுமையாக எதிர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனித் தீர்மானத்தின்மீது இப்போது வாக்கெடுப்பு. "மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

எதிர்ப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

எதிர்ப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

எதிர்ப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: We demand Division.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு Division வேண்டும்.

பிற்பகல் 12–15 to *12–25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைச் செயலாளர் அவர்கள் அழைப்பு மணியை, அதாவது Quorum Bell–ஐ மூன்று முறை ஒலிக்கச் செய்வார்கள். அழைப்பு மணியை அழுத்துமாறு செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

(அழைப்பு மணி மூன்று முறை ஒலிக்கப்பெற்றது.)

பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். பேரவையின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டுவிட்டனவா?

(பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)

பேரவை விதி 99(5)-ன்கீழ் குறிப்பிட்டுள்ளவாறு, பேரவை விதி 99(2)-ல் கூறியபடி இரண்டாவது முறையாக இப்பிரச்சினையைப் பேரவையின்முன் வைக்கிறேன். "மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

எதிர்ப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

எதிர்ப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

எதிர்ப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது. (குறுக்கீடுகள்)

குரல் வாக்கெடுப்பு மீண்டும் மறுக்கப்பெற்றுள்ளதால், எண்ணிக் கணிக்கும் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவருக்கென ஒதுக்கப்பட்ட இருக்கையிலே அமர்ந்திட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலிருந்து வெளியே செல்லவோ, இன்னொருவர் இருக்கைக்குச் செல்லவோ கூடாது. வாக்கெடுப்பு முடியும்வரை அவரவர் இருக்கையிலேயே இருக்க வேண்டும்.

நம்முடைய பேரவை 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். ஒவ்வொரு பிரிவாக நான் வாக்கெடுப்பு நடத்த உள்ளேன். பேரவை விதி 99 உள்விதி (5)-ன்கீழ் தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், தீர்மானத்தை எதிர்ப்போர் 'இல்லை' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், நடுநிலை வகிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களையும் தனித்தனியே பகுதி வாரியாக, blockwise எழுந்து நிற்குமாறு அழைப்பேன். அவ்வாறு

[பேரவைத் துணைத் தலைவர்] [2017 மார்ச் 23

எழுந்து நிற்பவர்களின் பெயர்கள், செயலாளர் அவர்களால் ஒவ்வொரு பெயராகப் படிக்கப்பெற்ற பின்னர், பெயர் படிக்கப்பெற்ற அந்தக் குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர் தனது இருக்கையிலே அமர்ந்துகொள்ளலாம்.

பேரவைமுன் உள்ள கேள்வி

"மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது"

பகுதி–1

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
2. மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்
3. மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு
4. மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு
5. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்
6. திரு. கு. ராஜேந்திரன்
7. திரு. அம்மன் கே. அர்ச்சுணன்
8. திரு. இரா. குமரகுரு
9. திரு. மு. கோதண்டபாணி
10. திரு. மா. கோவிந்தராசு
11. திரு. மு. சக்ரபாணி
12. திரு. ஆர். தங்கதுரை

13. திரு. ரா. தமிழ்ச்செல்வன்

14. திரு. கே.எஸ். தென்னரசு

15. திரு. ஆர். நடராஜ் (மேசையைத் தட்டும் ஒலி)

16. திரு. வி. பன்னீர்செல்வம்

17. திரு. ஏ.கே. போஸ்

18. திரு. கே.ஏ. பாண்டியன்

19. திரு. என்.ஜி. பார்த்திபன்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி–2

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

20. மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்

21. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்

22. மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு

23. மாண்புமிகு திரு. பி. தங்கமணி

24. மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி

25. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்

26. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்

27. மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்

28. மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி

29. மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி
30. மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்
31. மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்
32. மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்
33. மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்
34. திரு. வீ. அலெக்சாண்டர்
35. திரு. பா. ஆறுமுகம்
36. திரு. ஏ. இரத்தினசபாபதி
37. திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்
38. திரு. கே.வி. இராமலிங்கம்
39. திரு. சி.வி. இராஜேந்திரன்
40. திரு. எ.பி. சக்திவேல்
41. திரு. அ. சண்முகம்
42. திரு. ப. சத்திய நாராயணன்
43. திரு. இரா. சந்திரசேகர்
44. திரு. சி. சந்திரசேகரன்
45. திரு. வே.பொ. சிவசுப்பிரமணி
46. திரு. ஆர்.எம். சின்னதம்பி
47. திருமதி கு. உமா மகேஸ்வரி
48. திருமதி வி. கஸ்தூரி வாசு
49. திருமதி ம. கீதா
50. திருமதி ப. சத்யா
51. திருமதி மு. சந்திரபிரபா
52. திருமதி பொன். சரஸ்வதி

53. திருமதி கு. சித்ரா

54. திருமதி மு. பரமேஸ்வரி

55. திரு. பி.வி. பாரதி

56. திரு. ஆர். பாலசுப்பிரமணி

57. திரு. கே.பி.பி. பாஸ்கர்

58. திரு. அ. பிரபு

59. திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்

60. திரு. அ. மருதமுத்து

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி–3

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

61. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்

62. மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா

63. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்

64. மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்

65. மாண்புமிகு திரு. இரா. காமராஜ்

66. மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்

67. மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்

68. மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி

69. மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்

70. மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்

71. மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி

72. மாண்புமிகு திரு. ப. பாலகிருஷ்ணா ரெட்டி

73. திரு. ஐ.எஸ். இன்பதுரை

74. திரு. எஸ். ஈஸ்வரன்

75. திரு. டி.எ. ஏழுமலை

76. டாக்டர் கா. கதிர்காமு

77. திரு. V.T. கலைச்செல்வன்

78. திரு. ஆர். கனகராஜ்

79. திரு. சு. குணசேகரன்

80. திரு. ஆர். சுந்தரராஜ்

81. திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன்

82. திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்

83. திரு. எம். செல்வராசு

84. திரு. C.V. சேகர்

85. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

86. திரு. அ. நடராஜன்

87. திரு. பி.எம். நரசிம்மன்

88. திரு. பா. நீதிபதி

89. டாக்டர் V.P.B. பரமசிவம்

90. திரு. ப. பலராமன்

91. திரு. எஸ். பவுன்ராஜ்

92. திரு. கே. பழனி

93. திரு. பெ. பழனியப்பன்

94. திரு. சோ. மாரியப்பன் கென்னடி

95. திரு. எஸ். முத்தையா

96. திரு. ஆர். முருகன்

97. திரு. என். முருகுமாறன்

98. திரு. ஆர். முருகையா பாண்டியன்

99. திரு. தூசி கே. மோகன்

100. திரு. சு. ரவி

101. திரு. வி. ராதாகிருஷ்ணன்

102. திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்

103. திரு. அ. ராமு

104. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

105. திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற
கே.ஆர். ராஜாகிருஷ்ணன்

106. திரு. சி. ராஜா

107. திரு. கோ. லோகநாதன்

108. திரு. விருகை V.N. ரவி

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி–4

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி

2. திரு. கரி. இராமசாமி

3. திருமதி எஸ். விஜயதரணி

4. திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்
5. திரு. ஜே.ஜி பிரின்ஸ்
6. திரு. எச். வசந்தகுமார்
7. திரு. செ. ராஜேஷ் குமார்
8. திரு. ஆர். கணேஷ்
9. திரு. வி.எஸ். காளிமுத்து
10. திரு. ச. பாண்டி
11. திரு. பெ. சுப்ரமணி
12. திரு. மா. சுப்பிரமணியன்
13. திரு. துரை. கி. சரவணன்
14. திரு. ஏ.பி. நந்தகுமார்
15. திரு. அ. நல்லதம்பி
16. திரு. கே.என். நேரு
17. திரு. பழனிவேல் தியாக ராஜன்
18. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
19. திரு. ஒய். பிரகாஷ்
20. திரு. சபா. ராசேந்திரன்
21. திரு. ஆர். காந்தி
22. திரு. டி.பி.எம். மைதீன்கான்
23. திரு. எம்.கே. மோகன்
24. திரு. எஸ். ரகுபதி
25. திரு. ப. ரங்கநாதன்
26. திரு. ஜெ. அன்பழகன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

109. திரு. சே. கருணாஸ்

110. திரு. உ. தனியரசு

111. திரு. எம். தமிமுன் அன்சாரி

112. திரு. க.நா. விஜயகுமார்

113. திரு. கே.எஸ். விஜியகுமார்

114. திரு. என்.டி. வெங்கடாச்சலம்

115. திரு. கோ. வெங்கடாஜலம்

116. திருமதி ப. மனோன்மணி

117. திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

118. திரு. எம். ரெங்கசாமி

119. திரு. V. செந்தில்பாலாஜி

120. திரு. ச. வெற்றிவேல்

121. திரு. P. வெற்றிவேல்

122. திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி–5

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

27. திரு. அர. சக்கரபாணி

28. திரு. கு. பிச்சாண்டி

29. திரு. எஸ். அம்பேத்குமார்

30. டாக்டர் ஆர்.டி. அரசு

31. திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்

32. திரு. தா.மோ. அன்பரசன்

33. திரு. க. அன்பழகன்

34. திரு. எஸ். ஆஸ்டின்

35. திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்

36. திரு. கு. இராதாமணி

37. திரு. எம். இராமச்சந்திரன்

38. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

39. திரு. எஸ்.ஆர். இராஜா

40. திரு. இரா. இராஜேந்திரன்

41. திரு. பி.என்.பி. இன்பசேகரன்

42. திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்

43. திரு. தா. உதயசூரியன்

44. திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்

45. திரு. வெ. கணேசன்

46. திரு. இ. கருணாநிதி

47. திரு. பி. மூர்த்தி

48. திரு. துரை. சந்திரசேகரன்

49. திரு. கே.பி.பி. சாமி

50. திரு. சிவ.வீ. மெய்யநாதன்

51. திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி

52. திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்

53. திரு. எஸ். சுதர்சனம்

54. திரு. க. சுந்தர்

55. முனைவர் கோவி. செழியன்

56. திரு. அ. சௌந்தரபாண்டியன்

57. திரு. பி.கே. சேகர்பாபு

58. திரு. கே.வி. சேகரன்

59. திரு. செ. தங்கப்பாண்டியன்

60. திரு. தங்கம் தென்னரசு

61. திரு. மு. திராவிடமணி

62. முனைவர் க. பொன்முடி

63. திரு. உ. மதிவாணன்

64. திரு. த. மனோ தங்கராஜ்

65. திரு. கே.எஸ். மஸ்தான்

66. டாக்டர் இரா. மாசிலாமணி

67. திரு. பி. முருகன்

68. திரு. கே.எஸ். மூர்த்தி

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி–6

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

69. திரு. மு.க. ஸ்டாலின்

70. திரு. துரைமுருகன்

71. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்

72. திரு. ப. அடலரசன்

73. திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்

74. திருமதி பி. கீதா ஜீவன்

75. திருமதி பெ. சித்தாபதி

76. டாக்டர் (திருமதி) பூங்கோதை

77. திருமதி ம. வரலட்சுமி

78. திரு. நா. கார்த்திக்

79. திரு. க. கார்த்திகேயன்

80. திரு. ப. கார்த்திகேயன்

81. திரு. மு.பெ. கிரி

82. திரு. என். சுரேஷ் ராஜன்

83. திரு. டி. செங்குட்டுவன்

84. திரு. ஐ.பி. செந்தில்குமார்

85. திரு. கு.க. செல்வம்

86. திரு. சு. புகழேந்தி

87. திரு. கே.ஆர். பெரியகருப்பன்

88. திரு. இ. பெரியசாமி

89. திரு. பெரியண்ணன் அரசு

90. திரு. எ. ராமர்

91. திரு. டி.ஆர்.பி. ராஜா

92. திரு. வி.ஜி. ராஜேந்திரன்

93. திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்

94. திரு. வாகை சந்திரசேகர்

95. திரு. எ.வ. வேலு

96. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்

97. திரு. செ. ஸ்டாலின் குமார்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

"மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப்பட்டன:

தீர்மானத்தை ஆதரித்தோர்– 97

தீர்மானத்தை எதிர்த்தோர் – 122
(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நடுநிலை வகித்தோர் – எவருமில்லை

தீர்மானத்தை எதிர்த்தோர் அதிகமாக இருப்பதால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு. துரைமுருகன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானம் தோல்வியுற்றது என அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[பேரவைத் துணைத் தலைவர்] [2017 மார்ச் 23

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் என்ற முறையில் என் கருத்துகளையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டராகப் பணியாற்றி, பல்வேறு பதவிகளை வகித்தவர். மிகுந்த மூத்தவர். பேரவைத் தலைவர் பதவிக்கு வந்த பின்னர் கட்சிப் பணிகளிலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக்கொண்டவர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் பணி என்பது மலர்ப் பாதையின்மேல் நடக்கின்ற பணி அல்ல. முட்கள் நிறைந்த பாதையில் பயணிக்கின்ற பணி. துக்கங்களையும், துயரங்களையும் தான் தாங்கிக்கொண்டு மலர்ந்த மகிழ்ச்சியான முகத்தோடு இந்த அவையை சிறப்பாக நடத்திச் செல்கின்ற தன்மை படைத்தவர் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கண்ணியமிக்க இந்தப் பேரவையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்தில் மூன்று முறையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்தில் மூன்று முறையும் ஆக ஆறு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அற்புதமான அனுபவம் பெற்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணியமிக்க இந்தப் பேரவையில் ஜனநாயக நெறிப்படி, விதிப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைத்து விவாதங்களிலும் பங்கேற்று உரையாற்ற பெருமளவு வாய்ப்புகளும், அதிக நேரமும் வழங்கப்பட்டுள்ளது. ஆளும்கட்சி உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டிய வாய்ப்புகளைக்கூட பெருமளவுக்குக் குறைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளுக்கு அதிகமான வாய்ப்புகளை அளிக்கும் வகையில்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் செயல்பட்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆளும்கட்சி உறுப்பினர்கள் அதிகமாக இருக்கும்போது, பாராளுமன்ற நெறிமுறைகளின்படி, விதிதாச்சார முறைப்படி எங்களுக்கு வாய்ப்புகள் அதிகம் தரப்பட வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தாலும்கூட, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே பேச அதிகமான வாய்ப்புகளும், அதிக நேரமும் ஒதுக்கப்பட்டது. இது, அவருக்கு ஜனநாயகத்தின்மீது உள்ள அதிக ஈடுபாட்டினைக் காட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 'ஜனநாயக நாட்டில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழக

[*2017 மார்ச் 23*] [பேரவைத் துணைத் தலைவர்]

மக்களின் உயிரிலும், உணர்விலும் இரண்டறக் கலந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கேற்ப, தமிழகத்தின் வளர்ச்சியே தம் வாழ்வின் இலட்சியம் என்று வாழ்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் எண்ணங்களுக்கு வலுவூட்டுகின்ற வகையில், தமிழக மக்களின் நலனுக்காக தவ வாழ்வு வாழ்ந்து, தன் வாழ்வை அர்ப்பணித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கனவை நனவாக்கிட, (மேசையைத் தட்டும் ஒலி) *தொடர்ந்து பாடுபடும், வரலாற்றுச் சிறப்புகளையும், பாரம்பரிய பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட தனிச் சிறப்புமிக்க இந்தப் பேரவை, ஜனநாயக நெறிமுறைகளைப் பாதுகாத்து இந்திய திருநாட்டுக்கே ஒரு முன்னோடிப் பேரவையாகத் திகழ நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணியாற்ற வருமாறு அன்போடு கேட்டு, அமர்கிறேன்.* (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான தளபதி அவர்கள், . . .* (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *3–6–2016 அன்று நான் பேரவைத் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றபோது, என்னை வாழ்த்திப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், "எல்லோரும் உணர்ச்சிவசப்பட்டாலும், கட்சி மாச்சரியங்களைப் புறந்தள்ளி, அனைவரையும் ஒருசேர நினைத்து நடுவராக இருந்து தீர்ப்பளிக்கும் பணியினை தாங்கள் நடுநிலையோடு ஆற்றுவீர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை" எனக் குறிப்பிட்டதற்கு* (மேசையைத் தட்டும் ஒலி) *மாறாக ஒரு துளியேனும் விலகிச் செயல்படக் கூடாது என்பதைச் சிந்தையில் நிறுத்திச் செயல்படுபவன் நான்.* (மேசையைத் தட்டும் ஒலி) *இன்றைக்கு என்னை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ற*

[பேரவைத் தலைவர்] [2017 மார்ச் 23

தீர்மானம் தோல்வியுற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு பேரவைத் தலைவர் பதவியில் இருக்கும் எனக்கு யார் மீதும் தனிப்பட்ட முறையில் விருப்பு, வெறுப்பு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவை இயற்றிக் கொடுத்த விதிகளின்படி, மரபின்படியே நான் செயல்பட்டு வருகிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஆதரவு அளித்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, எனக்கு எதிராக வாக்களித்தாலும், அவர்களுடைய கருத்துகளையும் நான் ஏற்று, நிச்சயமாக இந்த அவையை நடுநிலையோடு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு வழங்கிய அறிவுரைப்படி, தொடர்ந்து நடத்துவேன் என்பதை உங்களுக்கு நான் என்னுடைய உறுதிமொழியாகத் தெரிவித்து, அடுத்த அலுவல்களுக்குச் செல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்மீது எங்களுடைய தலைவர் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்தது, ஏதோ நாங்கள் இதில் வெற்றி பெறுவோம் என்பதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. துரைமுருகன்: காரணம், எங்கள் எண்ணிக்கை எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) ஆனால், எதற்காகக் கொண்டு வந்தோம் என்று சொன்னால், தங்களைப்பற்றி தங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பாராட்டியதையெல்லாம் இப்பொழுது தாங்கள் படித்தீர்கள். நான் அதைக் குறை சொல்லவில்லை; பாராட்டியிருக்கிறார்கள். அவர் உங்களுடைய கட்சித் தலைவர். அதனால் உங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். எங்களுடைய ஆசையெல்லாம். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

2017 மார்ச் 23]

திரு. துரைமுருகன்: *தாங்கள் இந்தச் சபையை நடத்தி, இந்தச் சபையின் term முடிகிறபொழுது, எப்படி முன்னாள் முதலமைச்சர் உங்களைப் பாராட்டினாரோ, அப்படி நீதி தவறாமல், எங்களுக்கு நியாயம் வழங்கி, நாங்கள் பாராட்டுகிற அளவிற்கு நீங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து உங்களுக்கு * வேண்டுகோள் விடுக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

3. கவன ஈர்ப்பு

(அ) கொளத்தூர் தொகுதி, மின் விபத்தில் உயிரிழந்த திருமதி A. சந்திரா குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அது முடிந்துபோய்விட்டது. அதை விட்டுவிடுங்கள். அது வேண்டாம், வேண்டாம், முடிந்துபோய்விட்டது. விட்டுவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அதை வற்புறுத்த வேண்டாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொளத்தூர் தொகுதியைச் (குறுக்கீடுகள்) சார்ந்த திருமதி A. சந்திரா 13–3–2017 அன்று மின் விபத்தில் உயிரிழந்தது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்பொழுது ** என்று ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அதை வாபஸ் வாங்கினால் நன்றாக இருக்கும். (குறுக்கீடுகள்) ** என்றே சொல்லிவிட்டீர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வார்த்தையை 'வேண்டுகோள் விடுக்கிறோம்' என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'வேண்டுகோள் விடுக்கிறோம்' என்று மாற்றப்படுகிறது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் என்னவென்று சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச எழுந்தவுடன் எனக்கு வரவேற்பு தந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபொழுது முன்னர் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளில் ** என்று அவர் பேசியதை நீங்கள் நீக்கினீர்கள். அதை இப்பொழுது அவையில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள். ஏற்கெனவே நான் அவையில் நீக்கிய வார்த்தைகள் இருந்தால் இப்பொழுதும் அவைக் குறிப்பில் ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) விடுங்கள். அதோடு விட்டுவிடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

3. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

(அ) கொளத்தூர் தொகுதி, மின் விபத்தில் உயிரிழந்த திருமதி A. சந்திரா குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் வர்தா புயலின்போது மிகவும் பழுதடைந்த மின் கம்பங்களும், மின் கம்பிகளும் உடனடியாக மாற்றப்பட்டுவிட்டன.

தொடர் ஆய்வில் கண்டறியப்படும் பழுதடைந்த மின் கம்பங்களும், மின் கம்பிகளும் உடனுக்குடன் மாற்றப்பட்டு வருகின்றன.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூம்புகார் நகர் பகுதியில் சுமார் 80 விழுக்காடு மின் விநியோகம் மேலே செல்லும் தாழ்வழுத்த மின் கம்பிகள் (Over Head lines) மூலம் செய்யப்பட்டு வருகிறது.

இச்சூழ்நிலையில், பூம்புகார் நகர் முதல் குறுக்குத் தெருவில் எதிர்பாராத வகையில் மின் கம்பி அறுந்து விழுந்ததால் மின் விபத்து ஏற்பட்டது.

கொளத்தூர் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளை அகற்றி புதைவடமாக (Under Ground Cables) படிப்படியாக மாற்றி அமைக்க ரூ.2,567 கோடி செலவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேல்நிலை மின் கம்பிகளை புதைவடமாக மாற்றுவதன்மூலம் மின் விபத்துகள் தவிர்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

[2017 மார்ச் 23

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். 5–8–2016 அன்று பேரவையின் கேள்வி நேரத்தில் ஒரு துணைக் கேள்வியை நான் கேட்டேன். கொளத்தூர் தொகுதியிலுள்ள குடியிருப்புப் பகுதிகளின் மேலே செல்லக்கூடிய தாழ்வழுத்த மின் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை அன்று நான் எடுத்து வைத்தேன். அதற்கு மின் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, அழுத்தந், திருத்தமாக ஒரு நல்ல செய்தியை என்னிடத்தில் இந்த அவையில் எடுத்துச் சொன்னார்கள். வரவிருக்கக்கூடிய மழைக் காலத்திற்குள் பூமிக்கடியிலே, மின் கம்பிகளை புதைக்கின்ற பணியை முடித்துத் தருவதாக அவர் உறுதி தந்தார்.

என்னுடைய கொளத்தூர் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 37 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தாழ்வழுத்த மின் கம்பி வடம் சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி 2,567 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் அதிகமாகக்கூட கேட்கவில்லை, நீங்கள் விவர அறிக்கையில் 2,567 கோடி ரூபாய் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். அதில் 0.10 சதவிகிதம் தொகையை என்னுடைய கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு ஒதுக்கினாலே இந்தப் பணி நிச்சயமாக முழுமையடைந்து விடும். நீங்கள் ஒதுக்கி, அந்தப் பணி முழுமையடைந்திருந்தால், சந்திரா போன்ற விலை மதிப்பற்ற மனித உயிர்களை நிச்சயமாக காப்பாற்றியிருக்க முடியும். அதேவேளையில், உயிரிழந்த சந்திராவின் குடும்பத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் இழப்பீடுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்குவதாக அறிவித்து, அதைக் கொடுத்திருக்கிறது. ஆனால், அந்தக் குடும்பம் அந்தத் தொகையை வாங்க மறுத்திருக்கிறது. காரணம், அந்தத் தொகை அவர்களுக்குப் போதவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். முழுக்க முழுக்க அரசாங்கத்தினுடைய முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தினால்தான் இந்த உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, மின் வாரியம் தரக்கூடிய இந்த இரண்டு இலட்சம் ரூபாயையும் சேர்த்து, அரசின் சார்பில் பத்து இலட்சம் ரூபாய் இழப்பீடுத் தொகையாகத் தரவேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய தொகுதியான கொளத்தூர் பகுதியில், சந்திரா என்ற பெண் இறந்தது குறித்து, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். மேலும், அவர் கேள்வி நேரத்தில் துணைக் கேள்வி கேட்டபோது, U.G.C. புதைவட கேபிள் போட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். நான் அதை மழைக் காலத்திற்குள் முடித்து தருகிறேன் என்று சொன்னேன். உண்மைதான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், C.P.F.C.–யிலிருந்து நிதியுதவி கிடைப்பதற்கு சிறிது காலதாமதமாகிவிட்டது. இப்போதுதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், 2,567 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரில் சந்தித்ததன் தொடர்ச்சியாக மத்திய மின் துறை அமைச்சர் அவர்களை நான் சந்தித்தேன். சென்ற வாரம்தான் 2,567 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள். சென்னையை தவிர்த்து, சென்னை விரிவாக்க பகுதிகளில் இதுபோன்று புதைவடக் கம்பிகளைப் போடவேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கொளத்தூர் பகுதி முதன்மையாக எடுத்துக்கொள்ளப்படும். ஏற்கெனவே ஆய்வில் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணி முதன்மையாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அடுத்ததாக, மின் வாரியத்தின் சார்பாக, மின் விபத்தினால் இறந்தவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும், இதுபோன்ற விபத்துகள் நடக்கின்றபோது, உடனடியாக மின்சார வாரியம் இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்குகிறது. அந்த இரண்டு இலட்சம் ரூபாய் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கிறதா, இல்லையா என்பது வேறு விஷயம். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இழப்பீட்டுத் தொகை 25,000 ரூபாயாகத்தான் இருந்தது. யாருடைய ஆட்சியையும் நான் தவறாகச் சொல்லவில்லை. 25,000 ரூபாயாகயிருந்த இழப்பீட்டுத் தொகையை மாண்புமிகு

[திரு. பி. தங்கமணி] [2017 மார்ச் 23

அம்மா அவர்கள்தான் 2013 ஆம் ஆண்டு, மின் விபத்துகளினால் உயிரிழப்பு ஏற்படும்போது, அவர்களுடைய குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு இலட்சம் ரூபாயை நாங்கள் வழங்கிக்கொண்டிருக்கிறோம். இப்போது இறந்த சந்திராவின் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயை, அவர் இறந்த நாளிலிருந்து நேற்று வரை கொண்டு சென்றபோது, அவர்கள் அந்தத் தொகையை வாங்க மறுத்துவிட்டார்கள். காரணம், நாங்கள் வழக்குப் போட்டு இன்னும் அதிகமாக இழப்பீட்டுத் தொகையை பெறுவோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதில் எந்தத் தடையும் கிடையாது. அவர்கள் வழக்குப் போட்டு, மின்சார வாரியத்திலிருந்து அதிக இழப்பீட்டுத் தொகை அவர்களுக்குக் கிடைக்கும் என்று சொன்னால், இரண்டு இலட்சம் ரூபாயை கழித்துக்கொண்டு, மீதித் தொகையை மின்சார வாரியம் கொடுக்கும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. சந்திராவை இழந்த அந்தக் குடும்பம், மின்சார வாரியம் கொடுக்கின்ற அந்தத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உதவி செய்ய வேண்டும். அவர்கள் வழக்கு போடட்டும் எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

பிற்பகல் 12–45

சரியான பராமரிப்பு இல்லை என்ற ஒரு வார்த்தையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். கிட்டத்தட்ட சென்னை மாநகராட்சியில் மட்டும்— புதைவடக் கம்பிகள் உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் போடப்பட்டிருக்கின்றன; அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் போடப்பட்டிருக்கின்றன—மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், 4,684 கிலோ மீட்டர் அளவிற்குப் புதைவடக் கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. எஞ்சிய பகுதிகளுக்கு புதைவடக் கம்பி போட வேண்டுமென்பதற்காகத்தான் மத்திய அரசிடமிருந்து நிதி கேட்கப்பட்டிருக்கின்றது. பூம்புகார் நகர் பகுதியில் கிட்டத்தட்ட 80 கிலோ மீட்டர் நீளத்திற்கு மின்சாரம் உயர் மின்னழுத்த வழியிலே overhead line–லே வந்துகொண்டிருக்கிறது. 12–12–2016 அன்று ஏற்பட்ட வர்தா புயலால் மின்சார வாரியம் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. நீங்கள் நன்றாக நினைத்துப் பார்க்க வேண்டும். 12 ஆம் தேதியன்று மதியம் 1 மணிக்கு ஆரம்பித்த புயல் 7–00 மணிக்கு முடிகின்றது.

2017 மார்ச் 23] [திரு. பி. தங்கமணி]

அப்போது சென்னையில் பாதுகாப்பு கருதி மின் விநியோகத்தை நிறுத்தி வைத்து, கிட்டத்தட்ட 7 மணி, 8 மணி அளவிலே 30 சதவிகிதம் அளவிற்கு மின்விநியோகத்தை நாங்கள் கொடுத்து விட்டோம். அதற்குப் பின்னால், அடுத்த நாள் சென்னை மாநகராட்சி முழுவதும் 70 சதவிகிதம் மின்விநியோகத்தை நாங்கள் கொடுத்து விட்டோம். மூன்றாவது நாள் 100 சதவிகித மின்சாரத்தை நாங்கள் கொடுத்து விட்டோம். ஆனால், இந்த அளவுக்குச் சேதமடைந்த விசாகப்பட்டினத்தை எடுத்துக் கொண்டீர்களென்று சொன்னால், மின்சாரத்தை பத்தாவது நாள்தான் முதன்முதலாகப் பார்த்தார்கள். 3 நாட்களிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முழுமையாக மின்சாரம் வழங்கியிருக்கிறது என்றால், எந்த அளவிற்குப் பராமரிப்புப் பணிகள் நடந்திருக்கும், எந்த அளவிற்கு வேகமாகப் பணிகள் நடைபெற்றிருக்கும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும், இந்த overhead line*–ஆக இருப்பதை மழைக்காலம் வருவதற்கு முன்பாகவே, புதைவடமாக மாற்ற ஏற்கெனவே நான் சட்டமன்றத்திலே சொல்லியிருந்தேன். உடனடியாக* outsourcing *முறையில், எங்கெங்கெல்லாம் பாதுகாப்பில்லாமல் இருக்கின்றனவோ, பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றன. அந்தவகையிலே உங்கள் பகுதியிலும் அந்தப் பணிகள் நடைபெற்றன. எதிர்பாராதவிதமாக ஏதாவது விபத்து நடைபெற்று விடுகின்றது. அதுபோன்ற விபத்துகள் எதிர்காலத்திலே நடைபெறக் கூடாது என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் எண்ணம்.* Under ground cable *போடுவதற்கு இப்போது மத்திய அரசிடமிருந்து நிதி வந்திருக்கிறது; அதை பயன்படுத்த உள்ளோம்.*

இந்த நிகழ்வு என்பது ஏதோ இப்போது மட்டும் நடைபெறுகின்ற நிகழ்வு அல்ல. விபத்து என்பதை யாரும் தடுக்க முடியாது. உங்களுடைய ஆட்சிக் காலத்தையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் விபத்து அதிகம் நடந்திருக்கிறது. நான் குறையாகச் சொல்லவில்லை. கிட்டத்தட்ட 7 இலட்சம் கிலோ மீட்டர் அளவுக்கு ஒயர்கள் இருக்கின்றன. அதிலே எங்காவது ஒரு விபத்து ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நடைபெறாமல் இருப்பதற்கு நாங்கள்

[திரு. பி. தங்கமணி] [2017 மார்ச் 23

உரிய நடவடிக்கை எடுப்போம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவர்களிடத்திலே இந்த நிவாரணத் தொகையை வாங்கிக் கொள்ளச் சொல்ல வேண்டும். வழக்கைத் தொடர்ந்து அதிக நிதி கேட்டாலும், வழக்கில் என்ன முடிவாகிறதோ அந்த நிதியைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்றும் சொல்லிக்கொள்கிறேன். கூடியவிரைவில் புதைவடக் கம்பிகளாகப் போடுவதற்கு உடனடியாக டெண்டர் விடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் தொகுதி உள்ளிட்ட விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரத்தில் இதுபோன்ற மனித உயிரிழப்புகள் உயர் மின்னழுத்தம் காரணமாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 11,000 கிலோ வாட், 33,000 கிலோ வாட் மின் கம்பிகளாலும் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. கொளத்தூர் 65-வது வட்டம், வி.வி. நகர் பகுதியில் 10 வயது கீர்த்தனா என்ற சிறுமியும், இந்திரா நகர் பகுதியில் 37 வயது மதிக்கத்தக்க இளையராஜா என்பவரும் இதற்கு முன்பே உயிரிழந்திருக்கிறார்கள். இது தொடர்ந்து பல பகுதிகளில் நடந்தவண்ணம் இருந்து கொண்டிருக்கின்றது. தடையில்லா மின்சாரம், சீரான மின்சாரம் இவை முக்கியமானவைதான். ஆனால், நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, இவற்றோடு மனித உயிர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய மின் விநியோகத்தை ஏற்படுத்தித் தர இந்த அரசு முன்வர வேண்டும். விவர அறிக்கையிலே, 2,567 கோடி ரூபாயை முழுமையாகப் பயன்படுத்தப் போகிறோம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இந்தத் தாழ்வழுத்த மற்றும் உயரழுத்த மின் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்ற, இந்த ஆண்டிற்குள் போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் நான் ஏற்கெனவே சொன்னேன். இப்போதுதான் நிதி கிடைத்திருக்கிறது. கடந்த வாரம்தான் மத்திய மின்துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்கின்றபோது, அதற்குண்டான நிதியைக் கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை. இனிமேல்தான் tender process. முக்கியமான பகுதியாக இருக்கின்ற கொளத்தூர் பகுதி, இந்தப் பக்கம் மயிலாப்பூரை அடுத்திருக்கின்ற திருவான்மியூர் பகுதி என எல்லாப் பகுதிகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆக, அந்த அடிப்படையிலே கூடிய விரைவில் அடுத்த மழைக் காலத்திற்கு முன்பாக முடிப்பதற்குண்டான முயற்சியை மின்சார வாரியம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. தகவல் கோரல்

(அ) கழுமரம், திருக்கோவிலூர் தொகுதி, தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ வீரர் திரு. கே. சங்கர் வாரிசுதாரருக்கு விடு மற்றும் வேலை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, என்னவென்று சொல்லுங்கள்.*

பிற்பகல் 12–50

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11–3–2017 அன்று இராணுவத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த 12 பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதில் திருக்கோவிலூர் தொகுதி, கழுமரம் கிராமத்தைச் சார்ந்த 36 வயதேயான தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த கே. சங்கர் என்பவரும் ஒருவர். அவருடைய குடும்பத்தில், அவருடைய மறைவிற்குப் பிறகு, அவருடைய துணைவியார் 30 வயதானவர், 3 வயதில் ஒரு குழந்தையும், 7 மாதத்தில் ஒரு குழந்தையும் இருக்கிறார்கள். நானும், இங்குள்ள என் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அங்கு நடைபெற்ற அஞ்சலியில் கலந்துகொண்டோம். அந்தக் குடும்பம் மிகவும்*

[முனைவர் க. பொன்முடி] [*2017 மார்ச் 23*

ஏழ்மையான குடும்பம், கூரை வீட்டில் வசிக்கிறார்கள். எனவே, அவருடைய குடும்பத்திற்கு தாழ்த்தப்பட்டோர் வீட்டுவசதி வழங்கும் திட்டத்தின் மூலமாக ஒரு வீடும், பி.எஸ்சி., பி.எட்., படித்திருக்கிற மனைவி எழிலரசிக்கு உடனடியாக அரசு வேலைவாய்ப்பும் வழங்க முதல்வர் அவர்கள், இந்த அரசு முன்வருமா என்று கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டீஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் நக்சல் தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த, தமிழ்நாட்டைச் சேர்ந்த விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கழுமரம் கிராமத்தைச் சேர்ந்த, திரு. கதிர்வேல் என்பவரது மகன், மத்திய ரிசர்வ் காவல் படை* CRPF *துணை ராணுவ வீரரான, திரு. கே. சங்கர் என்பவர் 11–3–2017 அன்று வீரமரணம் அடைந்தார். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த துணை ராணுவ வீரர் திரு. கே. சங்கர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் நான் 12–3–2017 அன்று தெரிவித்துக்கொண்டதுடன், உடனடியாக திரு. கே. சங்கர் அவர்கள் குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் வழங்க உத்தரவிட்டேன். அன்றையதினமே, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அன்னாரது மனைவி திருமதி எழிலரசி அவர்களிடம் வழங்கினார்கள். பணியின்போது உயிர்நீத்த அல்லது உடல் ஊனமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் தீவிரவாதிகள், எதிரிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட அல்லது ஊனமடைந்த எல்லைப் பாதுகாப்புப் படை, BSF வீரர்களின் வாரிசுகளுக்கும் தமிழக அரசால் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. அதைப்போலவே, தீவிரவாதிகள் மற்றும் எதிரிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட அல்லது ஊனமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய ரிசர்வ் காவல் படை, CRPF உள்ளிட்ட மற்ற துணை ராணுவப் படை வீரர்களின் வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் பணி*

2017 மார்ச் 23] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நியமனம் வழங்குவது குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் பயணித்து வரும் இந்த அரசின் பரிசீலனையில் ஏற்கெனவே உள்ளது. இதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள் குறிப்பிட்ட திரு. கே. சங்கர் அவர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட, தீவிரவாதத் தாக்குதலில் பலியான இராணுவ வீரரின் வீடு குடிசையாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அங்கு வந்திருந்தார்; அப்போது மாவட்ட ஆட்சித் தலைவரும் இருந்தார். மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை வைத்தார். இறந்த இராணுவ வீரரின் குடும்பத்தாராலும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக வீடு வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியருக்கு அப்போதே உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) பழனி தொகுதி, மர்ம காய்ச்சலால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

***திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6–3–2017, திங்கட்கிழமையன்று பழனி நகரம், கதவு எண் 175, 4–வது வார்டுக்குட்பட்ட பெரியப்பா நகர் பகுதியைச் சேர்ந்த சுமார் 46 வயது மதிக்கத்தக்க சுமதி என்கிற பெண்மணி . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செந்தில்குமார், சுருக்கமாகக் கேளுங்கள். தற்போது மணி 12–54 ஆகிவிட்டது. சுருக்கமாகச் சொல்லுங்கள். என்னால் நிகழ்ச்சி நிரலிற்குள் செல்ல முடியவில்லை.*

[2017 மார்ச் 23

திரு. ஐ.பி. செந்தில்குமார்: பன்றிக் காய்ச்சலால் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இறந்திருக்கிறார். அவருக்கு Coimbatore Medical College Hospital, Department of Micro Biology–ல் பன்றிக் காய்ச்சல் இருந்தது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியின் சுகாதாரமற்ற சூழ்நிலைதான் அவர் இறந்ததற்குக் காரணமாக இருந்தது. குறிப்பாக அதிகமான பன்றிகள் அந்தப் பகுதியில் சுற்றித் திரிகின்ற காரணத்தால் அங்கு நிறைய பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இறந்த சுமதி என்பவருடைய குடும்பத்திற்கு நம்முடைய அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

பழனி நகரம், கதவு எண் 44, பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, 12 ஆவது வார்டில் வசிக்கும் முரளி–முத்துலட்சுமி ஆகியோரது ஐந்தரை வயது மகள் அனன்யா அன்பரசி கடந்த 20–3–2017 அன்று மர்மக் காய்ச்சலால் கோவை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்திருக்கிறார். பழனி தொகுதியைப் பொறுத்தளவில் பழனி நகரம் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் இன்றைக்கு சுகாதாரமற்ற சூழ்நிலையால் மர்மக் காய்ச்சல் பரவி வருகிறது. குறிப்பாக பழனி ஒன்றியத்திற்குட்பட்ட ஆ. களையம்புத்தூர் ஊராட்சி, 2–வது வார்டில் மருது–19 வயது, மாலதி–17 வயது, பிரியங்கா–22 வயது, சந்தானலட்சுமி–17 வயது, ஆகியோர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள். இவ்வளவு சூழ்நிலையிலும் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் படித்துக்கொண்டே இருந்தால் எப்படி? (குறுக்கீடு) என்னவென்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் சொல்லுங்கள் அவ்வளவுதான்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: அதேபோன்று 1–வது வார்டு, நகராஜ்–35 வயது, ஹரிஸ்ராஜ்–20 வயது, அனுசியா–14 வயது ஆகியோர் இன்றைக்குக் கடுமையான மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, கோவை மருத்துவமனையில் மருதும், மாலதியும், மதுரை மருத்துவமனையில் அனுசியாவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே சுகாதாரமற்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால்தான் இந்தப் பாதிப்புகள் உருவாகியிருக்கின்றன. எனவே, அரசு இவற்றைக்

2017 மார்ச் 23] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

கருத்தில்கொண்டு, இறந்த அந்த இரண்டு சகோதரிகளுடைய குடும்பத்திற்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கி அவர்களது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்.

அதேபோல இன்றைக்கு சுகாதாரமற்றிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதைக் களைவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கெனவே அரசு மருத்துவமனையில் டெங்கு மற்றும் பன்றிக் காய்ச்சல்களுக்கு சிகிச்சைஅளிக்க இயங்கி வந்த தனிப்பிரிவை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். அமைச்சர் புரிந்துகொண்டுவிட்டார். அவர் சொல்வார், உட்காருங்கள். நேற்று நீங்கள் கொடுத்த பேப்பரை அமைச்சரிடம் கொடுத்துவிட்டேன். உட்காருங்கள். நீங்கள் எழுதிக் கொண்டு வந்ததையெல்லாம் படிக்க முடியாது திரு. செந்தில்குமார். (குறுக்கீடு) உட்காருங்கள் என்றால் உட்கார வேண்டும். இதற்கு மேலே அனுமதிக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே டெங்கு உள்ளிட்ட அனைத்து தொற்று நோய்களையும், (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதி இல்லை. நான் வாய்ப்பு கொடுத்துவிட்டேன். அவர் படித்துக்கொண்டே இருப்பதற்கு நேரமில்லை. அடுத்த நிகழ்ச்சி நிரலுக்குப் போக வேண்டும். வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) ஒரு நிமிடம்கூட இல்லை. வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் டெங்கு உள்ளிட்ட அனைத்து தொற்று நோய்களையும் கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முறையான, முழுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது. தொடர் கண்காணிப்பிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், துறையும் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினாலே (குறுக்கீடு)*

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு. துரைமுருகன், நான் கூடாக இல்லை. நன்றாகவே இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் உடம்பை பார்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: இன்றைக்கு முழுமையாக நோய் தொற்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இறுதியாகக் குறிப்பிட்ட, (குறுக்கீடு) உங்களுக்காகத்தான் இதை எடுத்துக்கொண்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செந்தில்குமார், நீங்கள் ஒரு மணி நேரம் நின்றால்கூட வாய்ப்பு இல்லை. நான் உங்களுக்கு கொடுத்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்தவில்லை. அனுமதி இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடியுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, களையம்புத்தூர் ஊராட்சியில் 14 ஆம் தேதி முதல் 16 பேருக்கு காய்ச்சல் அறிகுறி ஏற்பட்டது. உடனே எங்களுடைய Rapid Response Team– விரைவு குழுக்கள் சம்பவ இடத்திற்குச் சென்றனர். அவர்களால் 10 பேர் பழனி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். 7 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்கள். 2 பேருக்கு தொடர்ந்து அங்கே சிகிச்சை வழங்கப்படுகிறது. உடனடியாக எங்களுடைய பழனி சுகாதாரக் குழு துணை இயக்குநர் தலைமையில் ஆய்வு செய்ததில் water contamination–ஆல் ஏற்பட்ட காய்ச்சல் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, பயப்பட வேண்டிய அவசியமோ, அச்சமோ தேவையில்லை என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி 12–வது வார்டுக்குட்பட்ட அன்பரசியை பொறுத்தவரையிலும் அவர் ஏற்கெனவே பழனியிலே காய்ச்சலுக்கு வெளி நோயாளியாக சிகிச்சைப் பெற்றார். பின்னர், அவர் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய வழியிலே வலிப்பு மற்றும் புரை ஏறி மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்துவிட்டதாக பழனி துணை சுகாதார இயக்குநர் அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். அதேபோல, பழனி துணை இயக்குநருக்கும், பழனி நகர் நல அலுவலர் Municipal Health Officer–க்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. குழுக்கள் அங்கே காண்காணிப்பிலே

2017 மார்ச் 23] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

இருக்கின்றன. நோய்த் தொற்று என்பது அனைவருக்குமே வரும், cluster of fever அங்கு கிடையாது. நோய் தொற்று என்பதும் அங்கு இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முழு கண்காணிப்பிலே இருக்கிறது. தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு தொடர் கண்காணிப்பிலே இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) திருவண்ணாமலை, செங்கம் சாலையிலுள்ள அரசு மருத்துவமனை, கூடுதல் வசதிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு)

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) பழனி தொகுதி, மர்ம காய்ச்சலால் பாதிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன் நீங்கள் கேளுங்கள்.

பிற்பகல் 1-00

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்கிறேன். ஊரிலே எல்லோருக்கும் பன்றிக் காய்ச்சல் வருகிறது என்கிறார்கள். சரி, வரட்டும். காய்ச்சல் வந்தால் ஒன்றும் செய்ய முடியாது. மருந்து கொடுப்பதில் என்ன அவ்வளவு சிக்கனம்? அதை எல்லா கடைகளிலும் கொடுத்தால் என்ன? சாதாரண bunk கடைகளிலும் கொடுத்தால் என்ன? எல்லா மெடிக்கல் கடைகளிலும் கொடுத்தால்

[திரு. துரைமுருகன்] [2017 மார்ச் 23

என்ன? அதை என்னமோ இங்குதான் வைத்துக்கொள்வோம், சில இடங்களில்தான் கொடுப்போம் என்று ஏன் restrict செய்கிறீர்கள். தலைவலி வந்தால் மருத்துவமனைக்குச் சென்று மருந்து வாங்கி சாப்பிடுகிறோம் இல்லையா? அதைப்போல பன்றிக் காய்ச்சல் வந்தால் நேரடியாக மருத்துவமனைக்குச் சென்று மருந்து சாப்பிட்டு போகிறார்கள். இதை ஏன் நீங்கள் பெரியதாக, cumbersome செய்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எந்த restriction–மே இல்லை. இன்னும் சொல்லப்போனால், Tamiflu என்ற Oseltamivir மருந்து 12 இலட்சம் நம்மிடம் கையிருப்பு இருக்கிறது. We have sufficient stock of Tamiflu and also Paediatric syrup. தனியார் மருத்துவமனைக்கும் நாம் எந்தவிதமான கட்டணமும் (குறுக்கீடு) தனியார் மருத்துவமனைக்குமே எந்தக் கட்டணமும் இல்லாமல் துணை இயக்குநர் மூலமாகக் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். எந்த restriction–ம் இல்லை. ஒருவருக்கு காய்ச்சல் வந்துவிட்டால் அவருடைய contact, அந்த street என எல்லோருக்குமே கொடுக்கிறோம். எனவே, எந்த restriction–ம் கிடையாது. நம்மிடம் தேவையான கையிருப்பு உள்ளது. பலமுறை நானும், துறைச் செயலாளர் அவர்களும் ஆய்வுசெய்து, பத்திரிகைக்கும் சொல்லியிருக்கிறோம். எங்கேயாவது கொடுக்கவில்லையென்று சொன்னால், we will take action immediately. இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

3. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

(ஆ) திருவண்ணாமலை, செங்கம் சாலையிலுள்ள அரசு மருத்துவமனை, கூடுதல் வசதிகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதித்ததற்கு முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] [திரு. எ.வ. வேலு]

"திருவண்ணாமலை, செங்கம் சாலையில் உள்ள அரசு மருத்துவமனை கூடுதல் வசதிகளுடன் திறம்பட செயல்பட வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

திருவண்ணாமலை, செங்கம் சாலையில் ஊரக நலப் பணிகள் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக 440 படுக்கைகளுடன் மருத்துவக் கல்லூரி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.

தற்போது செங்கம் சாலையில் உள்ள பழைய அரசு மருத்துவமனையானது புற நோயாளிகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சை அளிக்க 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது. தினசரி சுமார் 150 முதல் 200 புற நோயாளிகள் இதன்மூலம் பயன்பெறுகின்றனர். இது Day Care Centre ஆகவும், புற நோயாளிகள் பிரிவாகவும் 10 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது. இந்த Day Care Centre-ல் விபத்து ஏற்பட்டு காயங்களுடன் வருபவர்கள், விஷம் அருந்தி சிகிச்சை பெற வருபவர்கள் மற்றும் ஆஸ்துமா போன்ற மூச்சுத் திணறலால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக அங்கேயே அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ்மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்தத்தில் சர்க்கரையின் அளவு பார்க்கப்பட்டு உடனடியாக அங்கேயே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 மார்ச் 23

மேலும், வேங்கிக்கால் அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்ந்த சில துறைகள் செங்கம் சாலையில் உள்ள பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன.

5 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள பழைய கட்டடங்களைப் பயன்படுத்தி முதியோர்களுக்கான சிறப்பு சிகிச்சை மையம் (Full–fledged Geriatric Centre) மற்றும் மதுபோதைக்கு உட்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் (Full–fledged De–addiction Centre), Urban Health Care Centre அமைக்க உரிய கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மிகத் தலைநகரமான திருவண்ணாமலை நகரில் கிரிவலப் பாதையிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய சிலைக்குப் பக்கத்தில் சுமார் 12 ஏக்கர் நிலப் பரப்பில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள மருத்துவமனைக் கட்டடம் உள்ளது. கிட்டத்தட்ட 440 படுக்கைகள் வசதியுடன் இரண்டு அறுவை சிகிச்சை அரங்கம், I.C.U., X–ray unit, ஆய்வக வசதி, மருந்தகம் (Pharmacy) உள்ளிட்ட வசதிகளுடன் அது செயல்பட்டது. இரண்டாண்டுக் காலம் அந்த மருத்துவமனையில்தான் இந்த மருத்துவக் கல்லூரிகூட செயல்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலே புதியதாக மருத்துவக் கல்லூரி கட்டப்பட்ட பின்பு, அந்த மருத்துவக் கல்லூரி அங்கிருந்து மாற்றம் செய்யப்பட்டது. நகரின் மையப் பகுதியில் இயங்கி வந்த இந்த மாவட்ட மருத்துவமனை இன்றைக்கு சரிவர இயங்காத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனை என்பது திருவண்ணாமலை மாவட்ட மக்களுக்கு மட்டுமல்ல. மாதா மாதம் பல மாவட்டங்களிலிருந்தும், பல மாநிலங்களிலிருந்தும் கிரிவலத்திற்காக திருவண்ணாமலைக்கு வருகிறார்கள். வருகிறவர்கள் நேரடியாக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே தொலைபேசிமூலம் தொடர்புகொள்கிறார்கள். இந்த மருத்துவமனை இயங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, அவர்களுடைய அவசியம் குறித்தும் மாவட்டத்தில் இருக்கிற நகர மக்களுடைய அவசியம் குறித்தும் அந்த மருத்துவமனை சிறப்பாக நடைபெறவேண்டுமென்று தங்களுடைய துறைச் செயலாளர்,

2017 மார்ச் 23] [திரு. எ.வ. வேலு]

தலைமைச் செயலாளர், தங்களுக்கு, தங்கள் அலுவலகத்திற்கு பல கடிதங்களை நான் எழுதியிருக்கிறேன். அதோடுமட்டுமல்ல, இதுசம்பந்தமாக எங்கள் ஊரில் இருக்கிற நகர மக்களை அழைத்து 29–1–2016 அன்று அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக, எதிர்த்துக்கூட அல்ல கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு போராட்டத்தை நாங்கள் அங்கே நடத்தினோம். அங்கே மக்கள் விரும்புவது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்லவில்லை. உங்கள் தொகுதி தலைவர் அவர்கள்தான் சொல்கிறார். சுருக்கமாகச் சொல்லச் சொல்கிறார். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எ.வ. வேலு: *எனவே, அங்கே மக்கள் விரும்புவது, அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, காசநோய்ப் பிரிவு, குடும்பக் கட்டுப்பாடு பிரிவு, Dialysis, சித்த மருத்துவப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மருத்துவமனை இயங்க வேண்டும். மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட பல அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடமும் உள்ளது. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு ரூ.7 கோடி அனுமதிக்கப்பட்டு புதியதாகக் கட்டடங்கள் கட்டப்பட்ட பகுதி. ஆனால், பல அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அவற்றையும், மேற்கொண்டு சொன்ன அத்துணைத் துறைகளையும் உள்ளடக்கி, அங்கே ஒரு மருத்துவமனையைத் தொடர்ந்து செயல்படுத்தலாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமென்று சொன்னால், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எ.வ. வேலு: *நான் பேச ஆரம்பித்ததிலிருந்தே சுருக்கு, சுருக்கு என்று சொன்னால் எப்படி? நான் ஒரு நிமிடம்தான் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, அதை தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தி நடத்தலாம். D.M.E. கட்டுப்பாட்டிலிருந்து D.M.S. கட்டுப்பாட்டுக்கு பல இடங்களிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற விழுப்புரம் மாவட்டத்தில்கூட D.M.E. கட்டுப்பாட்டிலிருந்து D.M.S. கட்டுப்பாட்டுக்கு மாற்றிவிட்டார்கள். D.M.S.*

[திரு. எ.வ. வேலு] [2017 மார்ச் 23

கட்டுப்பாட்டுக்கு வந்தால் அது தாலுகா மருத்துவமனையாகச் சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதியாக இருக்கும். உங்களுடைய விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். Day Care Centre ஒன்று 10 படுக்கை வசதியுடன் இயங்குகிறது என்று அதிலே சொல்லியிருக்கிறீர்கள். 10 படுக்கை வசதிகள் இருக்கின்றன. நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஏனென்றால், நீங்கள் திறமையான அமைச்சர் என்பது எனக்குத் தெரியும். நாளைக்கே நீங்கள் வந்தால்கூட பார்க்கலாம். படுக்கை வசதிகள் இருக்கின்றன. அங்கு மருத்துவர்கள், செவிலியர்கள், உதவியாளர்கள் யாருமே கிடையாது.

பிற்பகல் 1-05

எங்களுக்காக, எங்கள் ஊர் மக்களுக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற ஆன்மிக மக்களுக்காகவும் இந்த மருத்துவமனையைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அங்கே நாளைக்குக்கூட போராட்டம் வைத்திருக்கிறார்கள். தீவிரமாகச் செயல்பட்டு, தாலுகா மருத்துவமனையாக D.M.S. கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து, அதைச் சிறப்பாக நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கோரிக்கைகளை இந்த அரசு கனிவோடு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏதோ ஒரு பெரிய பிரச்சினை என்பதுபோல ஒரு தோற்றத்தை தயவு செய்து தங்கள் பேச்சால் ஏற்படுத்தாதீர்கள். திருவண்ணாமலைக்கு அரசினுடைய சார்பிலே புதிய மருத்துவக் கல்லூரி 500 படுக்கை வசதிகளுடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு நாளைக்கு 3 ஆயிரம் வெளி நோயாளிகள் மற்றும் ஆயிரம் உள் நோயாளிகள் வருகிறார்கள். அனைத்துப் பிரிவுகளும் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்ட இடத்தில் நான்கு பிளாக்குகள் இருக்கின்றன. செங்கம் சாலையில் பிரதான இடத்தில் ஒரு

2017 மார்ச் 23] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

பிளாக் இருக்கிறது. அந்த பிளாக்கைத்தான் நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்கிறீர்கள். இந்த மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு முன்னாலே ஏற்கெனவே செயல்பட்ட பழைய District Headquarters Hospital–ஐத்தான் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்த இடமும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதுகுறித்துதான் இப்போது அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். அங்கு Day Care Centre இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், பெளர்ணமி பூஜைக்காக நிறைய பக்தர்கள் வருகிறார்கள். தீபம்போது நிறைய பக்தர்கள் வருகிறார்கள். எப்பொழுதெல்லாம் மக்கள் அதிகமாகக் கூடுகிறார்களோ அப்பொழுதெல்லாம் மருத்துவர்களையும், செவிலியர்களையும் கூடுதலாக நியமித்து, 108 ஆம்புலன்ஸ் வசதியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். Routine ஆக access காரணமாக அந்த மருத்துவமனைக்கே சென்று பழக்கப்பட்ட நோயாளிகள் இருக்கிறார்கள்; மக்கள் இருக்கிறார்கள். ஆக அவர்களுடைய வசதிக்காகவும், sentiment அடிப்படையிலும் தொடர்ந்து அந்த மருத்துவமனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், மூன்று இடங்களில் full–fledged Geriatric Centre, De-addiction Centre, Urban Health Care Centre தொடங்குவதற்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தக் கட்டடங்களை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. தாங்கள் குறிப்பிட்ட கருத்துகளையும் ஏற்று என்னென்ன வசதிகளை அந்தப் பழைய கட்டடத்தில் ஏற்படுத்த முடியுமோ அவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது. இதிலே போராட்டம் வேண்டாம். போராடுவதற்கு எந்தவிதமான அவசியமும் எழவில்லை. ஏற்கெனவே அது பழைய கட்டடம், தேவைப்படுகின்ற பிரிவுகளைத் துவக்குவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. எனவே, அங்கே போராட வேண்டிய நிலையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கேட்கட்டும். நேரம் இல்லை. இப்போது ஒரு மணியாகிவிட்டது. (குறுக்கீடு) நான் இன்னொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு)

[பேரவைத் தலைவர்] [2017 மார்ச் 23

தினமும்தான் கேட்கிறீர்கள். கேட்கிறேனா என்று சொல்கிறீர்களே? மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துவிடுகிறேன். பிறகு நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, சொல்லுங்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாகக் கட்டப்பட்டிருக்கிற மருத்துவக் கல்லூரி அனைத்து வசதிகளோடு நடைபெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிய மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டது உண்மைதான், வந்திருப்பது உண்மைதான். ஆனால், அங்கு இருக்கிற நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். Neuro, Nephro, Plastic Surgery உடல்கூறு போன்ற பிரிவுகளில் பேராசிரியர்கள் இல்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். டாக்டர் பணியிடங்கள் 50, Casualty Medical Officer 2, Microbiology Doctor 4, Para Medical Staff 150, மருத்துவப் பணியாளர்கள் shift ல் இருப்பவர்கள் 92, Lab Technician 8, Operation Theatre Technician 8, சமையலர் 5 பணியிடங்களும் MRI Scan, Cath Lab, Imventilator 5 மற்றும் உபகரணங்களும் இல்லை. மருத்துவத் துறையில் இருக்கிற மாணவர்கள், என்னைப் பார்த்து 'அமைச்சர் அவர்கள் பக்கத்திலே இருக்கிறார் போய்ச் சொல்லுங்கள்' என்று சொல்கிற காரணத்தினால் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடுமட்டுமல்ல, அங்கே குடிநீர்ப் பஞ்சம் தொடர்ந்து இருக்கிறது. இப்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் அல்ல. தொடர்ந்து அங்கே குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே லாடவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டு மானியக் கோரிக்கையில் பேசுவதுமாதிரி பேசினீர்கள் என்றால் எப்படி நான் சபையை நடத்துவது?

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே லாடவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் சார்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு இலட்சம் லிட்டர் தண்ணீர் மாவட்ட வளாகத்திற்கு எடுக்கலாம்

2017 மார்ச் 23] *[திரு. எ.வ. வேலு]*

என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட வளாகத்திலே 30 ஆயிரம் லிட்டர் தண்ணீர்தான் எடுக்கிறார்கள், 70 ஆயிரம் லிட்டர் தண்ணீர் மிஞ்சியிருக்கிறது. நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் கலந்து பேசி 70 ஆயிரம் லிட்டர் தண்ணீரை மருத்துவக் கல்லூரிக்குக் கொண்டு வந்தால் பிரச்சினை தீரும்.

நகரப் பகுதியில் மருத்துவக் கல்லூரிக்கு சாலை வசதி இருக்கிறது. டாக்டர்கள், செவிலியர்கள் பணிக்கு வருகிறபொழுது பகல் கொள்ளையும், இரவுக் கொள்ளையும் சேர்ந்து நடைபெறுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே, அங்கு ஒரு மின் விளக்கு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர்ப் பஞ்சத்தை உடனே தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது பழைய மருத்துவமனை. இந்த வாரத்தில் நேரடியாகச் சென்று, முழுமையாக அந்த மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகச் செயல்படுவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். திறமையான அமைச்சராக இருக்கிறீர்கள் அதனால் அதைச் செயல்படச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அரசு மருத்துவக் கல்லூரி என்பது பெரிய, பழைய மருத்துவக் கல்லூரி. ஒரு நாளைக்கு 15,000 பேர் வருகிறார்கள். திருவண்ணாமலை, சிவகங்கை எல்லாம் இப்பொழுது சமீபத்தில் தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள். நீங்கள் குறிப்பிட்ட அனைத்து வசதிகளும் படிப்படியாகக் கிடைக்கும். M.R.I. scan வழங்குவதற்கு உரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தண்ணீர்ப் பிரச்சினை அங்கே இருந்தது. இப்பொழுது வடஆண்டாப்பட்டியிலிருந்து நிரந்தரமான தண்ணீர் சப்ளைக்கு பொதுப் பணித் துறைக்கு எங்களுடைய துறையின்மூலம் கருத்துரு அனுப்பப்பட்டு முன்பணம் எல்லாம் செலுத்தப்பட்டு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் குடிதண்ணீர்ப்*

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 மார்ச் 23

பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாரம் அங்கே டயாலிசிஸ் சிறப்பு சிகிச்சை தருவதற்கு நானே வருகிறேன். அப்போது ஆய்வு செய்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: நான் கேள்வி, துணைக் கேள்வி எல்லாம் கேட்டு ரொம்ப நாள் ஆகிவிட்டது. Health Minister–இடம் ஏன் கேட்கிறோம் என்று கேட்டால், ஓர் உறுப்பினர் சபையில் பேசினால், அதைக் கவனமாகக் கேட்டுச் செய்கிறார் என்பதால்தான், அவரிடம் இந்தக் கேள்வியை நான் வைக்கிறேன். திருவண்ணாமலையில் என்ன நிலையோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்து அமைச்சர்களும் அவ்வாறுதான் செய்கிறார்கள். சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: ஐயா, நான் பார்த்தவரையிலும் அவரைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளுங்கள்.

திரு. துரைமுருகன்: அதேமாதிரி செய்தால் செய்யச் சொல்லுங்கள். அதிலே ஒன்றும் இடையாது. நான் சொல்ல வந்தது, திருவண்ணாமலை மாதிரிதான் வேலூரும். வேலூரில் இருக்கிற main hospital, Government hospital. 12 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் போய் விட்டது It is far away. அதாவது திருவண்ணாமலை ரோட்டில். ஆனால், ஏற்கெனவே heart of the town–ல் Pentland Hospital இருந்தது. இன்றைக்கும் கட்டடம் மற்றும் அனைத்தும் இருக்கின்றன. ஆனால், அங்கே மருத்துவமனை செயல்படவில்லை. இப்பொழுது காட்பாடியில் ஒருவருக்கு பாம்பு கடித்தால், சிகிச்சைக்காக 13 மைல் செல்வதற்குள் அவன் இறந்து விடுகிறான். ஆகையால் நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டீர்களென்றால், இந்த Pentland Hospital–லில் மருத்துவர்களை நியமித்து, ஒரு mini hospital நடத்த வேண்டும் என்று நாங்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தக் கோரிக்கையோடு முடியுங்கள்.*

திரு. துரைமுருகன்: *அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்வார் என்கிற நம்பிக்கையில்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு உங்களிடம் கேட்கிறேன். செய்வார் என்கிற நம்பிக்கையில் உட்காருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சர் அவர்கள் செய்வார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை குறித்து உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[திரு. கே.சி. வீரமணி] [2017 மார்ச் 23

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தினை அறிமுக நேரத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

2017 மார்ச் 23]

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

[2017 மார்ச் 23

7. முன்பண மானியக் கோரிக்கைகள், 2017–2018, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1–15

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2017–2018 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.

2017-2018 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செல்விற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	30,06,56	–	1
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	24,76,48	–	–
3	நீதி நிருவாகம்	574,36,08	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	2,126,84,28	160,30,83	1
5	வேளாண்மைத் துறை	4,933,17,62	305,96,76	91,35,00
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	790,89,78	21,75,31	17,50
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை	433,42,50	104,40,25	–

8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	45,57,07	45,50,01	–
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	673,72,95	16,65,36	1
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை	235,56,12	–	1
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	199,87,19	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,697,00,54	24,19,88	8,66,46
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	5,161,49,74	258,19,78	1
14	எரிசக்தித் துறை	8,294,94,59	2,047,50,05	1,326,78,04
15	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	7,96,68	12,72,60	14,00,01
16	நிதித் துறை	775,36,99	1,400,00,01	102,32,06
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	812,90,02	1,01,51	50,36,54
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	135,49,25	–	1
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	7,072,87,20	36,86,30	1
20	உயர் கல்வித் துறை	2,467,31,00	108,96,79	1

21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	979,26,93	6,067,37,59	1
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4,231,39,11	301,00,03	3,50,02
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	173,07,84	4,36,59	1
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	189,75,94	7,54,76	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–திருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	171,97,27	1	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	950,76,78	433,18,20	462,00,01
27	தொழில் துறை	1,216,37,44	4	245,00,07
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	51,32,97	–	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாட்டு மற்றும் அறநிலையங்கள் துறை)	66,86,41	49,58,53	1
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	78,99,12	3	–
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	75,23,89	5,95,00	1
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	694,56,24	12,63,12	1
33	சட்டத் துறை	18,89,94	–	–

34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	5,543,28,82	4,062,13,66	192,02,97
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	65,89,30	1	26,25
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	176,50,02	122,96,90	1
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை)	75,07,88	–	–
38	பொதுத் துறை	290,55,97	2	14,35,00
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	183,30,80	689,28,10	1
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	1,270,78,49	2,080,53,80	–
41	வருவாய்த் துறை	3,984,87,03	1,84,87	1
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	10,665,88,95	999,90,84	1
43	பள்ளிக் கல்வித் துறை	18,605,49,20	246,90,54	1
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	337,60,05	35,02,13	1
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	3,343,99,21	2,82,82	1
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	33,49,50	–	1
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	60,70,48	–	–
48	போக்குவரத்துத் துறை	1,319,90,31	315,00,04	337,50,08
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	115,83,27	–	1

50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	15,670,58,21	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் சூறித்த துயர் தணிப்பு	523,73,36	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	326,32,75	–	1
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	532,59,58	–	1
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	263,22,72	100,20,04	–
	பெரு மொத்தம்	**108,790,88,42**	**20,082,33,11**	**2,848,30,25**

8. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2016–2017, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை @ இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 4,796.58 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 4,121.49 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும் 675.09 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.*

2. 2017 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாளன்று, 2016–2017 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் "புதுப்

@ 124 முதல் 127 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

2017 மார்ச் 23] [திரு. டி. ஜெயக்குமார்]

பணிகள்" மற்றும் "புது துணைப் பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

3. வறட்சி நிவாரணத்திற்காக பயிரிழப்பால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உள்ளீட்டு மானியம் வழங்குவதற்காக 2,247.07 கோடி ரூபாயும், கால்நடைகளுக்குத் தீவனம் வழங்குவதற்காக 6.91 கோடி ரூபாயும், மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

4. நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 53 கோடி ரூபாயைக் கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் 53 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. கிராமப்புறங்களில் சாலைகளை மேம்படுத்துவதற்காக நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் சாலைப் பணிகளை மேற்கொள்ள 100 கோடி ரூபாய் கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ் 100 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

6. நகர்ப்புறப் பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு 183.54 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்துணை மதிப்பீடுகளில் 183.54 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் மானியம் வழங்குவதற்கு 155.48 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் 141.97 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

8. புதுக்கோட்டையில், புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக 40 கோடி ரூபாய்

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 மார்ச் 23

கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் 28.49 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 39–சுட்டங்கள் (பொதுப் பணித் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

9. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகின்றேன்.

2016-2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	2	–	54,73
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	8,17,79	–	–
3	நீதி நிருவாகம்	8,41,95	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	309,72,24	2	65,75
5	வேளாண்மைத் துறை	195,67,48	4	–
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	35	1	49,90
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	9	1	–
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	14,79,13	4,90,13	–
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	15	–	49,99

10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	8,68,70	–	25,00
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	8	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	100,34,62	–	2
13.	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	6,93,55	2	–
14	எரிசக்தித் துறை	2	–	–
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	3,77,98	10,67,99	–
16	நிதித் துறை	11	–	37,29,39
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	5,12,20	10,00	28,90,04
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	16,20,60	–	–
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,71	–	54,99
20	உயர் கல்வித் துறை	58	6	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	16	20	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	209,69,93	29,10,68	10,57,31
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	3,47,14	1,37,39	–

24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	20	–	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–திருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,15,14	12,27,65	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	8	–	–
27	தொழில் துறை	7,99,64	38,49,99	108,25,76
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	15,20,17	–	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	12	2	47,02
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	16,58,05	3,34,29	–
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	3	–	–
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	49	6,75,26	40,53
33	சட்டத் துறை	2	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	298,72,45	32,00,05	–
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	38,32	38,48	5,50
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	3,58,18	–	–
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4	–	–
38	பொதுத் துறை	153,99,73	–	1

39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	*10,11,75*	*28,49,25*	*41,49*
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	*18*	*1,05*	–
41	வருவாய்த் துறை	*59*	–	*67,84*
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	*16*	*231,55,89*	*34,99*
43	பள்ளிக் கல்வித் துறை	*32*	*16,23,74*	*7,51*
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	*7,01,55*	–	–
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	*24,34,71*	*22,00,00*	*3,98*
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	*6,23,60*	–	–
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	*4,26,31*	–	–
48	போக்குவரத்துத் துறை	*149,15,49*	–	*11,98*
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	*23,43,99*	*38,69*	–
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	*19*	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	*2,262,37,99*	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	*66,57,74*	*4,09,85*	*11,78*
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	*3*	–	*5,84*
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	*24*	*23,82,65*	–
	பெரு மொத்தம்	***3,942,24,08***	***466,03,41***	***190,81,35***

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016–2017 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of clause 2 of Article 205, read with clause 3 of Article 203 of the Constitution of India, I, Ch. Vidyasagar Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving. in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the financial year 2016–2017."

9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2016–2017, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016–2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23–3–2017 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2016–2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

2017 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2016-2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	2	–	54,73
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	8,17,79	–	–
3	நீதி நிருவாகம்	8,44,95	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	309,72,24	2	65,75
5	வேளாண்மைத் துறை	195,67,48	4	–
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	35	1	49,90
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	9	1	–
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	14,79,13	4,90,13	–

9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	15	–	49,99
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	8,68,70	–	25,00
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	8	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	100,34,62	–	2
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	6,93,55	2	–
14	எரிசக்தித் துறை	2	–	–
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	3,77,98	10,67,99	–
16	நிதித் துறை	11	–	37,29,39
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	5,12,20	10,00	28,90,04
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் லகவிலைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	16,20,60	–	–
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,71	–	54,99
20	உயர் கல்வித் துறை	58	6	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	16	20	–

22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	209,69,93	29,10,68	10,57,31
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	3,47,14	1,37,39	–
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	20	–	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,15,14	12,27,65	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	8	–	–
27	தொழில் துறை	7,99,64	38,49,99	108,25,76
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	15,20,17	–	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	12	2	47,02
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	16,58,05	3,34,29	–
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	3	–	–
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	49	6,75,26	40,53
33	சட்டத் துறை	2	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	298,72,45	32,00,05	–

35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	38,32	38,48	5,50
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	3,58,18	–	–
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4	–	–
38	பொதுத் துறை	153,99,73	–	1
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	10,11,75	28,49,25	41,49
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	18	1,05	–
41	வருவாய்த் துறை	59	–	67,84
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	16	231,55,89	34,99
43	பள்ளிக் கல்வித் துறை	32	16,23,74	7,51
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	7,01,55	–	–
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	24,34,71	22,00,00	3,98
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	6,23,60	–	–
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	4,26,31	–	–
48	போக்குவரத்துத் துறை	149,15,49	–	11,98
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	23,43,99	38,69	–

50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	19	–	–
51	இயற்கைச் சிற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	2,262,37,99	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	66,57,74	4,09,85	11,78
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	3	–	5,84
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	24	23,82,65	–
	பெரு மொத்தம்	**3,942,24,08**	**466,03,41**	**190,81,35**

5. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 மார்ச் 23

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(உ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2017–2018, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017–2018 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause (2) of Article 206, read with clause (3) of Article 203 of the Constitution of India, I, Ch. Vidyasagar Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial Year 2017–2018".

2017 மார்ச் 23]

10. முன்பண மானியக் கோரிக்கைகள், 2017–2018, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017–2018 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23–3–2017 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2017–2018 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2017–2018 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாதிலச் சட்டமன்றம்	30,06,56	–	1
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	24,76,48	–	–
3	நீதி நிருவாகம்	574,36,08	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	2,126,84,28	160,30,83	1
5	வேளாண்மைத் துறை	4,933,17,62	305,96,76	91,35,00
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	790,89,78	21,75,31	17,50
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை	433,42,50	104,40,25	–
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	45,57,07	45,50,01	–
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	673,72,95	16,65,36	1
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை	235,56,12	–	1
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	199,87,19	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,697,00,54	24,19,88	8,66,46

13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	5,161,49,74	258,19,78	1
14	எரிசக்தித் துறை	8,294,94,59	2,047,50,05	1,326,78,04
15	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	7,96,68	12,72,60	14,00,01
16	நிதித் துறை	775,36,99	1,400,00,01	102,32,06
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	812,90,02	1,01,51	50,36,54
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	135,49,25	—	1
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	7,072,87,20	36,86,30	1
20	உயர் கல்வித் துறை	2,467,31,00	108,96,79	1
21	தெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	979,26,93	6,067,37,59	1
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4,231,39,11	301,00,03	3,50,02
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	173,07,84	4,36,59	1
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	189,75,94	7,54,76	—
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–திருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	171,97,27	1	—

26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	960,76,78	433,18,20	462,00,01
27	தொழில் துறை	1,216,37,44	4	245,00,07
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	51,32,97	–	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாட்டு மற்றும் அறநிலையங்கள் துறை)	66,86,41	49,58,53	1
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	78,99,12	3	–
31	தகவல்தொழில்நுட்பவியல் துறை	75,23,89	5,95,00	1
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	694,56,24	12,63,12	1
33	சட்டத் துறை	18,89,94	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	5,543,28,82	1,062,13,66	192,02,97
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	65,89,30	1	26,25
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	176,50,02	122,96,90	1
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை)	75,07,88	–	–
38	பொதுத் துறை	290,55,97	2	14,35,00
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	183,30,80	689,28,10	1
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	1,270,78,49	2,080,53,80	–
41	வருவாய்த் துறை	3,984,87,03	1,84,87	1

42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	10,665,88,95	999,90,84	1
43	பள்ளிக் கல்வித் துறை	18,605,49,20	246,90,54	1
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	337,60,05	3503,13	1
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	3,343,99,21	2,82,82	1
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	33,49,50	–	1
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	60,70,48	–	–
48	போக்குவரத்துத் துறை	1,319,90,31	315,00,04	337,50,08
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	115,83,27	–	1
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	15,670,58,21	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	523,73,36	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	326,32,75	–	1
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	532,59,58	–	1
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	263,22,72	100,20,04	–
	பெரு மொத்தம்	**108,790,88,42**	**20,082,33,11**	**2,848,30,25**

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

2017 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

11. வரவு–செலவுத் திட்டம், 2017–2018, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடு) சற்று பொறுங்கள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்குள் செல்வதற்கு முன்பாக, நேற்றையதினம் 'இலவச மின்சாரம் உங்கள் ஆட்சியில் கொண்டு வந்திர்களா? எங்கள் ஆட்சியில் கொண்டு வந்தோமா?' என்றெல்லாம் விவாதம் நடைபெற்றது. அது பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேதான் கொண்டுவரப்பட்டது என்று நான் உறுதியாகத் தெரிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதற்கான ஆதாரத்தைத் தருகிறேன் என்று சொன்னேன். அதனடிப்படையில், இன்று காலையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்று அந்த ஆதாரத்தைக் காட்டியுள்ளேன். இதோ அந்த ஆதாரம்.*

பிற்பகல் 1–25

Commissioner & Secretary to Government–ஆக திரு. மாதவ சர்மா அவர்கள் அப்போது இருந்திருக்கின்றார்கள். G.O. Ms. No.1181, dated *21–6–1984*. அதுவும் இந்த உத்தரவை எந்த நாளிலே புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள் என்று சொன்னால், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த தின விழாவிலே அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய order–ஐ படிக்கின்றேன் நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

"The Government have been considering the question of re–structuring the levy of agricultural tariff with particular reference to giving relief to the weaker sections of the society. After careful examination of the issues involved in this matter, the Government have decided to supply electricity free of charge, to small farmers. . . (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் G.O.–தானே படிக்கின்றார். (குறுக்கீடுகள்) திரு. ப. ரங்கநாதன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் G.O.–தானே படிக்கின்றார், நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: "Whose families are solely dependent on the income derived from their agricultural land holdings. "Small Farmer" means a person whose total holding, whether as owner, tenant, or mortgagee with possession or partly in one capacity and partly in another, does not exceed two and a half acres of wet lands or five acres of dry lands. In computing the extent of land held by person who holds wet and dry lands, two acres of dry land shall be taken to be equivalent to one acre of wet land.

2. In respect of all other categories of farmers, a lumpsum of Rs.75 per HP per annum will be collected from them irrespective of the quantum of power consumed.

3. This order will take effect from 15–9–1984." இப்போது சொல்லுங்கள். அந்த concept–ஐ, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தருகின்ற அந்த விதையைப் போட்டு, அந்த விதை இன்றைக்கு ஆல மரமாக வளர்வதற்குக் காரணமாக இருந்தது அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்?

2017 மார்ச் 23]

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவரகளே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தற்போது ஓர் அரசாணையைப் படித்தார். ஆனால், 1984 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் சிறு விவசாயிகளுக்குத்தான் இலவச மின்சாரம் தரப்பட்டது என்றுதான் அரசாணையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், 1989இல் 1990 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள்தான் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத்தைக் கொண்டு வந்தார் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அர. சக்கரபாணி, விடுங்கள், அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பசி நேரத்தில் பேசச் சொல்லுகிறீர்கள். எனக்கு குரலே வரவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன செய்வது? நீங்கள் என்மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை இன்று அவையில் எடுத்துக் கொண்டதால்தான் நேரமாகிவிட்டது.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *நீங்களும், உங்களுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நீங்களும் சென்று சாப்பிட்டுவிட்டு வாருங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *சாப்பிட விடமாட்டேன் என்கிறீர்கள். இன்றையதினம், இந்த அவையில் 4–வது முறையாக பேசுவதற்கும், என்னைக் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியினுடைய வேட்பாளராக அறிவித்து, 92 வயதில் கலைஞர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு நேரடியாக வந்து, வாக்கினைக் கேட்டு வெற்றிபெறவும் வைத்தார்கள். ஆனால், ** கலைஞர் அவர்கள் நேரடியாக தொகுதி மக்களைச் சந்தித்து, வாக்கினைக்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [*2017 மார்ச் 23*

கேட்டு, வெற்றிபெற வைத்தார்கள். 89 சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றிருக்கின்றோம். எங்களை சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற வைத்த அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணன் தளபதி அவர்கள் 10,000 கிலோ மீட்டர் அளவுக்கு 'நமக்கு நாமே' இயக்கம்மூலம் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு விவாதத்திற்குரிய பொருளைப்பற்றி பேசினால் சரி. தேவையில்லாமல் அவர் பேசிய கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து தயவு செய்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) என்ன ** (குறுக்கீடுகள்) ** நீக்க வேண்டுமென்று நான் சொன்னேன்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நீங்கள் ஆரம்பிக்கும்போதே பசி என்று சொன்னீர்கள். சீக்கிரம் உரையை நல்லபடியாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) தேவையில்லாதவற்றையெல்லாம் பேச வேண்டாம். நல்லபடியாக உரையைப் பேசி முடியுங்கள்*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன்? 92 வயதிலும் தலைவர் கலைஞர் அவர்கள் தொகுதி மக்களை நேரடியாகச் சந்தித்து வாக்கினைக் கேட்டார்கள் என்று சொன்னது தவறா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரத்தை தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னாள் அமைச்சர், மறைந்த ஒருவரைப்பற்றி இந்தச் சபையிலே அவர் ** சென்றார், அதிலே சென்றார்,*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2017 மார்ச் 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

இதிலே சென்றார் என்றெல்லாம் சொல்வது மரபு கிடையாது. இது மரபாக இல்லை. (குறுக்கீடு) இல்லை, அவர் ** என்றுதான் சொன்னார். (குறுக்கீடு) நாங்கள் வண்டியில் சென்றோம். அவர் ** என்று சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நீங்கள் நிதிநிலை அறிக்கைமீது பேசுங்கள். தேவையில்லாதவற்றையெல்லாம் நீங்கள் பேசாதீர்கள். அது நீக்கப்படுகிறது.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: எங்கள் தலைவரைப்பற்றி நாங்கள் பேசுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய தலைவரைப்பற்றிப் பேசிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவர்களை ஏன் நீங்கள் வம்புக்கு இழுக்கிறீர்கள்?

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: உங்கள் தலைவரைப்பற்றி நாங்கள் பேச விரும்பவில்லை. உங்கள் தலைவரைப்பற்றி நீங்கள் புகழ்ந்து பேசுகிறீர்கள். நாங்கள் பேசவில்லை. நாங்கள் எங்களுடைய தலைவரைப்பற்றிப் பேசுவோம். தளபதி அவர்கள் 'நமக்கு நாமே' திட்டத்தின் மூலமாக மக்களைச் சந்திக்க 10,000 கிலோ மீட்டர் அளவுக்கு நடந்தும், சைக்கிளிலும், பேருந்துகளிலும் சென்றார்கள். என்னுடைய தேர்தல் பணிக்காகவும் வாக்கினைக் கேட்டு, என்னை வெற்றி பெற வைத்த அண்ணன் தளபதி அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

நிதிநிலை அறிக்கையைப் படித்துப் படித்துப் பார்க்கிறோம். கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்கள். எங்களுடைய ஆட்சியில் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்கள். மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொடுத்தார்கள். திட்டங்கள் வரும் என்று மக்கள் பெரிதும் எதிர்பார்த்தார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் எதுவுமே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்][2017 மார்ச் 23

இல்லை. வரியில்லை என்கிறார்கள். வரியில்லாத நிதிநிலை அறிக்கை என்று பெருமை பேசுகிறார்கள். ஆனால், petrol போடுகிறவர்கள், scooter–இல் போகிறவர்கள், car–க்கு diesel போடுகிறவர்கள் எல்லாம் இந்த ஆட்சியை ஏசிக்கொண்டிருக்கிறார்கள். என்னவென்று கேட்டால், ஒரு லிட்டருக்கு நான்கு ரூபாய், நாலே கால் ரூபாய் என்று விலையை ஏற்றிவிட்டு, நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே மறைமுகமாக வரியை ஏற்றிவிட்டு, வரியில்லாத நிதிநிலை அறிக்கை என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 8,000 கோடி ரூபாய் வரி உயர்த்தியிருக்கிறார்கள். நான்கு இலட்சம் கோடி ரூபாய் கடன், கலைஞர் ஆட்சியில் ஒரு இலட்சம் கோடி ரூபாய்கூட கடன் கிடையாது. 60,000 கோடி கடன்தான் இருந்தது. ஆறு ஆண்டுகால இந்த ஆட்சியில் மக்கள்மீது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சியில் கடனே இல்லை என்று சொன்னார்கள் (குறுக்கீடுகள்) உங்கள் ஆட்சியில் கடன் இருந்தது என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? ஒத்துக்கொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, உட்காருங்கள் நீங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: அதற்கு நாங்கள் வட்டியும் சேர்த்துக் கட்டியிருக்கிறோம். ஒத்துக்கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான ஒரு வாதத்தை முன்வைக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் எடக்குமடக்காகப் பேசி. . .

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர். காரில் போகிறவர்கள், ஸ்கூட்டரில் போகிறவர்கள் எல்லாம் ஏசுகிறார்கள், திட்டுகிறார்கள் என்று எங்கள் ஆட்சியைப் பற்றி சொன்னார். சாதாரணப்பட்ட, சாமானியப்பட்ட மக்கள், விவசாயிகள், பல இலட்சம் மக்கள் இன்றைக்கு அம்மா அவர்களின் அரசைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்; போற்றிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி; மூன்று ரூபாய்க்கு தயிர் சாதம், ஐந்து ரூபாய்க்கு சாம்பார் சாதம் கொடுத்த தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1 கோடியே 90 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா அரிசியைக் கொடுத்தார்கள் புரட்சித் தலைவி பொன்மனத் தாய் அம்மா அவர்கள். இந்த அரசை சாதாரணப்பட்ட, சாமானியப்பட்ட மக்கள் வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். சாதாரணப்பட்டவர்களுக்கு, ஏழைப்பட்டவர்களுக்கு, கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு 4 ஆடுகள் கொடுத்து ஏழை மக்களைக் காப்பாற்றியிருக்கிற அரசு இந்த அரசு. அந்தத் திட்டங்கள் எல்லாம் தொடர்கின்றன. கிராமப்புற மக்களெல்லாம் வாழ்த்துகிற இந்த அரசைப் பணக்காரர்கள் வாழ்த்த வேண்டுமென்று நாங்கள் நினைக்கவே இல்லை. சாதாரண, சாமானிய மக்கள் வாழ்த்தினால் போதும். அதற்காகத்தான் புரட்சித் தலைவர் இயக்கம் கண்டார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த இயக்கத்தைக் கட்டிக்காத்து, ஒன்றரைக் கோடி தொண்டர்களைப் பெற்ற இராணுவக் கட்டுப்பாடு மிக்க இயக்கமாக்கி, 45 ஆண்டுகளில் 28 ஆண்டுகளாக ஆட்சியில் அமரவைத்திருக்கிறார்கள் சாதாரண மக்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களை ஏசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் காரில் போகிறீர்கள். அரசாங்கக் காரில் போகிறீர்கள். அரசாங்க டீசல், இலவச டீசல். (குறுக்கீடுகள்)

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்][2017 மார்ச் 23

இலவசப் பயணம் செய்கிறீர்கள். ஆனால், காசு கொடுத்து நாங்கள் டீசல் போடுகிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நிதிநிலை அறிக்கைமீது பேசுங்கள். எதற்கு தேவையில்லாதது? பேசுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: நிதிநிலை அறிக்கைமீதுதான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நேரம் இல்லை.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டரில் போகிறவர்கள் ஏசவில்லை என்கிறாரே! பெட்ரோல் பங்கில் நின்று பாருங்கள். நீங்கள் அமைச்சராக இருப்பதால் பெட்ரோல் பங்கிற்கு போக வாய்ப்பில்லை. ஒரு கிராமத்தில் 100 வீடு இருக்கிறது என்றால், 99 வீடுகளிலும் பைக் வைத்திருக்கிறார்கள். சைக்கிள் ஓட்டவில்லை. நீங்கள் கொடுக்கிற சைக்கிள் ** சைக்கிள். அதை ஓட்டமாட்டேன் என்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) ஓர் அரசு கொடுக்கிற சைக்கிளை ** சைக்கிள் என்றால் என்ன அர்த்தம். (குறுக்கீடுகள்) இதெல்லாம் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) ஓர் அரசாங்கத்தை இப்படிச் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) தவறு இருந்தால் அரசிடம் சொல்லுங்கள். நடவடிக்கை எடுப்பார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆதாரத்தின் அடிப்படையில் ** சைக்கிள் என்று சொல்கிறார்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் நீங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நிரூபிக்க அவர் தயாராக இருக்கிறாரா? (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதாவது, ** பொருள் என்று சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, தரமான பொருளை கொடுக்கவில்லை என்று சொல்லுங்கள். அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். நீங்கள், அரசாங்கம் கொடுக்கிற பொருள் ** பொருள் என்று சொல்லி, ஓர் அரசாங்கத்தை விமர்சிப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் அதுமாதிரியெல்லாம் சொல்லக் கூடாது. நீங்கள் ஓர் அமைச்சராக இருந்தவர். அவரும் அமைச்சராக இருந்தவர். அப்படியெல்லாம் சொல்லக் கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் என்பது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டிலே செயல்படுத்தப்படுகிறது. அந்தத் திட்டத்தை தொடர்ச்சியாகச் செயல்படுத்துகிற ஒரே மாநிலம் என்று சொன்னால், அது நம்முடைய தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களைப் பார்த்து சில மாநிலங்களிலும் கொண்டு வந்தார்கள். ஆனால், செயல்படுத்த முடியவில்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. நான் தவறாக ஒன்றும் செய்யவில்லை, சரியாகத்தான் செய்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2017 மார்ச் 23

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: ஆனால், அம்மா அவர்கள் தொடர்ந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, தரமான சைக்கிளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொடுத்த சைக்கிள் வேண்டுமானால், ** ஆனால், எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வாங்கிக் கொடுக்கப்பட்ட சைக்கிள் Evans Cycles, Hero Cycles, T.I. Cycles. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும், வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: T.I. Cycle–ஐக் குறை சொல்கிறீர்களா? Hero Cycle–ஐக் குறை சொல்கிறீர்களா? Evans Cycle–ஐக் குறை சொல்கிறீர்களா? உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வேண்டுமானால் இப்படிப்பட்ட Standard Companies இல்லாமல் ** சைக்கிள்களை வாங்கிக் கொடுத்திருக்கலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன விளக்கம்? சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான ஒரு விண்ணப்பம். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஆளுங்கட்சியைப்பற்றி குறை சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. நீங்களானாலும்சரி, நாங்களானாலும்சரி அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆனால், நாங்கள் ஒரு பொருளை ** என்றே சொல்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை மறுப்பதற்கு அமைச்சர்களுக்கு உரிமை உண்டு. "மாண்புமிகு உறுப்பினர் தவறாகச் சொல்கிறார்" என்று சொல்லலாம். இல்லையென்றால், "உங்கள் குற்றச்சாட்டை நிரூபியுங்கள்" "அது சரியாக இருக்க வேண்டும்" என்று கேட்க வேண்டும். அது, எங்களுக்கும், அவர்களுக்கும் நடக்கிற விவாதம். நாங்கள் குறை சொல்வோம். அமைச்சர்கள் எழுந்து, உறுப்பினர் சொல்வது தவறு என்று சொல்ல வேண்டும் இல்லையென்றால், நிரூபிக்க முடியுமா என்று கேட்க வேண்டும். அது இரண்டு பேருக்கும் நடக்கிற விவாதம். ஆனால், நீங்கள் இடையிலே எழுந்து. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஓர் அரசாங்கத்தின்மீது ஆதாரமில்லாத குற்றச்சாட்டை சொல்வது. . .*

திரு. துரைமுருகன்: *ஆதாரம் இல்லையென்று நீங்கள் எப்படி சொல்லலாம்? ஆதாரம் இல்லையென்று நீங்கள் எப்படி சொல்ல முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய அனுமதி இல்லாமல் ஆதாரமில்லாத குற்றச்சாட்டு சொன்னால், அதை நீக்குகிற உரிமை எனக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்)*

திரு. துரைமுருகன்: *ஆதாரம் இல்லையென்று நீங்கள் எப்படி சொல்ல முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆதாரம் இல்லை.என்னிடத்தில் ஆதாரத்தைக் கொண்டு வந்து காட்டியிருக்க வேண்டும். (குறுக்கீடு) பேரவைத் தலைவரே அது தவறு என்றுபட்டால் நீக்கலாம். (குறுக்கீடு) உறுப்பினர் பேசுவது தவறு என்று தோன்றினால், அதை நீக்குகிற உரிமை பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. அதைக் கேட்கிற உரிமை எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு இல்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் சொன்னதை அவைக் குறிப்பில் பதிவு செய்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதை பதிவு செய்துவிட்டேன். அவ்வளவுதான், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 1–40

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரமில்லாமல் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த மாதிரி செய்வது முறையல்ல. நான் எச்சரிக்கிறேன். எல்லா நேரமும் என்னால் பொறுமை*

காக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், உங்கள் உறுப்பினர் திரு. பன்னீர்செல்வத்திற்கு வாய்ப்புக் கொடுத்தேன். அதில் ஒரு பிரச்சினை வந்தது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவதற்கு அனுமதி கேட்டார். அதற்கு அனுமதியளித்தேன். அவர் பேசியதையும் பதிவு செய்துகொண்டேன். அத்தோடு அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. மேற்கொண்டு நீங்கள் கூச்சலிட்டு இந்த அவையை நடத்தவிடாமல் செய்தால் நான் எல்லா நேரமும் பொறுமையாக இருக்க முடியாது. (குறுக்கீடு) கடுமையான நடவடிக்கைகளுக்கு உங்களை உட்படுத்த வேண்டிவரும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. துரைமுருகன், திரு. அர. சக்கரபாணி, திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் மற்றும் திரு. ஆல்டின் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

இல்லை, மாண்புமிகு அமைச்சர் ஒரு விளக்கம் அளிக்க இருக்கிறார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது ** சைக்கிள் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள் ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அவ்வாறு அவர் பேசியதன் அடிப்படையிலே மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் ** என்று சொன்னார். இரண்டு பேரும் பேசிய அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இந்தப் பிரச்சினை முடிகிறது. இரண்டு பேர் பேசியதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நீங்கள் ஆரம்பிக்கும்போது, (குறுக்கீடு) எனக்குத் தெரியும். நீங்கள் சுமுகமாக முடியுங்கள் என்று கேட்டேன். நீங்கள் வேறு, வேறு பிரச்சினைக்குச் சென்றதால், பத்து, பதினைந்து நிமிடங்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வீண் செய்துவிட்டீர்கள். சரியாக பதினைந்து நிமிடங்கள் பேசி 2–00 மணிக்குள் உரையை முடிக்கவேண்டும். இதற்கு மேலும் ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், சபையை நடத்தவிடாமல் பேசிக் கொண்டிருக்கிறார். அதற்கு நான் என்ன செய்வது? நான் ஒன்றைப் பேசினால், அவர் அதை இரண்டாக ஆக்குகிறார். (குறுக்கீடுகள்) ஒன்று சொன்னால் இரண்டு பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: எனக்குப் பேசுகின்ற மூடே போய்விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சரி, உட்கார்ந்து விடுங்கள். நான் வேறு ஓர் உறுப்பினரைப் பேச அழைக்கிறேன்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் வெறும் 100 பக்கங்கள் இருக்கின்றன. மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டரை மணிநேரம் அலங்காரமாகப் பேசினார். அதற்கு நான்கு நாட்களாக விவாதம் நடக்கின்றது. ஆனால், அதில் மக்களுக்குத் தேவைப்படுகின்ற திட்டங்கள் ஏதாவது இருக்கின்றதா என்றால் ஒன்றும் இல்லை. நீங்கள் நிறைய திட்டங்கள் இருக்கின்றன என்று சொல்கிறீர்கள். நாங்கள் இல்லையென்று சொல்கிறோம். மக்களும் அதில் ஒன்றும் இல்லையென்று சொல்கிறார்கள். மக்கள் எதிர்பார்த்தவாறு இல்லையென்று சொல்கிறார்கள். இரு சக்கர வாகனங்களுக்கு பெட்ரோல் போடுபவர்கள் இந்த அரசை ஏசுகிறார்கள். இன்றைக்கும் அரசை ஏசுகின்றார்கள். ஒரு முதலமைச்சருக்கு ஓட்டைப் போட்டுவிட்டு, இப்போது மூன்று முதலமைச்சர்கள் மாறியிருக்கிறார்களே என்ற அந்தக் கவலை வேறு மக்களுக்கு. (குறுக்கீடுகள்) ஒரு முதலமைச்சருக்கு மூன்று முதலமைச்சர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை முதலமைச்சர்கள் பொறுப்புக்கு வந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து இந்த ஆட்சியில் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் நினைக்கின்ற மாதிரி நான்கு ஆண்டுகள் இல்லை, 100 ஆண்டுக் காலம் இந்த ஆட்சி நிலைக்கும். நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கு சட்டமன்றத்தில் பேசுவது, சரியாக இருக்காது. மேலும், ** எனவே, அதை அருள்கூர்ந்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நீங்கள் தேவையில்லாத பிரச்சினைப் பற்றியெல்லாம் பேசாதீர்கள். அது தேவையில்லை. எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசத் தயாராக இருக்கிறேன். நீங்கள் எங்கே என்னைப் பேசவிடுகிறீர்கள்? உங்கள் அமைச்சர்களின் பேச்சு, என்னை அவ்வாறு பேசத் தூண்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நீங்கள் தேவையில்லாத பிரச்சினைப் பற்றியெல்லாம் **பேசாதீர்கள்.**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 23]

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *நாங்கள் பட்ஜெட்டில் உள்ளவற்றைப் பற்றிப் பேசுகிறோம். ஆடு, மாடுகள் கொடுத்தீர்கள். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் ஆடு, மாடு மேய்க்கக் கூடாது என்பதற்காக இலவசக் கல்வி கொடுத்தார்கள். நீங்கள் என்னவென்றால், திரும்பவும் ஆடு மேயுங்கள், மாடு மேயுங்கள் என்கிறீர்கள். அது ஒரு திட்டமா? மேலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஆடு, மாடு வாங்கியிருக்கின்றார்கள். . .*

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் திரு. பன்னீர்செல்வம் மாதிரி இருக்கின்றவர்களுக்குத் தெரியும். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள், உங்கள் தோட்டத்தில், விவசாய நிலத்தில் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டிருந்தனர். வாழ்நாள் முழுவதும் ஆடு, மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அவன் வாழ்க்கையில் தனக்கு 4 ஆடுகளோ, ஒரு மாடோ கிடைக்காதா என்று ஒரு கனவு கண்டான். அவனுக்கு அவற்றைக் கொடுத்து அவனுடைய கனவை நிறைவேற்றியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆடு, மாடுகளைக்கூட மற்ற கட்சிக்காரர்களுக்கு கொடுக்கக் கூடாதாம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமாம். வேறு யாருக்காவது கொடுத்திருக்கின்றீர்களா என்று சொல்லுங்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

[*2017 மார்ச் 23*

மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற நிலை இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்ட முடியாது. அதுமட்டுமல்ல, கல்வியை வளர்க்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இதுவரையிலும் இந்திய நாட்டின் வரலாற்றில் இல்லாத வகையில் தமிழகத்தில் 26,800 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மடிக் கணினியை இந்தியாவிலே வேறு யாரும் வழங்கவில்லை. சைக்கிள் வழங்குவதுபோன்று பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, கல்வியிலும் மாற்றத்தை உருவாக்கி ஏழைகள் இல்லாத நாட்டை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தேவைப்பட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் யார், யார் தமிழகம் முழுவதும் ஆடு, மாடுகள் பெற்றிருக்கிறார்கள் என்ற பட்டியலை கொடுக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு அந்தப் பட்டியலெல்லாம் தேவையில்லை, உங்களுடைய ஆடும் தேவையில்லை, மாடும் தேவையில்லை. நாங்கள் மாடு மேய்க்கத் தயாராயில்லை. அவரவர் வீடுகளில் ஆடு, மாடுகள் இருக்கின்றன. ஆடு, மாடு மேய்க்கின்றவன் பிள்ளை ஆடு, மாடு மேய்க்கக் கூடாது என்பதுதான் பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை. பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் கட்சியை வைத்திருக்கின்ற நீங்கள், ஆடு, மாடு மேய்க்கச் சொல்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உங்களுடைய நியாயமா? இதுதான்*

2017 மார்ச் 23] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

உங்களுடைய திட்டமா? எங்கள் அம்மா ஆடு, மாடுகளைக் கொடுத்திருக்கின்றார்கள் என்று சொல்கின்றீர்களே, அது ஒரு திட்டமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கே இதுபோன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. உங்கள் காலத்திலேயும் கொடுத்தீர்கள், விவசாயிகளுக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகின்றோம். விவசாயக் கூலி வேலை செய்கிற, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்குக் கொடுப்பதை தவறு என்று எந்த மேடையில் நீங்கள் பேசப் போகிறீர்கள்? சட்டமன்றத்திலே நீங்கள் பேசுகின்றீர்கள். இப்படி ஊரிலே போய் பேச முடியுமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு மணிக்குப் பிறகு அவர் என்ன பேசினாலும் சரி. அவரை நான் நிறுத்திவிடுவேன். அதற்குமேல் அவருக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்கக் கூடாது. 1–27 மணிக்கு அவர் பேச ஆரம்பித்து இன்னும் எவ்வளவு நேரம் பேசுவார்? மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதாரம் என்பது கால்நடைச் செல்வம். இந்திய அளவிலே பார்த்தோம் என்றால், நம்முடைய கிராமங்களில்தான் உண்மையான இந்தியா இருக்கிறது. எனவே, கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டுமென்றால், கால்நடைச் செல்வத்தை வளர்க்க வேண்டும். அவர் மட்டன் சாப்பிடுவது இல்லை, சிக்கன் சாப்பிடுவது இல்லை, பால் அருந்துவது இல்லை அல்லது வேறு எந்த அசைவ உணவும் சாப்பிடுவது இல்லை என்று சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம். ஆடு வளர்க்காமல் ஆட்டுக்கறி சாப்பிடுவீர்களா? மாடு வளர்க்காமல் பால் அருந்துவீர்களா? கோழி வளர்க்காமல் சிக்கன் சாப்பிடுவீர்களா? மீன் பிடிக்காமல் மீன் சாப்பிடுவீர்களா? அதற்கு முதலில் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்.*

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு தொழில். எல்லோரையும் மாடு மேய்க்க வேண்டும் என்று சொல்லக் கூடாது. அதுவும் நல்ல மாடாக நீங்கள் வாங்கிக் கொடுப்பீர்கள் என்று பார்த்தால், ஆந்திராவிலிருந்து Anthrax நோயோடு மாடு கொண்டு வந்து விட்டுவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பேசிய கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்று தமிழ்நாட்டு மக்களுக்கு உங்களால் அறிக்கை விட முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நிதிநிலை அறிக்கைமீது இன்னும் 10 நிமிடங்கள் பேசி உங்கள் உரையை முடியுங்கள். 1–27 மணிக்கு நீங்கள் பேச ஆரம்பித்தீர்கள். நீங்கள் இன்னும் சப்ஜெக்ட்டிற்கே வரவில்லை. நிதிநிலை அறிக்கை மீதே பேசவில்லை. எனக்கு நேரம் கொடுக்கவில்லை என்று பின்னர் கேட்டால், என்னால் ஒன்றும் செய்ய முடியாது. இன்னும் 5 பேர் பேச வேண்டும். 2ஆ00 மணிக்குள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) 1–27 மணிக்குப் பேச ஆரம்பித்து சப்ஜெக்ட்டிற்கே வரமாட்டேன் என்கின்றீர்கள். என்னை என்ன செய்யச் சொல்கின்றீர்கள்? நீங்கள் எல்லோரும் சேர்ந்து அவருக்குக் கொஞ்சம் சொல்லுங்கள்.

பிற்பகல் 1–50

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் தெம்பாக இருக்கின்றீர்கள். என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள். தொகுதிப் பிரச்சினை இருக்கிறது. இன்னும் சில முக்கியப் பிரச்சினைகள் இருக்கின்றன. கரும்புப் பிரச்சினை இருக்கிறது. எனக்குப் பணம் வரவில்லை. அதை வேறு கேட்க வேண்டும். என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் பச்சான்குப்பம் என்ற கிராமம் இருக்கின்றது. கிட்டத்தட்ட 10,000 மக்கள்தொகையைக் கொண்ட கிராமம். கடலூர் நகராட்சியின் கழிவுகள் எல்லாம்

2017 மார்ச் 23] [**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**]

குறிஞ்சிப்பாடியில் குப்பைக் கிடங்கு அமைத்து குப்பைகள் கொட்டப்படுவதால், அங்குள்ள மக்கள் சுகாதாரம் இல்லாமல் பல நோய்களால் தாக்கப்பட்டு வாழ்கின்றார்கள். விஷவாயு கிளம்புகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் நச்சுத் தன்மையாக மாறிப்போகிறது அனைத்தும் எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கு மக்கள் போராடுகின்றார்கள். அந்தக் குப்பைக் கிடங்கை தயவு செய்து அகற்ற வேண்டுமென்று இங்கு இருக்கின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். குப்பைகளை நகராட்சியிலிருந்து கிராமப்புற ஒன்றியத்தில் கொண்டுவந்து கொட்டுகிறார்கள். நகராட்சியில் கொட்டினால் பிரச்சினை இல்லை. மாண்புமிகு அமைச்சர் திரு. சம்பத் அவர்களது தொகுதியிலிருந்து என்னுடைய தொகுதியில் கொட்டுகிறார்கள். அண்ணா தி.மு.க. தொகுதியிலிருந்து தி.மு.க. தொகுதியில் கொட்டுகிறார்கள். அதைத் தடுத்து, அப்புறப்படுத்த வேண்டும். எனவே, பச்சான்குப்பம் குப்பைக் கிடங்கையும், அப்பகுதி மக்களின் சுகாதாரக் கேட்டையும் அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடலூருக்கு பக்கத்திலிருக்கின்ற சிப்காட். அங்கு கிட்டத்தட்ட 30-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இயங்குகின்றன என்பது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் திரு. சம்பத் ஆகியோருக்குத் தெரியும். அந்த நிறுவனங்களிலிருந்து வெளியாகும் விஷ வாயு கிராமப்புற மக்களின்மீது பரவுகின்றது. இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டிலேயே அதிக cancer நோயாளிகள் உள்ள பகுதியாக அது விளங்குகிறது. மேலும், இரகசியமாக, அந்த நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தண்ணீர் அனைத்தையும் கடலிலே கலக்கின்றார்கள். சுற்றுச்சூழல் துறையிடம் சொன்னால் ** இவையெல்லாம் நடக்கின்றன. வேறு ஏதும் நடக்கவில்லை. ** அவற்றைக் கண்டுபிடித்து அந்த சிப்காட் பகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டும். அங்கு உள்ள தண்ணீர் சுகாதாரமானதாக இல்லை. அங்கு குடிக்கத் தண்ணீர் கிடையாது. அங்குள்ள குடி தண்ணீர் எல்லாம் நச்சுத் தன்மையாக மாறிப் போய்விட்டது. அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல கடலூர் மாவட்டத்தில். . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[*2017 மார்ச் 23*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, ** என்று சொன்னார்கள். நான் பேசியது உட்பட அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். பொத்தாம் பொதுவாக அப்படிப் பேசக் கூடாது. ஆதாரத்தோடு இருந்தால்தான் நீங்கள் ** குறித்துச் சொல்ல வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தாம் பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ அவசரத்தில் அவ்வாறு சொல்லிவிட்டார் என்று நினைக்கிறேன். அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. நீங்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர். இந்த மாதிரியெல்லாம் பேசக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் பேசியது, நான் பேசியது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிப்காட் Phase I மற்றும் Phase II–ல் இருக்கின்ற கழிவுநீர் அனைத்தும் முறையாகச் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடலுக்குள் பைப் அமைத்து கடலில் விடுகிறார்கள். அதேபோன்று காற்றின் தரத்தை 24 மணி நேரமும் கண்காணிப்பதற்காக காற்று கண்காணிப்புக் கருவி அமைத்து கண்காணிக்கப்படுகிறது. அந்தக் கருவியானது* Board office *உடன் இணைக்கப்பட்டிருக்கிறது. 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள். காற்றின் தரம் மிகச் சரியாகவும், மாசு மிகக் குறைவாகவும் உள்ளதென்பதை மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களது வேண்டுகோளின்படி, ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, அவற்றையெல்லாம் சொல்லக் கூடாது, உங்களுக்கே தெரியாதா?*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

(குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதையும் சேர்த்து அவற்றை நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அனுபவம் மிக்கவர். அவருக்கு நன்றாகத் தெரியும் சபைக்கு வெளியே இருப்பவர்கள் மீது குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்று (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட்டில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளின் கழிவுகள் அங்கு வந்து கொட்டப்படுகின்றன என்று சொன்னார்கள். கழிவுகள் முழுமையாகச் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, cusecs pipe மூலமாக main discharge செய்யப்படுகிறது. இவ்வாறு மாசு நாளுக்கு நாள் கட்டுப்படுத்தப்படுகிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பச்சான்குப்பம் ஊராட்சியில் இருக்கிற கடலூர் நகராட்சியினுடைய compost yard–ல் தற்சமயம் குப்பைகள் கொட்டப்படவில்லை. இருக்கிற கழிவுகளை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இப்பிரச்சினை கொண்டு செல்லப்பட்டுள்ளது. வெகு விரைவில் அந்தக் கழிவுகள் அகற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பேசுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *அது நடந்தால் நன்றி.* Cusecs

pipe வழியாக நல்ல தண்ணீர் போகிறதா அல்லது கெட்ட தண்ணீர் போகிறதா என்பதை யார் கண்காணிக்கிறார்கள். அந்த நிருவாகம் தெரியாத்தனமாக, திருட்டுத்தனமாக நச்சுக் கழிவுகளை cusecs pipe மூலமாக அகற்றுகின்றார்கள். அதைக் கண்காணிப்பதற்குக் கேமராவும் கிடையாது; காவலாளியும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலகத்திலிருந்து கேமரா மூலமாக cusecs pipe–ஐக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். அது முறையாகக் கண்காணிக்கப்பட்டுதான் வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் குறிப்பிட விரும்புகிறேன். படிப்படியாகத்தான் மாசைக் குறைக்க முடியும். அந்த முயற்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும் இந்த அரசு முழுக் கவனமுடன் இருக்கின்றது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: இந்தப் பணிகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மறுபடியும் இதை ஆய்வு செய்யுங்கள். அங்கு கேமரா இல்லையென்றுதான் நான் சொல்ல வருகிறேன். எனவே, அங்கு கேமரா இருக்கிறதோ, இல்லையோ நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சட்டமன்றப் பேரவையில் எல்லோருக்கும் முன்பாக நான் உங்களிடம் கோரிக்கை வைக்கின்றேன்.

அதேபோல, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்–அவசர அவசரமாக–80 ஆயிரம் கோடி ரூபாய் சொத்து மதிப்புள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அரசாங்கம் கைப்பற்றி, இன்றையதினம் அது அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. ஆனால், அங்குள்ள 15,000 பணியாளர்களுக்கு இதுநாள் வரையில் சம்பளம் வழங்கப்படவில்லை. சம்பளம் பெறுவது தொடர்பாக நிதித் துறைச் செயலாளர் மற்றும் உயர் கல்வித் துறைச் செயலாளர்

2017 மார்ச் 23] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

ஆகியோரைப் பணியாளர்கள் சங்கத்தினுடைய தோழர்கள் எல்லோரும் மாதா மாதம் சந்தித்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிருவாகத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களையும் மற்ற பணியாளர்களையும் மாற்றுப் பணி மூலமாக வெளியில் பணிபுரிய அனுப்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் சரிவர நடைபெறவில்லை. 300 பேராசிரியர்களை மட்டும்தான் மாற்றுப் பணி அடிப்படையில் வெளியில் அனுப்பியிருக்கிறார்கள். மேற்கொண்டு பணியாளர்கள் யாரையும் அனுப்பவில்லை. பல்கலைக்கழக நிருவாகம் சரியாக நடைபெறவில்லை. பணியாளர்களுக்குச் சம்பளம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழகம் முழுவதுமுள்ள இளைஞர்கள் படித்த பல்கலைக்கழகம். பெரிய அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் படித்த பல்கலைக்கழகம். அந்தப் பல்கலைக்கழகத்திலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனுடைய அடிப்படைத் தன்மை முழுமையாகத் தெரியாமல் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நிருவாகச் சீர்கேட்டினால் அதில் இருக்கக்கூடிய பணியாளர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற ஒரே எண்ணத்தோடு, மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அரசுடைமையாக்கினார்கள். 6,000 பணியாளர்கள் பணிபுரிய வேண்டிய இடத்தில் இன்றைக்கு 12,005 பணியாளர்களை பணி நியமனம் செய்து, மாதம் ரூபாய் 15,000 சம்பளம் வாங்கியவர்களின் சம்பளத்தை இன்று ரூபாய் 1 இலட்சம் அளவிற்கு உயர்த்தியுள்ளார்கள். நிருவாகச் சீர்கேட்டினால் பாதிக்கப்பட்டிருந்த பேராசிரியர்களையும் மற்ற பணியாளர்களையும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிருவாகத்தைக் கையிலே எடுத்து அதன் மூலமாக இன்று வரை

[திரு. கே.பி. அன்பழகன்] [2017 மார்ச் 23

அதாவது கடந்த மாதம் வரை அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார். அவர்களைக் காக்கின்ற வகையிலேதான் கூடுதலாக இருக்கக்கூடிய பணியாளர்களுக்கெல்லாம் இன்றைக்கு மாற்றுப் பணி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 369 நபர்களுக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணி நியமனம் வழங்கப்பட்டு சரியான முறையில் ஊதியம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த பிப்ரவரி மாதம் வரை அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மார்ச் மாதம் முடிந்தால்தான் அவர்களுக்குச் சம்பளம் வழங்கக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, எந்த வகையிலும் அரசு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைக் கைவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூன்று, நான்காண்டுக் காலமாக 6,000 பேருக்கு சம்பளம் வழங்கிக்கொண்டுதான் இருக்கிறது. அவர்களுக்கு மாற்றுப் பணி வழங்கி அதைச் சீரான முறையிலே கொண்டு செல்வதற்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆடுகள் மற்றும் மாடுகள் வழங்கும் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார். அதுகுறித்து ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டுக் காலத்தில் 12,524 கிராம ஊராட்சிகளிலுமே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே ஆடு வழங்கவில்லை. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய கிராம நிருவாக அதிகாரி, கால்நடைத் துறை மருத்துவர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் என அத்தனைபேரும் சேர்ந்து தேர்வு செய்கின்ற அந்தப் பயனாளிகளுக்குத்தான் ஆடு வழங்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 இலட்சம் குடும்பங்களுக்கு 28 இலட்சம் ஆடுகளை வழங்கி பெருமை சேர்த்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு

உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தினை தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் வரவேற்ற காரணத்தினால்தான் 5 ஆண்டுகள் முடிந்த நிலையிலும், 6–வது ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தி கிடைக்காதவர்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்களை 2 மணிக்கு முடிக்கச் சொன்னேன்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: எங்கே பேச விடுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களது உரையை 5 நிமிடங்களில் முடியுங்கள். நேரம் இல்லை.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினைப் பற்றிப் பேசினால் மாடு பற்றிப் பேசுகிறார். நான் என்ன செய்வது? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 5 நிமிடங்களில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்பு பேசுகின்றபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்தவர்கள் மட்டும்தான் பயனாளிகளாகத் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்று சொன்னார். அதற்காகத்தான் அது சொல்லப்பட்டது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற அத்தனை பேராசிரியர்களுக்கும் கடந்த பிப்ரவரி மாதம் வரை சம்பளம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் என்னால் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்ட முடியும். தற்போது நடைபெறுகின்ற மார்ச் மாதத்திற்குத்தான் இந்த மாதம் முடிந்த பிறகு சம்பளம் வழங்கப்படவேண்டும். அவர்களுக்கு மாற்றுப் பணி வழங்கப்படுகிறது. அவர்கள் யாருமே வீட்டுக்கு அனுப்பக்கூடிய நிலையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் உங்களது உரையை 5 நிமிடங்களில் முடியுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியாகப் பதில் சொல்லவில்லை. (குறுக்கீடு) ஒரு நிமிடம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எனக்கு நேரம் இல்லை. (குறுக்கீடு) 5 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பணியாளர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். தற்போதுகூட அமைச்சர் அவர்கள் மழுப்பலாகப் பதில் சொல்கிறார்கள். இந்த மாதம் முடிந்துதான் சம்பளம் என்கிறார். மாதச் சம்பளம் 28 ஆம் தேதிதான் கொடுக்க வேண்டும். 30 ஆம் தேதிதான் கொடுக்க வேண்டும். மார்ச் மாதம் முடிந்து அடுத்த மாதம் கொடுக்கப் போகிறோம் என்கிறார். இதிலேயே இவருடைய தவறுகள் தெரிகின்றன. ஆனால் இவர்கள் கொடுத்தது 300 பேர்களுக்குத்தான்; 300 நபர்களுக்குத்தான் வேலை கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரிடம் பணி செய்கின்ற பணியாளர்களுக்கு மாதத்தின் 15 ஆம் தேதியே சம்பளம் கொடுத்துவிடுவார்களா? அந்த மாதம் முழுமையாக முடிந்த பிறகுதான் சம்பளம் வழங்கப்படும். அதை முதலிலே தெரிந்துகொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த பேராசியர்களும் போராட்டம் செய்தார்கள். அதற்குப் பிறகு, தற்போதுதான் இரண்டு மாத சம்பளத்தினைக் கொடுத்தீர்கள். ஆனால், சென்ற மாத சம்பளம் இன்னும் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். (குறுக்கீடு) எனக்கு கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

2017 மார்ச் 23]

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *உங்கள் எல்லோர் முன்பும் மந்திரி சொல்லிவிட்டார். இந்த மாதச் சம்பளம் ஒழுங்காக வரும் என்று சொல்லிவிட்டார். இதனை நிதித் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் பார்த்ததும் உண்மைதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முடியுங்கள். இன்னும் மூன்று நிமிடங்களில் முடியுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம். எங்களுடைய மாவட்டம் எல்லாவற்றிலும் பாதிக்கப்படுகின்றது. கடலூர் மாவட்டம், மழை வந்தாலும் பாதிக்கின்றது, வெள்ளம் வந்தாலும் பாதிக்கின்றது, தானே புயலால் பாதிக்கின்றது, வர்தா புயலால் பாதிக்கின்றது, எல்லா புயலிலும் பாதிக்கிறது, வெள்ளத்திலும் பாதிக்கிறது. வறட்சி என்றால் சுத்தமாக எதுவும் கிடையாது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்தா புயலால் பாதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வர்தா புயல் வந்த இடமே தெரியாத அளவிற்கு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு மக்களைக் காப்பாற்றிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல் இன்றைக்கு வறட்சி மாநிலமாகத் தமிழகத்தினை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், 30 மாவட்டங்களுக்கும் I.A.S. அதிகாரிகளை அனுப்பி கணக்கெடுத்து ரூ.2,247 கோடியை வாரி வழங்கிய அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பத்து, பதினைந்து நாட்களுக்குள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வர வேண்டிய நிதியும் அந்த விவசாயிகளுக்கு வர இருக்கின்றது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடலூர் மாவட்டத்திற்கு 65,714 ஹெக்டேருக்கு 66 கோடியே 16 இலட்சம் ரூபாயை 84,192*

[திரு. இரா. துரைக்கண்ணு] [2017 மார்ச் 23

விவசாயிகளுக்கு வாரி வழங்கிய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பன்னீர்செல்வம் முடியுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதேனும் ஓர் இலாகா பற்றிச் சொன்னால் உடனே அந்த மந்திரி எழுந்து பேசுகிறார். நான் என்ன சொல்ல வருகிறேன் என்பது பற்றி புரியாமலேயே மந்திரி பேசுகிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுவதைவிட அறிவுரை சொல்வதுதான் அதிகமாக இருக்கின்றது. (குறுக்கீடு) பட்ஜெட்டில் நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) பட்ஜெட்டில் பேசுங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 2–05

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: கடலூர் மாவட்டத்தில் 9 தாலுகாக்கள் இருக்கின்றன. 9 தாலுகாக்களிலும் வறட்சி உண்டு. ஆனால் அவர்கள் 6 தாலுகாக்களுக்கு மட்டும்தான் நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். கடலூர், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி தாலுகாக்களுக்குக் கொடுக்கவில்லை. கடலூரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் தொகுதியிலே கொடுக்கவில்லை. கடலூர் தாலுகாவிற்குக் கொடுக்கவில்லை. கடலூர் தாலுகாவிற்கு வறட்சி இல்லையா? தமிழகம் முழுவதும் வறட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கடலூர் block office, அண்ணாகிராமம் block office எல்லாம் borewell உள்ள இடம். அவர் பகுதியெல்லாம் டெல்டா பகுதி. காவேரி டெல்டா பகுதி பாசன பகுதி. ஒட்டுமொத்தமாக வறட்சி. அதை அறிந்துதான்

63,000 ஹெக்டேருக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. எந்த விவசாயிக்கும் வழங்கப்படாமல் இல்லை. எந்தெந்த விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டார்களோ அவர்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், தானே புயல், பெருமழை, பெருவெள்ளம், அனைத்திற்கும் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானே புயல் ஏற்பட்டாலும் சரி, பெருமழை, பெருவெள்ளம் ஏற்பட்டாலும் சரி, சுனாமி பாதிப்பு ஏற்பட்டாலும் சரி ஓடோடி வந்து முதற்கட்டமாக உதவி செய்தவர் மாபெரும் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாள் அமைச்சர் அவர்களை நான் அங்கே தேடிப்பார்த்தேன். எங்கேயும் கிடைக்கவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையை ஏற்று, கட்டளையை ஏற்று, உத்தரவை ஏற்று ஓடோடி, ஒட்டுமொத்த மாவட்ட மக்களுக்கும் முழுமையாகப் பணியாற்றிய ஓர் அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டில் வட கிழக்குப் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சி நிலையினைக் கருதி 10.1.2017 அன்று தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே 33 சதவிகிதத்திற்கு மேலே எங்கெல்லாம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையிலே ஐம்பது இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து நூற்று இருபத்தேழு ஏக்கர் நிலங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 32,30,191 விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் கண்டறியப்பட்டிருக்கிறது. அதுபோல நேற்றுகூட சொன்னார்கள், ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மட்டுமே கொடுக்கிறீர்கள். மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2017 மார்ச் 23

என்று. இது தமிழக அரசு விதித்த விதிமுறைகள் அல்ல. இதுபோன்ற வறட்சி நிவாரணங்களைப் பெறுவதற்கு நடுவண் அரசு விதித்த விதிமுறைகள் இவை. இது வறட்சி நிவாரணங்களுக்குத்தான். காப்பீடு மூலமாகப் பயிர் இழப்பீட்டை அனைத்து விவசாயிகளும் பெறலாம். இந்திய வரலாற்றிலேயே 410 கோடி ரூபாயை காப்பீடுக்காக வழங்கிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நடுவண் அரசும் 410 கோடி ரூபாய் கொடுக்கிறது. 5 ஏக்கர், 10 ஏக்கர், 15 ஏக்கர், 20 ஏக்கர் என எத்தனை ஏக்கர் வைத்திருந்தாலும், அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அந்த காப்பீடு மூலமாக இழப்பீடு முழுமையாக வரும். எங்கெங்கெல்லாம் 33 சதவிகிதம் பாதிப்பு இருந்ததோ அங்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்லாமல் இங்கே விடுபட்டிருக்கிறது, அங்கே விடுபட்டிருக்கிறது என்று ஆதாரத்தோடு சொல்வார்களேயானால் அதையும் கணக்கிலே எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் 1–27–க்கு பேச ஆரம்பித்து இப்பொழுது மணி 2–08 ஆகிவிட்டது. இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: இன்னும் பேசவேயில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் சொல்கிறீர்கள் 33 சதவிகிதம், 20 சதவிகிதம் என்று. வறட்சி என்றில்லாமல், தண்ணீர் இருந்தாலும், இல்லையென்றாலும் கோடையில் வெப்பத்தினால் பயிரின் மகசூல் குறையும். அந்த இழப்பீட்டை நீங்கள் கணக்கிட வேண்டும். 33 சதவிகிதம் என்று கணக்கு வைத்துள்ளீர்கள். கலைஞர் ஆட்சியில், வறட்சி என்றால், அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டது. 5 ஏக்கர் என்று கணக்குக் கிடையாது. 5 ஏக்கருக்குக் கொடுத்துவிட்டு எங்களை ஏமாற்றுகிறீர்கள். 50 காணி வைத்திருக்கும் என்னைப்போன்ற விவசாயிகள் என்ன செய்வது? நான் விவசாயி இல்லையா?

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்காக நிவாரணம் அளித்தது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதானே தவிர, இவர்களுடைய தலைவர் இல்லை என்பதை இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *5 ஏக்கர் வரையில் வைத்திருந்தால் விவசாயி. அதற்குமேல் வைத்திருந்தால் விவசாயி இல்லையா? நாங்களும் பாதிக்கப்படுகிறோம். நாங்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தானே?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 2–10

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், 'நீங்கள் ஏமாற்றுகிறீர்கள், அவர்கள் ஆட்சியில்தான் கொடுத்தோம்' என்று சொல்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், இதற்கு முன்பாக வருவாய்த் துறை வரலாற்றிலே பேரிடர் மேலாண்மை என்பதன்கீழ் நிலச்சரிவு, வெள்ளம், சுனாமி இவற்றிற்குத்தான் நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். முதன்முதலாக வறட்சிக்காக நிவாரணத் தொகுப்பை வழங்கிய ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏமாற்றுகிறீர்கள் என்கிறார்கள். ஏமாற்ற முடியாது. மத்தியக் குழு வந்து ஆய்வு செய்து, அவர்கள் கொடுக்கின்ற ஆய்வறிக்கையின் அடிப்படையில்தான் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. பொத்தாம் பொதுவாக யாரும் இழப்பீட்டுத் தொகையைக் கொடுப்பதில்லை. வேளாண்மைத் துறை, புள்ளியியல் துறை, வருவாய்த் துறை ஆகிய மூன்று துறைகளும் இணைந்து உரிய கணக்கீட்டை எடுத்த பிறகு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இந்த விதிமுறைகளை மாநில அரசு விதிக்கவில்லை. நடுவண்*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2017 மார்ச் 23

அரசுதான் விதித்திருக்கிறது. 33 சதவிகிதத்திற்கு மேல் 50 இலட்சத்து 35 ஆயிரத்து 127 ஏக்கர் நிலங்கள்/பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகளுக்கு, ஏறத்தாழ 2,247 கோடி ரூபாயை வறட்சி நிவாரணமாக வழங்கிய அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதில் யாரையும் ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் கனிவோடு, மக்களுடைய துன்பங்களை, துயரங்களைத் துடைத்து, விவசாயிகளுடைய துன்பங்களை, துயரங்களைத் துடைப்பதற்கு திட்டங்களை போர்க்கால அடிப்படையில் செயல்படுத்துகிறது. மாநில அரசின் கோரிக்கைகள் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கின்றபோதுகூட, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் உடனடியாக அரசாணை வெளியிட்டு, நிதியை ஒதுக்கீடு செய்த அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உங்கள் உரையை முடித்து, எனக்கு உதவி செய்யுங்கள். நேரமில்லை.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அரசு, மத்திய அரசிடமிருந்து பணத்தை வாங்கித் தருவதாக ஒப்புக்கொள்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, ஒரு clarification–ம் வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) சிக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: முக்கியமான விஷயமாகும். அனைவரும் விவசாயிகள். அவர்களிடம் பணம் கிடையாது. அவர்கள் எல்லாம் பணத்தை செலவழித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் 1–27–க்கு உரையை ஆரம்பித்தார், சப்ஜெக்ட்டுக்கே வராமல், வம்பு இழுத்து, 2–11 மணி வரையில் கொண்டு போய்விட்டார். எப்படி நான் சபையை நடத்துவது?

மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம், உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம்தான். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய பிரச்சினை. கரும்புக்கு இன்னும் பணம் தரவில்லை. எனக்கு, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் இப்போதைக்கு உரையை முடிக்க மாட்டார். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் 1–27–க்கு பேச ஆரம்பித்தார். இப்போது இரண்டு மணி 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, கடலூர் மாவட்ட அமைச்சர் தொகுதியில் இருக்கக்கூடிய குப்பைகள் எல்லாம் தன்னுடைய தொகுதியில் கொட்டப்படுகின்றன என்று குப்பைக் கிடங்கைப் பற்றிப் பேசினார்கள். பச்சான்குப்பத்தில், கடந்த 50 ஆண்டுகளாக அந்தக் குப்பைக் கிடங்கு செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், 2016–2017 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் ரூ.5.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மாற்று ஏற்பாடாக

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 மார்ச் 23

வசந்தராயன்பாளையத்தில் பணி நடைபெற்று வருகிறது. மே மாத இறுதிக்குள் பணிகள் முடிக்கப்பட்டு, குப்பைக் கிடங்கு மாற்றும் பணி துவங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்கு நீங்கள் பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்குப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்குப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியாக 2 மணி 13 நிமிடத்திற்கு சரியான பசி நேரத்திலே, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு, இப்போது வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்திற்கு சென்றபோது, இரவு 10–00 மணிக்கு மேலாகிவிட்டது. நேரம் அதிகமாகிவிட்டது. ஐந்து நிமிடங்களுக்குள் சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள் என்று அண்ணா அவர்களிடத்தில் சொன்னார்கள். அதற்கு "மாதமோ சித்திரை, நேரமோ பத்தரை, மக்களுக்கோ நித்திரை, போடுங்கள் வாக்கு என்னும் முத்திரை" என்று சுருக்கமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆகவே, சுருக்கமாக, எனக்கு வாய்ப்புத் தராமல் எதிர்க்கட்சி உறுப்பினருக்குக் கொடுத்த நேரத்தைவிட சற்று குறைவாகவே, 30 நிமிடங்கள் எனக்குக் கொடுத்தால் போதுமானது.

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய உங்கள்மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை முறியடித்து, வெற்றி வாகை சூடி மீண்டும் இந்த ஆசனத்திலே அமர்ந்திருக்கின்ற உங்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டல மக்களுடைய 50 ஆண்டுக் கால கோரிக்கையான அத்திக்கடவு–அவினாசி திட்டத்திற்காக 250 கோடி ரூபாய் நிதியை தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே செயல்படும் அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கி, கொங்கு மண்டல மக்களுடைய நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றித் தந்ததற்கு (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்துறை தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் மக்கள் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தலிலே, கொங்கு மண்டலத்தை உள்ளடக்கியிருக்கிற 14 தொகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டார்கள். ஈரோடு மாவட்டம், எனது பெருந்துறை தொகுதியில் அம்மா அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிற 8 தொகுதிகளிலும் கொட்டிக் கொடுத்த மாவட்டம் ஈரோடு மாவட்டம் என்கிற பெருமையைப் பெற்றுக் கொடுத்தது எங்கள் மாவட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது விதி 110–ன்கீழே பெருந்துறை தொகுதி மக்களுடைய தாகம் தீர்க்கிற வகையிலே கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 125 கோடி ரூபாயில் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று எனது கோரிக்கையாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதிப் பற்றாக்குறை இருப்பதாகவும், கடுமையான நிதிச் சுமையிலே தமிழக அரசு இருப்பதாகவும் எனக்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். கடன் கொடுப்பதற்காகத்தான் உலக வங்கி இருக்கிறது. இந்தியாவே கடன் வாங்குகிற நாடாக உள்ளது. கடலளவு கடன் வாங்கிவிட்டு, கையளவு மக்களுக்குச் செய்வதுதான் தவறு. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே கையளவு கடன் வாங்கி கடலளவு மக்களுக்குச் செய்கிற அரசு அண்ணா

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [*2017 மார்ச் 23*

திராவிட முன்னேற்றக் கழக அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வரியில்லாத பட்ஜெட் என்று நாங்கள் சொல்லுகிறோம். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சரியில்லாத பட்ஜெட் என்று சொல்கிறார்கள். ஆனால், மக்கள் இது சரியான அரசு என்று தீர்மானித்துத்தான் மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்னாலே பேசிய முன்னாள் அமைச்சர் அவர்கள் விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கக்கூடிய திட்டத்தைப் பற்றி இங்கு சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பது ஏழைகளுக்கான அரசு. ஆடு, மாடுகள் வழங்கக்கூடிய திட்டத்தின்கீழ் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏழையெளிய மக்களுக்காக, வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட அற்புதமான திட்டம் இது. வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிற பெண்கள் யாரிடத்திலும் அடிமைத்தனமாக வேலை செய்யக் கூடாது. தாங்களே சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டுமென்கிற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட திட்டம்தான் இந்த ஆடு, மாடுகள் வழங்கக்கூடிய திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆடு, மாடுகள் வழங்கக்கூடிய திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்று மக்கள் மத்தியிலே சொல்வதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதைத்தான் இந்த நேரத்திலே உங்களைப் பார்த்து நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணும் அச்சமும் தாய்க்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ?"

2017 மார்ச் 23] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

இது பாரதி கண்ட புதுமைப் பெண் என்ற காவியத்தில் இருக்கிறது.

பெண்கள் நினைத்தால் தங்கள் தலையெழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலையெழுத்தையும் மாற்ற முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, பெண்களுக்குத் தேவை வாய்ப்புகள். "பெண்களுக்குத் தேவையான அந்த வாய்ப்புகளை வழங்குவதே எனது இலட்சியம்" என்று சொன்னவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவினுடைய தலைசிறந்த சாதனைப் பெண்களான அன்னை தெரசா, கல்பனா சாவ்லா, ஜான்சி ராணி, வேலுநாச்சியார், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி போன்றவர்களுடைய வரிசையில், "இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற பொன்மனச் செம்மலின் பாடல் வரிகளுக்கிணையாக வாழ்ந்து காட்டியவர் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் மீதான பொது விவாதத்தில் நான் கலந்துகொண்டு பேசினாலும்கூட, இன்றைக்குப் பேசுகிற பேச்சில், பெண்களை மையப்படுத்தி, அம்மா அவர்கள் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை எப்படி தமிழகத்தில் கைத்தூக்கி விட்டார்கள்; இந்தியாவில் இருக்கக்கூடிய 36 மாநிலங்களிலும் பெண்களுக்கு இல்லாத பெருமையாக தமிழகத்திலே பெண்களின் வாழ்க்கைத் தரத்தை அம்மா அவர்கள் எவ்வாறு உயர்த்திக் காட்டினார்கள் என்பதை இந்த நேரத்தில் உங்கள் மத்தியில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் அமைக்கப்பெற்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறது. தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில், பெண்களுக்குத் தாலிக்குத் தங்கம் வழங்கக்கூடிய திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணத்திலே உதித்த அற்புதமான திட்டம் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்.

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [*2017 மார்ச் 23*

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காக கிராமப்புறங்களுக்குச் செல்லும்போது, அம்மா அவர்களைச் சுற்றி பெண்கள் கூட்டம் திரளாக கூடியிருக்கும். அம்மா அவர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்லும்போது, அந்தப் பெண்களைப் பார்க்கும்போது, பெண்கள் வெறும் மஞ்சள் கயிறு அணிந்து, நின்று கொண்டிருப்பார்கள். தமிழகத்தில் இன்னும் ஒரு குண்டுமணி அளவுக்குக்கூட தாலிக்குத் தங்கம் இல்லாமல் இப்படிப்பட்ட ஏழையெளிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்திலுள்ள பெண்கள் ஒரு குண்டுமணி அளவிற்காவது தாலிக்குத் தங்கம் அணிந்திருக்க வேண்டும் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் நான் முதலமைச்சராக ஆட்சிக்கு வந்தால் 4 கிராம் தங்கத்துடன் பத்தாம் வகுப்பு படித்திருந்தால் 25 ஆயிரம் ரூபாயும், பட்டப்படிப்பு படித்திருந்தால் 50 ஆயிரம் ரூபாயும் வழங்குவேன் என்று தேர்தல் வாக்குறுதியிலே சொன்னார்கள். 2011 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றதும் உடனடியாக தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கல்வித் துறையில் தமிழகத்தை தலைநிமிரச் செய்ய வேண்டும். அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்தத் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தில் இரண்டு நிலைப்பாடுகள் இருக்கின்றன. ஏழையெளிய பெண்கள் கழுத்தில் தாலிக்குத் தங்கம் அணிந்திருக்க வேண்டும் என்பது ஒரு நிலைப்பாடு. மற்றொரு நிலைப்பாடு, தங்கத்தை பெறுவதற்காகவாவது 10 ஆம் வகுப்பு வரை படிக்க வேண்டும் என்கிற எண்ணம் பெண்கள் மனதில் ஏற்படும். அந்த அடிப்படையில், தமிழகத்தில் கல்வித் தரத்தை உயர்த்த முடியும் என்கிற இரட்டைத் தொலைநோக்குச் சிந்தனையோடு அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம். அந்தத் திட்டம் ஒட்டுமொத்த தமிழக மக்களுடைய பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4 கிராம் தங்கம், இந்த முறை மீண்டும் ஆட்சிக்கு வந்தால் 8 கிராம் தங்கமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருமணத்திற்குப் பிறகு ஒரு பெண் கர்ப்பமடைவார். நான் பெண்ணைப் பற்றி சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.

2017 மார்ச் 23] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் கர்ப்பிணிப் பெண்கள் ஆரோக்கியத்தோடு, மனநிறைவோடு சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; வறுமை காரணமாக கர்ப்பிணிப் பெண்களுக்கு எந்தவிதமான குந்தகமும் வந்துவிடக் கூடாது என்று சொல்லி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் நினைவாக 12,000 ரூபாயை அம்மா அவர்கள் கடந்த ஆட்சியில் வழங்கினார்கள். இந்தத் தேர்தல் அறிக்கையில், 12,000 ரூபாய் என்பது 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடனடி உத்தரவின்பேரில் உதவித் தொகை ரூ.18,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் நினைவாக வழங்கப்படுகிறது. இந்தச் சட்டமன்றப் பேரவையின் முதல் பெண் உறுப்பினர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி ஆவார். தேவதாசி முறையை ஒழிப்பதற்காக, தமிழகத்தில் ஒரு சுதந்திர வேட்கையை நடத்தியவர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள். அவர் ஒரு டாக்டர். அவருடைய நினைவாக இந்தத் திட்டம் தமிழகத்திலே சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. ஆக, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

பிற்பகல் 2–25

கிராமப்புறங்களில் வாழக்கூடிய கர்ப்பிணிப் பெண்களை கர்ப்ப காலத்திலே புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டிற்குப் பிரசவத்திற்காக அனுப்புவார்கள். அப்படி அனுப்புகின்றபோது அந்தப் பெண்ணுக்கு வளைகாப்பு நடத்துவார்கள். அந்தப் பெண்ணை அமரவைத்து, பல்வேறு சீர்வரிசைகளை வைத்து, கையிலே வளையலிட்டு, அறுசுவை உணவிட்டு, குங்குமம் இட்டு, திலகமிட்டு, புகுந்த வீட்டிலேயிருந்து பிறந்த வீட்டிற்கு அனுப்பி வைக்கக்கூடிய ஒரு நிகழ்வுதான் வளைகாப்பு நடத்துகின்ற நிகழ்வு. அதைக் கோடீஸ்வரர் வீட்டிலே இருக்கின்ற பெண்கள் கொண்டாடுவார்கள். ஏழை குடிசையிலே இருக்கின்ற பெண்களுக்கும் அந்த வளைகாப்பு நிகழ்வைக் கட்டாயம் நடத்த வேண்டுமென்று சொல்லி, கர்ப்பமாக இருக்கின்ற பெண்களுக்கு அரசாங்கமே வளைகாப்பு நடத்தும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிட்டு பெண்களுக்குப் பெருமை சேர்த்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2017 மார்ச் 23

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்) தலைமை)

பெண் அரசுப் பணியாளர்களுக்கு 6 மாத கால மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என்று சொன்னார்கள். 6 மாதக் காலமாக இருந்த மகப்பேறு விடுப்பை 9 மாதக் காலமாக உயர்த்தி அறிவித்து அதை நடைமுறைப்படுத்தி பெண்களுக்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கர்ப்பிணியாக இருக்கின்ற பெண், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, குழந்தை பிறந்ததும் உடனடியாகப் பரிசுப் பெட்டகம் வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களுக்காகக் கொண்டுவந்த மற்றுமொரு திட்டம். அம்மா அவர்கள் உத்தரவிட்டு அந்தப்பரிசுப்பெட்டகத்தை வழங்கினார்கள். அந்தப் பரிசுப் பெட்டகத்திலே பல்வேறு பொருட்கள் இருக்கின்றன. அதைப் பற்றிக் குறிப்பிடாவிட்டாலும்கூட, ஒரு பொருளைப் பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். அந்தக் குழந்தை பிறந்ததும் அழுகின்றபோது, அந்தத் தாய் சுமையான காலத்திலேகூட குழந்தையினுடைய அழுகையை நிறுத்த வேண்டுமென்று சொல்வதற்காக அந்தக் குழந்தைக்குக் கிலுகிலுப்பைக் கொடுத்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி பெண்களைப் பேணிப் பாதுகாக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது.

குழந்தை பிறந்த பின்னாலே தாய்ப்பால் சரியாகக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால் அந்தப் பெண்களுக்கு தாய்ப்பால் வங்கியை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. தாய்ப்பால் வங்கி திறக்கப்பட்டு, தாய்ப்பாலை அரசாங்கமே கொடுக்கின்ற ஒரு அற்புதமான திட்டம் தமிழகத்திலேதான் செயல்படுத்தப்படுகிறது. மேலும், அந்தக் குழந்தையை ஓர் இடத்திலேயிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்கின்றபோது, அந்தக் குழந்தைக்குப் பேருந்து நிலையத்திலே பால் கொடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் அந்தப் பெண் எங்கே சென்று நிறைவேற்ற முடியும் என்று எண்ணி, பேருந்து நிலையத்திலே தாய்ப்பால் கொடுப்பதற்காக ஒரு தனி

2017 மார்ச் 23] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

அறையையும் அமைத்துக் கொடுத்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிரசவத்திற்காகச் செல்கின்றபோதுகூட இலவசமாக ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்திக் கொடுத்ததும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிறந்த குழந்தையை அந்தப் பெண் நல்ல முறையிலே பராமரிக்க வேண்டும். பிறக்கின்ற குழந்தை பெண்ணாகப் பிறந்துவிட்டால் அதை வளர்ப்பதற்கு முடியாமல் அந்தக் காலத்திலே கள்ளிப் பாலைக் கொடுத்து கொல்லக்கூடிய ஒரு நிலை இந்த நாட்டில் இருந்தது. ஆனால், தமிழகத்தினுடைய முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னாலே இத்தனை திட்டங்களையும் பெண்களுக்காகத் தந்தார்கள். இத்தனை திட்டங்களைப் பெற்றும்கூட பிறந்த குழந்தையை உங்களால் வளர்க்க முடியாவிட்டால் 'அரசு தொட்டில் குழந்தைத் திட்டம்' என்கின்ற திட்டத்தை நான் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் குழந்தைகளை அந்தத் 'தொட்டில் குழந்தைத் திட்டத்திலே' நீங்கள் சேர்த்துவிடுங்கள், அவர்களை இந்த அரசாங்கமே வளர்க்கும் என்கின்ற ஓர் அற்புதமான திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அன்னை தெரசா அவர்கள் அம்மா அவர்களை நேரடியாகச் சந்தித்து 'நீங்கள் தொட்டில் குழந்தைத் திட்டத்தை கொண்டுவந்து இந்தியாவிற்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்த பெண்மணி' என்று பாராட்டினார்கள். அவ்வாறு பாராட்டப்பெற்ற தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாண்டுக்காலம் குழந்தையைப் பேணி பாதுகாத்தால் போதும். அதற்குப் பின்னால் அங்கன்வாடியில் அம்மா அவர்களுடைய அரசாங்கமே அவர்களைப் பராமரிக்கின்றது. அதற்குப் பின்னாலே பள்ளியிலே சேர்க்கின்றார்கள். அந்த மாணவர்களுக்கு 14 வகையான உபகரணங்களை அம்மா அவர்களுடைய அரசே வழங்குகிறது. பெற்ற குழந்தைகளை நீங்கள் வெறும் கை, கால்களோடு பள்ளிக்கு அனுப்பிவிடுங்கள். அவர்களைப் படிக்க வைக்க வேண்டியது என்னுடைய கடமை என்று அம்மா அவர்கள் திட்டத்தைத் தீட்டினார்கள். 14 வகையான உபகரணங்கள். அதைப் பற்றி ஏற்கெனவே பல்வேறு உறுப்பினர்கள் இங்கு சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், நான்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2017 மார்ச் 23

ஒன்றைச் சொல்ல வேண்டும். 'உன் கண்ணில் நீர் வழிந்தால், என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்று ஒரு கவிஞன் சொன்னான். பிஞ்சுக் குழந்தையின் காலிலே முள்பட்டால் பெற்ற மனம் எவ்வாறு பாடுபடும் என்பதை அறிந்து, பள்ளி செல்கிற குழந்தைக்குக் காலுக்குப் போடுகின்ற செருப்பைக்கூட கொடுத்த முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–30

10 ஆம் வகுப்பு செல்கிறபோது, மிதிவண்டிகளைத் தந்தார்கள். அந்த மிதிவண்டிகளைப் பற்றிப் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். உடற்பயிற்சியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு தொலைநோக்குச் சிந்தனையோடு மிதிவண்டிகளை வழங்கினார்கள். மாணவர்களுடைய நேரமும், காலமும் மிச்சப்படும். 10 ஆம் வகுப்பு செல்கிறபோது அந்தப் பெண் பருவ நிலையை எட்டிவிடுகிறாள். பேருந்திலே செல்கிறபோது அந்தப் பெண்ணுக்குச் சரியான பாதுகாப்பு கிடைக்காது. ஆகவே, நீங்கள் மிதிவண்டிகளிலே செல்லுங்கள். நான் மிதிவண்டி தருகிறேன். நீங்கள் மிதிவண்டியில் செல்வதன் மூலமாக உங்களுக்கு உடற்பயிற்சி ஏற்படும், உடல் திறன் மேம்படும். உங்களுடைய நேரமும், காலமும் மிச்சப்படும் என்கிற பல தொலைநோக்குச் சிந்தனைகளோடு அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் மிதிவண்டி வழங்கக்கூடிய திட்டம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கல்வி கற்றலில் இடைநிற்றலைத் தடுப்பதற்காகப் பல்வேறு திட்டங்கள். கல்வியை ஊக்கப்படுத்துவதற்கான திட்டங்கள். ஆக, இப்படிப் பல்வேறு திட்டங்கள்.

பெண்களுடைய நிலை மேம்படுவதற்காக அம்மா அவர்கள் உள்ளாட்சியிலே பெண்களுக்கு 50 சதவிகிதம் இடஒதுக்கீடு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் பெண்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று இந்தியாவிலே எந்த மாநில முதலமைச்சரும் சொல்லவேண்டுமென்று சொன்னால், அம்மா அவர்களை எண்ணிப்பார்த்துத்தான் சொல்ல வேண்டும் என்கிற ஒரு நிலையை அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியிலே 50 சதவிகிதம் இடஒதுக்கீடு.

2017 மார்ச் 23] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

பள்ளி செல்லும் வளரிளம் பெண்களுக்கு சானிடரி நேப்கின்கள் வழங்கக்கூடிய திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆக, பெண்களுக்கு இத்தனைத் திட்டங்கள்.

இன்றைக்கு உள்ளாட்சியிலே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் நூறு நாள் வேலை என்பதை பெண்களுக்கு 150 நாட்களாக உயர்த்திக் கொடுத்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கையிலே வேலைக்குச் செல்லும் பெண்களுக்கான ஓர் அருமையான திட்டத்தை அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். இது இன்றைக்கு நாடு போற்றுகிற திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் ஆனதும் இந்தத் திட்டத்திற்காக முதல் கையெழுத்தும் இட்டார்கள். அதாவது வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு 50 சதவிகித அரசு மானியத்திலே இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று உத்தரவிட்ட அம்மா அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே பிறந்த பெண்கள், அவர்கள் பள்ளிக் கல்வியை முடிக்கிறபோது, 10 ஆம் வகுப்பிலே ரூ.1,500/– உதவித் தொகை, 11 ஆம் வகுப்பிலே ரூ.1,500/– ஊக்கத் தொகை, 12 ஆம் வகுப்பிலே ரூ.2,000/– ஊக்கத் தொகை, அந்தப் பெண் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிக்குச் செல்கிறபோது ரூ.5 ஆயிரத்தை மேல்கல்வி படிப்பதற்காக அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து அழகு பார்த்த முதலமைச்சர் நமது மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, இப்படிப் பல்வேறு திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முதல் தலைமுறைப் பட்டதாரிகளின் படிப்புச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்கிற ஓர் அற்புதமான திட்டம். எனவே, வாழ்கின்ற காமராஜராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்தார்கள். வரலாற்றிலே அவருடைய புகழ் என்றைக்கும் நிலைத்திருக்கிற வகையிலே, அந்தத் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். ஆக, அதைப்போல இன்னும் பல்வேறு திட்டங்கள்.

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [*2017 மார்ச் 23*

பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று சொல்லி, மகளிர் சுய உதவிக் குழுக்களை தமிழ்நாட்டிலே அமைத்து, அதை மேம்படுத்திக் காட்டியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 'ஏழைகள் ஏழைகளாகவே இருந்துவிடக் கூடாது. அவர்களது நிலை உயர வேண்டும். அதற்காகவே அல்லும் பகலும் நான் அயராது உழைத்து வருகிறேன்' என்று சொன்னார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 'நான் நிரந்தரமானவன். அழிவில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணம் இல்லை' என்று சொன்னார் கவிஞர் கண்ணதாசன். ஆக, அதைப்போல அம்மா அவர்களுக்கு என்றைக்கும் மரணம் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெண்களுக்கான திட்டங்களைப் பற்றி இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பெண்களுக்காக கிரைண்டர், மிக்ஸி, மின் விசிறி கொடுத்தார். ஆக, இவையெல்லாம் பெண்களுக்காகவே கொண்டு வரப்பட்ட திட்டங்கள். இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலேயே பெண்களுக்காக இத்தனை திட்டங்களைக் கொடுத்து, பெண்களுடைய நிலையை உயர்த்திக் காட்டிய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், தமிழ்நாட்டிலே இருக்கிற ஓட்டுமொத்த தாய்க்குலமும் இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தேர்தலிலே வாக்களித்து, மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2–35

அடுத்தபடியாக,

> "தனியொருவனுக் குணவிலை யெனில்
> ஜகத்தினை யழித்திடு வோம்"

என்று சொன்னார் மகாகவி பாரதி. தமிழ்நாட்டில் இரவு நேரத்திலே எந்தவொரு தனி மனிதனும் பசியோடு உறங்கச் செல்லக் கூடாது என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள் விலையில்லா அரிசி திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட ஒரு முறை "மூன்று படி அரிசி எனது இலட்சியம், ஒரு படி அரிசி நான் போடுவது நிச்சயம்" என்று சொன்னார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 20

2017 மார்ச் 23] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

கிலோ விலையில்லா அரிசி திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் பொன்னி அரிசியைப்போல அற்புதமான அரிசியை அம்மா அவர்கள் வழங்கினார்கள். ஆக, இந்தத் திட்டத்தின் மூலமாக அம்மா அவர்கள் எந்தவிதத்திலும் பெயர்பெற்றுவிடக் கூடாது என்று சொல்லி, அன்றைக்கு இருந்த மத்திய காங்கிரஸ் அரசாங்கம் உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்; 'வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு நாங்கள் அரிசி தருகிறோம்; வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு எங்களால் மானிய விலையிலே அரிசி தர முடியாது' என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்கு 20 கிலோ அரிசியை இன்றைக்கும் தந்துகொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு, சொல்லுங்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: 'என்னதான் மத்திய அரசாங்கம் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும்கூட, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கும் நான் உள்ளவரை, எனது அரசு, அரிசி வழங்கும்' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுவரை 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் தமிழகத்திலே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இன்றைக்குக் கடுமையான வறட்சி இருந்தாலும்கூட, ரேஷன் அரிசியின் மூலமாக, தங்கள் வாழ்க்கையை மக்கள் தினந்தோறும் நடத்திக்கொண்டிருக்கின்றனர். இரவு நேரம் உட்பட மூன்று வேளையும் தமிழகத்தில் மக்கள் வயிறார உணவு உண்டு கொண்டிருக்கின்றனர் என்று சொன்னால் அம்மா அவர்களை இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்க வேண்டும். மேலும், படித்த இளைஞர்கள் தலைநகரங்களில் வாழுகின்றபோது அவர்கள் வயிறார உணவு உண்ண வேண்டுமென்ற அடிப்படையில் 'அம்மா உணவகம்' ஏற்படுத்தி, ஒரு ரூபாய்க்கு இட்லி வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆலயங்கள்தோறும் அன்னதானத் திட்டம். ஆலயங்களுக்குச் செல்கிற பக்தர்கள்கூட பசியோடு

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2017 மார்ச் 23

திரும்பிவரக் கூடாது என்று சொல்லி, ஆலயங்களிலே அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்து அதிலே வெற்றியும் கண்டவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது தமிழகத்திலே கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருந்தது. தமிழகத்தினுடைய கஜானாவிலே நிதி கிடையாது. தமிழகத்திலே முழுமையாக மின்சாரமும் கிடையாது. இந்தச் சூழ்நிலையிலேதான் 2011ல் ஆட்சிப் பொறுப்பேற்றார்கள். "எப்பாடுபட்டாவது இந்த மின் பற்றாக்குறையைப் போக்கி தமிழகத்தை மின்மிகை மாநிலமாக நான் மாற்றியே காட்டுவேன்" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சூளுரைத்தார்கள். அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக, இரண்டு ஆண்டுக் காலத்திலே இருண்டு கிடந்த தமிழகத்தில் 24 மணி நேரமும் தடையில்லாத மின்சாரம் என்ற நிலையை மீண்டும் கொண்டு வந்து இந்தத் தமிழக மக்களை வாழ வைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழகத்திலே 24 மணி நேரமும் தடையில்லாத மின்சாரம் என்ற நிலை. இதற்கு அத்தாட்சி என்னவென்று சொன்னால், இந்தத் தேர்தல் அறிக்கையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு வாக்குறுதி தந்தார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆக, கூடுதல் மின்சாரத்தைத் தமிழகம் உற்பத்தி செய்கிற காரணத்தினால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதி, மாண்புமிகு அம்மா அவர்களால் கையெழுத்திடப்பட்டு இன்றைக்கு அனைவரும் தமிழகத்திலே, ஏன்? * அனைத்து உறுப்பினர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) 100 யூனிட் மின்சாரத்தை விலையில்லாமல் வழங்கிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், . . .

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 23] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): அம்மா அவர்களுடைய திட்டங்களை நன்றாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்; அதோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள். நேரமில்லை, அதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: நான் சுருக்கமாக 10 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை; இங்கே இருக்கிற எல்லா உறுப்பினர்களும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய 100 யூனிட் மின்சாரத்தை பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்றுதான் சொன்னேன். வேறு எந்த மாற்றுக் கருத்தோ, குற்றச்சாட்டோ இடையாது.

பிற்பகல் 2–40

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சென்னையில் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினார்கள். இந்தியாவிலிருந்தும், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சர்வதேச முதலீட்டாளர்களுடன் இரண்டரை இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான தொழில் முதலீட்டு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இரண்டரை இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டிற்கான ஒப்பந்தங்கள் போடப்பட்டதற்கான காரணம், தமிழ்நாட்டிலே தடையில்லாத மின்சாரம் இருந்ததுதான். அதனால்தான் பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழில் முதலீட்டாளர்கள் ஓடிவந்து தங்கள் முதலீடுகளைத் தமிழகத்திலே செய்கிறார்கள். தொழில் முதலீடுகள் தமிழகத்திற்கு ஈர்க்கப்படுகின்றன. இதன்மூலம் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குகிற அரசு, நம் அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்குத் தடையில்லாத மின்சாரம், நெசவாளர்களுக்குத் தடையில்லாத மின்சாரம் வழங்கப்படுகிறது. இன்றைக்குக் கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் விலையில்லா மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் விலையில்லா மின்சாரமும் வழங்கி, தமிழ்நாட்டிலே கைத்தறித் தொழிலையும், விசைத்தறித் தொழிலையும் உயர்த்திக் காட்டிய

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2017 மார்ச் 23

முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், பல கோடி ரூபாய் இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் கொண்டுவந்த சீரிய திட்டங்களின்கீழ் இந்த ஐந்தாண்டுக் காலத்தில், 4 பொறியியல் கல்லூரிகள், 4 மருத்துவக் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவேதான், பள்ளிக் கல்வியிலிருந்து உயர் கல்விக்குச் செல்லக்கூடிய மாணவர்களின் சதவிகிதம். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு உறுப்பினர் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: எனவேதான், பள்ளிக் கல்வியிலிருந்து உயர் கல்விக்குச் செல்லக்கூடிய மாணவர்களின் சதவிகிதம் 2011–ல் 23 சதவிகிதமாக இருந்தது, இப்பொழுது 2016–ல் 44.8 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், பள்ளிக் கல்வித் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவு திட்டங்களைத் தந்திருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி, கடைசியாக விவசாயிகள் குறித்த ஒரே ஒரு கருத்தை மட்டும் இந்த இடத்திலே பதிய வைத்து நான் விடைபெறுகிறேன். இங்கு பேசிய பல்வேறு உறுப்பினர்களும் வறட்சி நிவாரணத்தைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை வட கிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்டது. தென்மேற்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டது. இருந்தாலும்கூட, தடங்கலின்றி, தட்டுப்பாடு இல்லாமல் மக்களுக்குக் குடிநீர் கொடுக்கிற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கடுமையான வறட்சியிலும்கூட, 1,000 கோடி ரூபாய் நிதியை இதற்காக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். விவசாயத்திற்கான மத்திய அரசின், 'க்ரிஷி கர்மாண்' விருதினை தமிழகம் பெற்றிருக்கிறது. கடுமையான வறட்சியிலும்கூட, 100 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து சாதனை படைத்திருக்கிற அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்த நேரத்திலே அன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடுமையான வறட்சியின் காரணமாக 7,000 கோடி ரூபாய் பயிர்க் கடன், கூட்டுறவுச் சங்கக் கடன் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. கடுமையான நிதிப் பற்றாக்குறையிலும், விவசாயிகளை வாழவைத்த அரசாக அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கடுமையான நிதிச் சுமை இருந்தாலும்கூட, இது மக்களுக்கான நிதிச் சுமைதான். மக்களுக்குத் திட்டங்களைத் தருகிற நிதிச் சுமைதான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையிலே காலப்போக்கிலே இந்த நிதிச் சுமையைச் சரிசெய்து மக்களுக்கான திட்டங்களைத் தீட்டுகிற அரசாக விளங்கும் என்று இந்த நேரத்திலே சொல்லி, வாய்ப்புக்கு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள். (குறுக்கீடுகள்) இலவசத் திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். விலையில்லா அரிசி 20 கிலோ கொடுக்கிறோம் என்ற செய்தியைச் சொன்னார். எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது என்று சொன்னார். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சி என்று சொல்லவில்லை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் (குறுக்கீடுகள்) இல்லை, ** அதாவது, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், **அனைத்து உறுப்பினர்களுக்கும் என்று அவர் பேசினார். (குறுக்கீடுகள்) அதில் என்னையும் சேர்த்துக்கொண்டார், வேறொன்றுமில்லை. (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். இருக்கட்டும், இருக்கட்டும். (குறுக்கீடுகள்) அனைவருக்கும் 100 யூனிட் இலவச மின்சாரம். (குறுக்கீடுகள்) எல்லாருக்கும் இலவசம். உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 மார்ச் 23

பிற்பகல் 2–45

***திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது அன்னை சோனியா காந்தி அவர்களையும், இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களையும், மாநிலத் தலைவர் திரு. திருநாவுக்கரசர் அவர்களையும், தன்மானத் தலைவர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களையும் வணங்குகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களையும், எங்கள் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. கரி. இராமசாமி அய்யா அவர்களையும், தாராபுரம் தொகுதி, சங்கரண்டம்பாளையம், இளையா பாட்டக்கரை திரு. கணேஷ்சாமி அவர்களையும், V.S.N. ஆறுச்சாமி அவர்களையும் வணங்குகிறேன். எனது தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வறுமை ஒழிப்புத் திட்டத்தின்மூலம் மகளிர் சுய உதவிக் குழு, திறன் பயிற்சி, கடன் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலமாக குறுந் தொழில் நிறுவனங்கள் அமைத்து, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குச் சந்தை தரவு உருவாக்கி இந்த இயக்கத்தை ஊக்குவிக்க நல்ல முறையில் செயல்பட அரசு முழுமையாகக் கவனம் செலுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அரசின் நிதிநிலை அறிக்கையில் வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சியைக் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 150 கோடி ரூபாய் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக அளித்துள்ளீர்கள்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பட்டதாரிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஆசிரியர் பட்டதாரிகள் சுமார் 12 இலட்சம் பேரும், பொறியியல் பட்டதாரிகள் சுமார் 5 இலட்சம்

பேர்களுக்குமேலும் உள்ளனர். இவர்களின் தேவைக்கேற்ப நாம் செயல்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். திறன் பயிற்சியோடு பொருளாதாரத்தையும் திறம்பட வளரச் செய்வதற்கு வழிவகைகளையும், முறைகளையும் காண அரசு சிந்தித்துச் செயல்பட்டுக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தின் வளர்ச்சிக்காக அடிப்படை பொருளாதாரம் மற்றும் நிருவாகம் விரைந்து செயல்பட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, திரு. உ மதிவாணன், திரு. கேஎஸ். இரவிச்சந்திரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *என்ன இது?*

திரு. வி.எஸ். காளிமுத்து: *நிதிநிலை அறிக்கையில் கடந்த ஆண்டு பிரதம மந்திரி காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 15.20 இலட்சம் விவசாயிகள் பயிர்க் கடன் பெற்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக 522.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, அவைக் குறிப்பைப் பார்த்து அதைப் பரிசீலனை செய்கிறேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவைக் குறிப்பைப் பார்க்கிறேன். *(குறுக்கீடுகள்)* அது என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* அதுதான் அவைக் குறிப்பைப் பார்க்கச் சொல்லிவிட்டேன். *(குறுக்கீடுகள்)* இல்லை, கொஞ்சம் என்னுடைய பேச்சைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் பேசும்போது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், ** அனைவருக்கும் 100 யூனிட் மின்சாரம்

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[மாற்றுத் தலைவர்] [2017 மார்ச் 23

இலவசம் என்பதைத் தெரிவித்தார். இதிலே உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது? (குறுக்கீடுகள்) இதிலே என்ன பிரச்சினை இருக்கிறது? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், நீங்கள் என்ன சொன்னீர்கள் என்று சொல்லுங்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஏதாவது சங்கடம் இருந்தால் அனைத்து உறுப்பினர்களுக்கும் என்று அதை மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): சரி, மாற்றிக்கொள்கிறேன், உட்காருங்கள். நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, நீங்கள் பேசுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் கடந்த ஆண்டு பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 15.20 இலட்சம் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுக் கடன் பெற்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு 522.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி தகுந்த விழிப்புணர்வு அனைத்து விவசாயிகளுக்கும் ஏற்படுத்தி இதில் அனைத்து விவசாயிகளும் பயன்பெற வழிவகைக் காண கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் நிதியாண்டில் 1.5 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையிலேயே 12 ஆயிரம் கறவை மாடுகள், 6 இலட்சம் செம்மறியாடுகள், வெள்ளாடுகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை யுக்தியைப் பெருக்கும் இத்தகைய இலவசத் திட்டத்தை ஒருவகை முதலீடாக எண்ணுகிறேன். ஆகவே, இத்திட்டத்திற்கு சற்றுக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் குறு, சிறு விவசாயிகள் ஆகியோரை இதில் இணைத்து பயன்பெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] [திரு. வி.எஸ். காளிமுத்து]

தமிழக மீனவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு மீனவ மக்களின் தேவைக்கேற்ப பாதுகாப்பு அம்சங்கள் குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மீன்பிடித் தடைக்காலங்களில் கடல்வாழ் மீனவர் குடும்பம் ஒன்றிற்கு 5,000 ரூபாய் வழங்கி வருகிறீர்கள். இதேபோல், எங்கள் ஊர் பகுதிகளிலுள்ள ஆறுகள், குளங்களில் ஏழைகள் மீன் பிடித்து வருகிறார்கள். எங்கள் தொகுதிக்குட்பட்ட மீனவர் நலனைக் கருத்தில்கொண்டு வறட்சிக் காலங்களில் அவர்கள் குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு நீண்ட நாட்களுக்குப் பிறகு குடிமராமத்துத் திட்டப் பணியைத் துவக்கியுள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். 2017–18 ஆம் நிதியாண்டில் தமிழக அரசு இதற்காக 300 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருங்காலங்களில் இந்த நிதியினை அதிகமாக ஒதுக்கித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். அமராவதி அணை, உப்பாறு அணை போன்றவற்றை குடிமராமத்து முறையிலே தூர்வாரி, ஆழப்படுத்தி நீரை அதிகமாகச் சேமிப்பதற்கு அரசு முன்வர வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2017–2018 ஆம் ஆண்டில் 1,000 கோயில்களுக்குப் பராமரிப்பு நிதியாக, அரசு சுமார் ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆக ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தாராபுரம் தொகுதியில் ஆண்டொன்றுக்கு 50 கோயில்களுக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாண்டு நிலவி வரும் கடும் வறட்சியின் காரணமாக, தமிழக அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை 100–லிருந்து 150 நாட்களாக உயர்த்தி அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். தாராபுரம் தொகுதியில் சில இடங்களில் இத்திட்டத்தில் 3 முதல் 4 மாதங்களாக சம்பளம் வராமல் இருக்கின்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): ஒரு நிமிடம். ஒரு நிமிடம். 100 யூனிட் இலவச மின்சாரம் என்பது முதலமைச்சர் உட்பட, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட, அனைத்து பொதுமக்களுக்கும் பொருந்தும் என்பது நடைமுறையில் உள்ள சட்டம். (குறுக்கீடு) முதலமைச்சர் உட்பட.

(குறுக்கீடு) வருகிறது, வருகிறது. (குறுக்கீடு) வருகிறது என்று நாங்கள் சொல்கிறோம். வராது என்று நீங்கள் சொன்னால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, நீங்கள் பேசுங்கள், பேசுங்கள், (குறுக்கீடு) இதில் ceiling இல்லை. Ceiling இல்லை. எல்லோருக்கும் பொருந்தும்.

திரு. வி.எஸ். காளிமுத்து: இந்த நிதியாண்டில் 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் சம்பளம் நிலுவையில் இருக்கிறது. அது உடனடியாகக் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், அன்னை சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலின்படி, டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலே செயல்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் முழு சிறப்பு செயல்பாடு திட்டமாகக் கொண்டு வரப்பட்டது.

கொங்கு மண்டலத்தில் தற்சமயம் விவசாயப் பணிகளுக்கு வேலையாட்கள் தட்டுப்பாடு கடுமையாக உள்ளது. கேரள மாநிலத்தில் உள்ளதைப்போல் தமிழகத்திலும் விவசாயிகளுக்கு வேலைகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் சேர்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை பெருமளவில் தவிர்க்கப்பட்டு, மிகுந்த சிரமத்தில் உள்ள விவசாயிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவையிலே முன்வைக்கிறேன்.

தாராபுரம், வருவாய்க் கோட்ட தலைநகரம், தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாதலால், பெண்கள் நலனைக் கருத்தில்கொண்டு அப்பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பரம்பிக்குளம்-ஆழியாறு-உப்பாறு அணை இணைப்புக் கால்வாய்த் திட்டப் பணிகள் நிறைவு செய்யப்படாமல் உள்ளன. எனவே, இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்துவதன்மூலம், மொத்தம் 10,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] [திரு. வி.எஸ். காளிமுத்து]

தாராபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள தாராபுரம் நகரம் மற்றும் கிராமப் பகுதிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருமூர்த்தி அணையிலிருந்து தாராபுரத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தி குண்டடம், மூலனூர், தாராபுரம் ஒன்றியங்களிலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன்வர வேண்டுமாய் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பிரதம மந்திரியின் கிராமப்புறச் சாலைத் திட்டத்தில் 11-வது கட்ட பணியின்கீழ், 792 சாலைகள் மற்றும் 12 பாலங்களை மேம்படுத்தி, தரமுயர்த்த உள்ளதாகவும், இந்தப் பணிகளை அரசு மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தாராபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட இணைப்புச் சாலைகளையும் மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பிரதம மந்திரியின் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 1.78 இலட்சம் வீடுகளைக் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்து, பணிகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முதலமைச்சரின் சூரிய மின்சக்தி கொண்ட பசுமை வீடு திட்டத்தின்கீழ் 20,000 வீடுகள் 460 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிட இன மக்கள் எங்கள் தொகுதியில் அதிகமாக இருப்பதால் ஆதி திராவிட மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் அரசு எங்கள் தொகுதிக்கு இந்தத் திட்டத்தில் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–55

தாராபுரம் அரசு மருத்துவமனையின் வெளியில் நகராட்சியின் கழிவுநீர்க் கால்வாயை அமைப்பதற்கு ரூ.14.31 இலட்சம் ஏற்கெனவே கேட்கப்பட்டுள்ளது. எனவே, மாசுக் கட்டுப்பாடு விதிமுறைகளுக்குட்பட்டு இந்த அரசு மருத்துவமனைக்கு கழிவுநீர்க் கால்வாய் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 4–00 மணிக்கு meeting இருக்கிறது.

[*2017 மார்ச் 23*

திரு. வி.எஸ். காளிமுத்து: இல்லை, இப்போதுதான் உரையை ஆரம்பித்தேன். அதற்குள் முடிக்கச் சொல்கிறீர்களே! இன்னும் 5 நிமிடங்கள்கூட ஆகவில்லை. அங்கு கழிவுநீர்க் கால்வாய் அமைப்பதற்கு அரசு முன்வர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவமனையில் நாள்தோறும் 50 அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன. 100 படுக்கைகளுக்குமேல் அங்கே உள்ளன. அங்குள்ள துணிகளைச் சலவை செய்வதற்கு சலவை இயந்திரம் ஒன்று அமைத்துத் தருமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் அரசு மருத்துவமனை ஒட்டன்சத்திரம்–கோவை,ஒட்டன்சத்திரம்–திருப்பூர்,பழனி மெயின் ரோடு ஆகிய நெடுஞ்சாலைகளுக்கு அருகே அமைந்துள்ளதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படும் சூழ்நிலை உள்ளதால் அங்கு சி.டி. ஸ்கேன் அமைத்து அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கேரள அரசு அமராவதி நதியில் பாம்பனாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டும் பணிகளைத் துவக்கியுள்ளதால் தமிழகம் பாதிக்காவண்ணம் மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது. அதில் நமது முதல்வர் அவர்கள் கவனம் செலுத்தி அந்த அணையைக் கட்டவிடாமல் தடுக்க வேண்டுமாய் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அமராவதி அணையில் தற்போது 35 அடி தண்ணீர் இருக்கிறது. பாசனம் மற்றும் குடிநீருக்காக அணையிலிருந்து நீர் திறந்து விடுமாறும் உங்களைப் பணிவோடு கேட்கிறேன்.

எங்கள் தொகுதியில், குண்டடம் யூனியனுக்கு உட்பட்ட குழமங்குளி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைந்துள்ளது. இதிலிருந்து உயர் மின்னழுத்த மின் கோபுரம் அமைக்கப்பட்டு மின்சாரம் வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இந்த உயர் மின் கோபுரங்கள்,இணறுகள்,போர்–வெல்கள்,வீடுகள்மேல் செல்வதால் சிறு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தகுந்த இழப்பீடு வழங்குவதற்கும், நகரங்களிலே கேபிள் அமைத்து லைன் கொண்டு செல்வதைப்போல் கிராமங்களிலும் அமைத்து, கொண்டு செல்வதற்கும் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், வரதா நதியின்

2017 மார்ச் 23] [திரு. வி.எஸ். காளிமுத்து]

குறுக்கே அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையிலிருந்து நேரடியாகப் பாசன வசதி இல்லை. மாறாக குளங்களில் தண்ணீர் நிரப்பப்பட்டு, அவற்றிலிருந்து பாசனம் செய்யப்படுகிறது. வரதா நதி அணைக்கட்டின்கீழுள்ள சங்கிலிப்பாளையம் நீர்த் தேக்கத்திலிருந்து பிரிந்து செல்லும் பாப்பான் வாய்க்கால் மூலமாக பாப்பான்குளம், பட்டிக்குளம், கரிசலாம்குளம், செங்குளம் ஆகிய 4 குளங்களுக்குத் தண்ணீர் செல்கிறது. அதன் பிறகு மீண்டும் உபரி நீரானது நல்லதங்காள் ஆற்றில் செல்கிறது. இது இயற்கை நீர்வழிப் பாதையாகும். மேற்படி நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே எனது தொகுதிக்குட்பட்ட பொன்னிவாடி கிராமத்தில் அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையின் மூலமாக சுமார் 4,740 ஏக்கர் நிலம் நேரடியாகப் பாசன வசதி பெறுகிறது. மேலே சொன்ன பாப்பான் வாய்க்கால் நீர்வழிப் பாதையில் ஏற்கெனவே வாய்க்கால் உள்ளது. அது பழுதடைந்துள்ளதால் அந்த வாய்க்காலைச் சீரமைப்பு செய்வதற்கும், வரதா நதியிலிருந்து வீணாகும் தண்ணீர் எங்களுடைய பகுதிக்கு வந்து சேருவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஏற்கெனவே இந்த விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை அவர்கள் செய்து தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன் நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள்.

திரு. டி.எ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நித்தம் நித்தம் வணங்கும் 'அம்மா' என்ற என் கடவுளை வணங்குகிறேன். 'வெற்றிமீது வெற்றி வந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேரும், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றியை வாங்கித் தருகின்ற பெருமையெல்லாம் நான் தினம் தினம் வணங்கும் எங்கள் அம்மா புரட்சித் தலைவி அம்மா அவர்களை மட்டுமே சாரும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரர், ஐந்து கோடி கழகத் தொண்டர்கள் மட்டுமல்லாமல் உலகத்தில் வாழுகின்ற ஒட்டுமொத்த தமிழர்கள் உள்ளத்தால் உணர்வுகளால் 'அம்மா, அம்மா, அம்மா' என்று அடி வயிற்றிலிருந்து அன்போடு அழைக்கின்ற எங்கள் அன்புத் தாய்.

[திரு. டி.எ. ஏழுமலை] [2017 மார்ச் 23

15 ஆவது சட்டமன்றப் பேரவைக்கு என்னை 11,763 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து இங்கே அனுப்பி வைத்த பூந்தமல்லி வாக்காளப் பெருமக்களுக்கும், சபையில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3–00

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவும்; தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோரின் ஒட்டுமொத்த உருவமாகவும்; அவர்கள் கண்ட கனவுகளையெல்லாம் இன்று நனவாக்கியவர் சரித்திர சாதனைத் தலைவி எங்கள் அம்மா. உலகத் தலைவர்கள் வியக்கும் அளவிற்கு மக்களுக்கான நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து சாதனைப் படைக்கும் உலகத் தலைவர்களின் உதாரணத் தலைவியே, இந்தியாவிற்கே வழிகாட்டும் தென் திசை தீபமே; எங்கள் ஒளி விளக்கே; தமிழர்களின் உரிமைகளை மீட்டு, அநீதிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி, ஆதரவற்றோருக்கு உதவிக்கரம் நீட்டி; இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை மாற்றி; இடர்களையும் தடைகளையும் சுக்கு நூறாக்கி; தமிழகத்தை உயர்த்தி, சரித்திர சாதனை படைத்த எங்கள் அம்மாவே!

மக்கள் உரிமைகளுக்காக ஓயாமல் குரலெழுப்பிய சங்க நாத முழக்கமே! திராவிட இயக்கம் விந்திய மலையை எட்டி, இந்திய எல்லை இமய மலைக்கு அப்பாலும் கழகத்தின் பெயரை எதிரொலிக்கச் செய்த எங்கள் பேரரசியே! தமிழகத்து தலைநகரமே! பத்து கோடி தமிழர்களின் பாதுகாப்புச் சிகரமே! உங்களால் தமிழ் வாழும்; நீங்கள் ஆட்சி செய்வதால் மட்டுமே தமிழகம் வளரும். அழியாத புகழோடு ஆறாவது முறையாக அரியணை ஏறி சரித்திர சாதனைப் புரிந்த எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) என் போன்ற சாதாரண தொண்டர்களையும் உயர்த்தி, உழைப்புக்கும், உழைப்போருக்கும் உயர்வு அளிக்கும் ஒளி விளக்கு எங்கள் அம்மா. தங்கள் ஒப்பனை இன்றி போற்றி பணித்து வாக்களித்தும், எனக்கு வரமளித்தும், சேவகம் செய்ய வாய்ப்பளித்த பூவிருந்தவல்லி மக்களை நினைவுகூர்ந்து, என் அன்னையை நினைத்து நன்றி கூறுகிறேன். திராவிடப் பண்ணையின் நறுமலராம்; ஏழைகளின் எழில் நகையாம்; காலம் நமக்காக ஒதுக்கிய கருணைத் தொகுப்பே!

2017 மார்ச் 23] [திரு. டி.எ. ஏழுமலை]

மூடுபனி வைகரையின் முகத் திரை கிழியுமுன் மக்களின் நலனே என் நலன் என அக்கறை கொண்டு உழைத்திடும் மாண்புமிகு எங்கள் குல தெய்வத்தின் பாதங்களைத் தொட்டு மீண்டும் ஒரு முறை வணங்கி, என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணின் இமைபோல் காத்து; கழகத் தொண்டர்களை வழி நடத்தும் எங்கள் குல தெய்வம் இந்தச் சட்டமன்றத்தின் வேத புத்தகம், வேதா நிலையத்துக் கருவூலம்; தமிழக மக்களின் போதி மரத்தடி பூங்கொத்து; தமிழக அரசியலில் தனக்கென தனியிடம் வகுத்துக் கொண்ட ஆளுமையே, தங்களை ஒருபோதும் மறவேனம்மா; தங்கள் திருப்பாதம் தொழுவேனம்மா; என் உயிர்மூச்சு நீர்தானம்மா என்று சொல்லி, எனது கன்னிப் பேச்சை ஒரு கனிந்த பேச்சாகத் துவங்குகின்றேன்.

அம்மாவிற்கு தேகமாம்; தாயாக, தந்தையாக தன் வாழ்க்கையை அர்ப்பணித்து, நட்புக்கே இலக்கணமாய்; தியாகத் திருவுருவாய்த் திகழும் வீரமங்கை சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொடையால், வீரத்தால், குன்றாத பண்பால் ஓங்கி நிற்கின்ற கழகத் துணைப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணனை வணங்குகிறேன். இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நல்வழி காட்டி, நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய அன்பு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

> "கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
> துக்கம் கடிந்து செயல்"

என்ற குறள்படி, மனதில் தெளிவுடன் செயலை முடிவுசெய்து அதைக் குறைபடாமல் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற செயல்பாட்டோடு, இருசக்கர வாகனம் வாங்க பெண்களுக்கு ரூ.20,000/– மானியம்; மகப்பேறு நிதியுதவி ரூ.18,000/– ஆக உயர்வு; ரூ.85 கோடியில் மீனவர்களுக்கு 5,000 வீடுகள்; வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்வு; 500 டாஸ்மாக் மதுக்கடைகள் மூடல் என்ற 5 முக்கியத் திட்டங்களுக்கு முதல்வராகப் பொறுப்பேற்ற முதல் நாளே கோப்புகளில் கையெழுத்திட்ட மாண்புமிகு அம்மா அவர்களையும், நல்லாட்சியை இங்கே நிலைநிறுத்தத், தொடங்கிய நம் இனிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்கி, என்னுடைய கன்னிப் பேச்சை மீண்டும் கனிவோடு தொடங்குகிறேன்.

[திரு. டி.எ. ஏழுமலை] [2017 மார்ச் 23

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னிகர் தாயகத்தைப் பொழுதுக்கும் நினைத்த தன்னிகரில்லா எங்கள் தலைவியின் ஆட்சி இன்றைய முதல்வருக்கு முதல் முறையாகவும், இன்றைய மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதல் முறையாகவும் அமையப்பெற்ற இந்த முதலாவது நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில், நானும் எனது முதலாவது பேச்சைத் தொடர்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கானகத்துச் சிங்கம்போல் முழங்கி நின்று களங்கண்ட இந்த நிதிநிலை அறிக்கையை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

காவல் துறைக்காக ரூ.6,483 கோடியும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்காக ரூ.253 கோடியும், சிறைச்சாலைகள் துறைக்காக ரூ.282 கோடியும் ஒதுக்கீடு செய்ததோடு, தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் காலியாகவுள்ள இடங்களுக்கு மேலும் 10,500 நபர்களை இந்த ஆண்டு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியமானது தேர்வு செய்யும் என்ற தேர்ந்த அறிவிப்பைச் செய்துள்ளார்கள். இந்த அறிவிப்பு, இளைஞர்களுக்கு உண்மையிலேயே தேறுதல் அறிவிப்பாக உள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் நிதியுதவியானது ரூ.12,000/–லிருந்து ரூ.18,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதலமைச்சரின் சூரிய ஒளி மின் வசதி கொண்ட பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு ரூ.420 கோடி செலவில் 20 ஆயிரம் பசுமை வீடுகள் கட்டப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு திட்டத்தட்ட 3.50 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசப் பட்டா வழங்கியுள்ளது. மக்கள் நலமே நாட்டின் நலம் என்பதால், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைக்கு ரூ.10,158 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 9 முக்கியமான இணைப்புச் சாலைகளை நான்கு வழி மற்றும் ஆறு வழிச் சாலைகளாக மேம்படுத்த ரூ.744 கோடி அளவிலான பணிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஆண்டில், ஏழைப் பெண்களுக்கு 12 ஆயிரம் கறவைப் பசுக்களும், ஒன்றரை இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு 6 இலட்சம் வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளும் வழங்கப்படவுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் ஏதுமில்லை. அதேசமயம்,

2017 மார்ச் 23] [திரு. டி.எ. ஏழுமலை]

முதன்மைத் துறைகளான வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளம் உள்ளிட்டவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

நிலவைக் கண்டால் மல்லிகைப் பூ மகிழும்; நீள் இரவைக் கண்டால் வானப்பூ மகிழும்; மேகநலம் கண்டால் உழவர் மனம் மகிழும்; நல்லதொரு கனியைக் கண்டால் அணில் மகிழும்; கோயில்களைக் கண்டால் பக்தர்கள் மகிழ்வர்; பெற்ற தாயின் முகம் கண்டால் குழந்தைகள் மகிழ்வர்; தூய நலம் தோய்ந்த இந்த நிதிநிலை அறிக்கையைக் கண்டால் எல்லோரும் மகிழ்வார்கள். வேகாத சோற்றுக்குச் சுவையா உண்டு? வெறும் மணலைத் திரிப்பதனால் கயிறு தோன்றாது. மாளிகைக்குக் குடிசைமேல் கனிந்த பார்வை படுவதுண்டா? ஆனால், நாளெல்லாம் வாடுகின்ற பஞ்சை, ஏழை, நலிந்தோரைத் தேற்றுவது நம் கழக அரசுதானே! அப்படியிருந்தும், நம் வீட்டில் தவிடு தின்ற கோழிகள் சில எதிர்த்த வீட்டில் போய் முட்டையிடுகிறதே! அதை நினைத்து நான் வேதனைப்படுகிறேன்; வெட்கப்படுகிறேன்.

திண்டுக்கல்லுக்குப் போகலாம், திருக்குச் செம்பு வாங்கலாம்; தண்ணீர் நிறைய குடிக்கலாம்; தாகம் தீரக் குடிக்கலாம், மதுரைக்குப் போகலாம்; மல்லிகைப்பூவும் வாங்கலாம்; கொண்டையிலும் மாட்டலாம்; கும்புட்டும் வரலாம் என்று போயிருக்கிறார்கள். அவர்களுக்குத் திருக்குச் செம்பும் கிடைக்கப் போவதில்லை. தண்ணீரும் கிடைக்கப் போவதில்லை. அவர்கள் மதுரைக்கும் போகப் போவதில்லை. மல்லிகைப் பூவும் வாங்கப் போவதில்லை. ஒரு நாள் திரும்பி வரத்தான் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாம் மக்களுக்காக உழைத்துக் கொண்டேயிருப்போம். நம் தாயின் நினைவு உள்ளவரை தரணியில் நாமிருப்போம்; நமது கழகமும் இருக்கும். இது சத்தியம். "தீயினில் அில் மணக்கும்; தென்றலில் பூ மணக்கும்; வாயினில் சொல் மணக்கும்; வணக்கத்தில் சீர் மணக்கும்" என்பதெல்லாம் இந்த வாசனை அறியா மனிதர்களுக்கு எங்கே வாழ்க்கைப்படும் என்பதுதானே உண்மை.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மக்கள் நலத் திட்டங்களே மக்கள் மன்றத்தில் நம்மை நிலைநிறுத்தும். வரும் ஏப்ரல் 12 ஆம் நாள் மாண்புமிகு அம்மா அவர்களின் தொகுதியில்

[திரு. டி.எ. ஏழுமலை] [2017 மார்ச் 23

தேர்தல் வருகிறது. தாய் கொடுத்த குங்குமத்தின் சக்தி வந்து அதைத் தாங்கிய கைகளுக்கே வெற்றி வந்து சேரும் என்ற வகையில், அந்த வெற்றி நம் சின்னம்மா அவர்களின் வழிகாட்டுதலுக்குக் கிடைக்கப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது தெரியும் சின்னம்மாவின் அருமை என்று சொல்லிக்கொள்கிறேன். ஆர்.கே. நகர் தொகுதி மக்களால் இந்த அகிலம் அவரைத் தொழப் போகிறது. அதுவரை பொறுத்திருப்போம் என்று சொல்லி, என்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் திருத்தாள் ஒற்றி நடக்கும் மதிப்பிற்குரிய நம் கழகப் பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களை வணங்கி, என் தொகுதிக் கோரிக்கைகளை இந்த அவைமுன் வைக்கின்றேன்.

பிற்பகல் 3–10

பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி நகராட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி நகராட்சியில் முஸ்லிம் மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அந்த மக்கள் சாலைகளிலே கொட்டகைகள் அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சென்னைக்கு வருவதென்று சொன்னால், அந்தப் பகுதி ஒரு நுழைவு வாயிலாக இருக்கிறது. அங்குள்ள மக்களுக்குக் கண்டிப்பாக அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கீழ்மாநகர், மேல்மாநகர் என்ற பகுதிகள் இருக்கின்றன. அங்கு ஆதி திராவிட இன மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். அந்த ஆதி திராவிட மக்கள் இந்தக் காலத்திலும் நகர்ப்புறத்திலே கொட்டகைகளைக் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், புன்னப்பாக்கம் கிராமத்தில் 28, 30 ஏக்கர் நிலம் இருக்கிறது. திருவள்ளூரைச் சுற்றி 200 கிலோ மீட்டருக்கு அரசு கல்லூரி இல்லை. அதுவும், வேளாண்மைக் கல்லூரி இந்தப் பகுதியில் எங்கேயும் கிடையாது. அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாக

2017 மார்ச் 23] [திரு. டி.எ. ஏழுமலை]

அங்கே அரசுக் கல்லூரி கொண்டு வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், புல்லரவாக்கம் ஊராட்சியிலுள்ள (குறுக்கீடு)—அதையெல்லாம் எங்கள் அம்மா அரசு கட்டிக்கொண்டே இருக்கும். பார்த்துக்கொண்டே இருங்கள்—ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பூந்தமல்லி தொகுதியில் கிட்டத்தட்ட 100 ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளைத் தூர்வாரி, மழை நீரைச் சேகரித்து, குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஏரிகளைத் தூர்வாருவதோடு கால்வாய்களையும் தூர்வார வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

கொசஸ்தலை ஆறு இருக்கிறது. கிட்டத்தட்ட மூன்று வழிகள் இருக்கின்றன. அந்த ஆற்றில் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும். தடுப்பணைகள் கட்டி மழைநீரைச் சேகரித்தால் அங்குள்ள மக்களுக்குத் தண்ணீர் பிரச்சினையே வராது என்பதை அம்மா அவர்களுடைய அரசுக்கு நான் அன்போடு தெரிவித்து, அதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மூன்று தடுப்பணைகள் என்று சொன்னால், முதலாவதாக, அரண்வாயலில் தடுப்பணைக் கட்ட வேண்டும். இரண்டாவதாக, கொட்டாமேடு கிராமத்தில் தடுப்பணைக் கட்ட வேண்டும். அடுத்து, அரும்பாக்கம்–செம்பேடு செல்கின்ற வழியில் பள்ளிக்கூடத்திலிருந்து வருகின்றவர்கள் ஆற்றைக் கடந்து வருகிறார்கள். அங்கே ஒரு தடுப்பணைக் கட்டி, ஆற்றைக் கடப்பதற்கு ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தால் அங்குள்ள மக்களுக்குப் பேருதவியாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேத்துப்பாக்கம் கிராமத்திலும் ஒரு தடுப்பணைக் கட்டித் தர வேண்டும். ஆக, நான்கு தடுப்பணைகளைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

என் போன்ற ஏழை எளிய, கூரை வீட்டில் வாழும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு சீட் கொடுத்து, வரம் கொடுத்து, வெற்றி பெற்று வா என்று சொல்லி, இந்தச் சிறப்பு வாய்ந்த மாமன்றத்தில் அமர வைத்து அழகு பார்த்த அம்மா அவர்களைக் காணவில்லை. நாம் அம்மா அவர்களைக் கடவுளின் வடிவிலே

[திரு. டி.எ. ஏழுமலை] [2017 மார்ச் 23

பார்க்கிறோம். என் போன்ற சாதாரணமானவர்கள், ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், வசதியில்லாதவர்கள், ஏழைக் குடும்பத்திலே பிறந்தவர்கள், வசதி குறைவானவர்களை அழைத்து, சீட் கொடுத்து, வரம் கொடுத்து, இந்தச் சிறப்பான மாமன்றத்திலே அமர வைத்து எங்களை அழகு பார்த்த அந்தத் தாய் இல்லையே என்று வருத்தப்படுகிறோம்.

பிற்பகல் 3–15

ஒரு நாள் இரவு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவமனைக்குச் சென்றதாகக் கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு ஓடினோம். மருத்துவமனைக்கு ஓடிய பின்பும் நேரம் கடந்து கொண்டிருந்தது. அதன் பிறகு, கோயில்களுக்குச் சென்றோம். கோயில்களில் தெய்வம் இருப்பதாக நினைத்து, தெய்வத்தை நாடி ஓடி, ஓடி அழுதோம். தெய்வமும் இருப்பதாகத் தெரியவில்லை. பிறகு, அழுதுகொண்டு நினைத்தோம். புரட்சித் தலைவி அம்மா அவர்களை தெய்வமும் காப்பாற்றவில்லை. மருத்துவர்களாலும் காப்பாற்ற முடியவில்லை. தாய் அவர்கள் மறைந்து போனார்கள். நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைந்து போவார்கள் என்பதை எங்களால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. நீதி காப்பாற்றப்படவில்லை; தருமம் காப்பாற்றப்படவில்லை; நான் அந்த சாவைக் கேட்கிறேன், 'சாவே, உனக்குச் சாவு வராதா? எப்படி எங்கள் தாயைக் கொண்டுபோனாய் சாவே' என்று. அதுபோன்ற ஒரு தாயை, அந்தத் தெய்வத்தை உலகம் மறக்காது, என் சமூகம் மறக்காது என்று சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, அம்மா, அம்மா என்று மன்னிக்கத்தக்க ஒளியாய் இருந்து விண்ணகத்து ஒளியாய் நிற்கும் எங்களது அமர தெய்வம், ஆருயிர் அன்னை மாண்புமிகு அம்மா அவர்களை நினைத்து, இந்த நிதிநிலை அறிக்கையின்மீதான என்னுடைய உரையை இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை

2017 மார்ச் 23] **[திரு. எம். தமிமுன் அன்சாரி]**

அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்திலே தாங்கள் வெற்றி பெற்றதற்காக என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிக்க நன்றி.

திரு. எம். தமிமுன் அன்சாரி: உங்கள்மீது வீசப்பட்ட ball–ஐ தன்பால் ஈர்த்து நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அதுபோல், புதிய முதல்வராகப் பொறுப்பேற்றிருப்பதற்காக மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் முதல்வர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சேலத்துக்காரர். நீங்களும் சேலத்திலிருந்து வருகை தந்திருக்கிறீர்கள். மாம்பழத்திற்குப் பெயர் போன ஊர் சேலம். அந்தச் சேலத்து மாம்பழம்போல உங்கள் சேவைகள் மணக்கவும், சிறக்கவும் நான் வாழ்த்துகின்றேன். மாண்புமிகு அவை முன்னவராகவும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீன் வளத் துறையோடு, நிதித் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அண்ணன் திரு. டி. ஜெயக்குமார் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் பெயரிலேயே ஜெயம் இருக்கிறது. எனவே, சூரை மீனின் பாய்ச்சலோடு நிதித் துறையிலே பல சாதனைகளைப் புரிய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேரன் இமய மலையிலே வெற்றிக் கொடியை நாட்டியதுபோல, டில்லியிலே இரட்டை இலை சின்னத்தையும் விரைவிலே வெற்றி கொள்வீர்கள் என்று என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே, விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய்க்கு பயிர்க் கடன் தரப்படும் எனக் கூறப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். உணவு தானிய உற்பத்தியை ஒரு கோடி டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயித்திருப்பதும், 35,000 ஏக்கராக கரும்பு சாகுபடி பாசனப் பரப்பை உயர்த்த திட்டமிட்டிருப்பதும் நுண்ணீர்ப்

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2017 மார்ச் 23*

பாசன முறைக்கு மாற்ற திட்டமிட்டிருப்பதும், 57 சதவிகிதமாக இருக்கும் தமிழகத்தின் மானாவாரி சாகுபடியை மேம்படுத்த சிறப்புத் திட்டத்தை அறிவித்திருப்பதும், தோட்டக்கலை சாகுபடிப் பரப்பை அதிகரித்திருப்பதும், பண்ணைகளை இயந்திரமயமாக்கத் திட்டங்களை வகுத்திருப்பதும் விவசாயத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கக்கூடிய சிறப்பு அம்சங்களாக நான் பாராட்டுகிறேன்.

விவசாயிகளின்மீது அக்கறை கொண்ட அம்மா அவர்களின் இந்த அரசு, கடந்த ஆண்டு மழையின்மையாலும், ஆற்று நீர் கிடைக்காமல் போனதாலும், வறட்சி காரணமாகவும் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கக்கூடிய விவசாயிகளின்மீது கருணை கொண்டு பல சலுகைகளை வழங்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். குறு, சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய அனைத்துச் சலுகைகளையும், வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கிட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும் உங்களிடத்திலே முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் சமுதாயத்தின் நலனைக் கருத்திலேகொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு மீன் வளம் மற்றும் நிதித்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். மீனவர்களுக்குப் புதிதாக 5,000 வீடுகள் கட்ட 85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில், எனது தொகுதிக்குட்பட்ட நாகப்பட்டினம் மீனவர்களுக்கு அதிக முன்னுரிமை வழங்குமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடத்திலே, மீனவர் பிரிட்ஜோ என்பவர் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டது தமிழகத்திலே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தச் சம்பவங்களையெல்லாம் கண்டித்து சமீபத்திலே நாகப்பட்டினத்திலே ஆயிரக்கணக்கான மீனவர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்டனர். நானும், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும், அண்ணன் மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் அவர்களும் அந்த மீனவர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டோம். கண்ணீரோடும், கதறலோடும் அவர்கள் தங்கள் வேதனைகளைக் கொட்டினார்கள்.

2017 மார்ச் 23] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

பிற்பகல் 3–20

இந்த நேரத்தில் இந்த அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவர விரும்புகின்றேன். கேரள மீனவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்கள் இந்திய மீனவர்களாகக் கருதப்படுகிறார்கள். மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மீனவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்கள் இந்திய மீனவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒடிசாவினுடைய மீனவர்கள் பாதிக்கப்பட்டால், ஆந்திராவினுடைய மீனவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்கள் இந்திய மீனவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றபோதுதான், அவர்களைத் தமிழக மீனவர்கள் என்ற கண்ணோட்டத்தில், டில்லியில் இருப்பவர்கள் அணுகுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தில் ஓட்டுமொத்த தமிழினத்தின் குரலாகப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். இனி வங்கக் கடலிலே தமிழ் மீனவன் ஒருவன் கொல்லப்படுவதைத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சுய மரியாதை உள்ள, இன உணர்வு உள்ள எந்தத் தமிழனும் அனுமதிக்கமாட்டான். ஏனென்று சொன்னால், தொடர்ந்து இதுவரை எண்ணற்ற மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த இன்னலுக்கு எந்த ஒரு முடிவையும் இந்திய வெளியுறவுத் துறை சரியாக எடுக்கவில்லை. அதனால் தமிழ்நாட்டு மீனவர்கள் கொந்தளித்துப்போய் இருக்கின்றார்கள். எனவே தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த அரசு ஏற்கெனவே பல சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றது. இனியும் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய இலங்கைக் கடல் பகுதியிலே மீன் பிடித்துக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்காக இந்தியாவினுடைய கடற்படை அங்கே நிறுத்தப்பட்டு, சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏராளமான தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு, இன்றும் இலங்கைச் சிறையிலே இருக்கின்றார்கள். அவர்களை மீட்டுக்கொண்டுவர மத்திய அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழக மீனவர்களுடைய 134 படகுகள் இலங்கை அரசிடம் இருக்கின்றன. அதை விடுவிக்க வேண்டுமென்று சொல்லி நாகப்பட்டினத்திலே

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2017 மார்ச் 23*

மீனவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்கள். நான் கோரிக்கை வைப்பது என்னவென்று சொன்னால், ஒன்று இலங்கையிடமிருந்து அந்தப் படகுகளை மீட்டுத் தர வேண்டும். இல்லையென்று சொன்னால், மத்திய அரசே அந்தப் படகுகளுக்கான தொகையைத் தமிழக மீனவர்களுக்கு வழங்க வேண்டும். ஒருவேளை மத்திய அரசுக்கு அந்த மனம் இல்லாவிட்டால், கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு அந்த மீனவர்களுடைய படகிற்கு இழப்பீடு கொடுத்து, அந்த மீனவர்களுக்கு அறுதல் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழ்நாடு இயற்கை வளங்களைக் கொண்ட நிலம் என்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. பசுமைக் காடுகளைக் கொண்ட முல்லை, உயர்ந்த மலைகளைக் கொண்ட குறிஞ்சி, மணல் வளம் கொண்ட பாலை, பயிர்கள் செழிக்கும் மருதம் மற்றும் கடல் பரப்பைக் கொண்ட நெய்தல் என ஐவகை நிலங்களும் நம் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவற்றைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு நாம் பரிசளிக்க வேண்டும். இன்று தமிழகத்தினுடைய ஐந்து வகை நிலங்களுக்கும் ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டி இருக்கின்றது. தென்னிந்தியாவின் மிகப் பெரிய சமவெளியான தஞ்சை சமவெளியில் காவேரி டெல்டா பகுதியில் மீத்தேன் உள்ளிட்ட அபாயகரமான திட்டங்களை அமல்படுத்தக் கூடாது என்று நெடுங்காலமாக மக்கள் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்தக் குரலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்று, மீத்தேன் எடுக்க அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லியிருந்தது மகிழ்ச்சி அளித்தது. இப்போது தஞ்சை சமவெளியையொட்டி அமைந்திருக்கக்கூடிய புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசல், வடகாடு போன்ற பகுதிகளில் ஹைட்ரோகார்பன் திட்டத்தை அமல்படுத்தக் கூடாது என்று அந்த மக்கள் போராடுகிறார்கள். அந்த உணர்ச்சிமிக்க போராட்டக் களத்திற்கு நானும் சென்றேன். அந்த மக்களோடு நானும் அங்கே பங்கேற்றேன். அவர்கள் சட்டமன்றத்தில் நீங்கள் பேச வேண்டுமென்று சொன்னார்கள். நேற்று இது குறித்த விவாதத்தில் நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அந்தத் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்காது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக இந்த அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2017 மார்ச் 23] **[திரு. எம். தமிமுன் அன்சாரி]**

விவசாயத்தை அழித்து, குடிநீரைப் பாழாக்கி, சுற்றுச்சூழலை நாசம் செய்யும் எந்த ஒரு திட்டத்தையும் தமிழ் மண்ணில் அனுமதிக்கக் கூடாது என்று இன்றைய இளைய தலைமுறையினர் தமிழ்நாட்டில் உள்ள, பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற மாணவர்கள், பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்கள், கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள், தமிழ் உணர்வோடு பொங்கி வந்து நிற்கின்றார்கள். இந்த மண்ணை மலடாக்க நாங்கள் அனுமதிக்கப் போவது இல்லை என்கிறார்கள். அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. தொடர்ந்து இந்த விஷயத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக இருக்க வேண்டுமென்று தமிழ்நாட்டின் இளைஞர்கள் மற்றும் மாணவர்களுடைய குரலாக இந்த அவையிலே அவற்றை நான் எடுத்து வைக்கின்றேன்.

142 ஆண்டுகளிலே இல்லாத வறட்சியை தமிழ்நாடு சந்தித்திருக்கின்றது. இவ்வாண்டு பருவமழை 60 சதவிகிதம் அளவிற்குக் குறைவாக பெய்திருக்கின்றது. தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும் இந்தச் சூழலிலே, அரசு எடுத்திருக்கின்ற முன் முயற்சிகளை நான் பாராட்டுகின்றேன். அனைவரும் கவனிக்க வேண்டும், அடுத்த 10 ஆண்டுகளில் உலகம் முழுவதும் தண்ணீர்ப் பிரச்சினைதான் ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுக்கப் போகிறது. எனவே நீர் மேலாண்மையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். சிறப்பான பல முயற்சிகளை எடுத்து வருகின்றீர்கள். இன்னும் கூடுதல் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். தண்ணீரைப் பயன்படுத்துவதிலே பல நவீன முறைகளை நாம் கையாள வேண்டியிருக்கின்றது. பாலைவன தேசமான இஸ்ரேலும், ஐக்கிய அரபு அமீரகமும் தண்ணீரைச் சேமிப்பதிலும், தண்ணீரைப் பயன்படுத்துவதிலும் பல நுண்ணிய செயல் திட்டங்களை அமல்படுத்துகின்றன. அந்த அடிப்படையில் பயன்படுத்திய தண்ணீரை மறு சுழற்சிக்கு உட்படுத்தி, அதே தண்ணீரை மீண்டும் நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய தொழில்நுட்ப முறைகளை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[*2017 மார்ச் 23*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீர்நிலைகளைப் பாதுகாப்பது குறித்த ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் மழைநீர் சேகரிப்புத் திட்டம் என்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தை நாடாளுமன்றத்திலே பாரதப் பிரதமர் அவர்கள் பாராட்டுகின்ற வகையிலே செயல்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்றைக்கும் நீர்நிலைகளைப் பாதுகாக்கின்ற அரசு என்கின்ற அடிப்படையில், கரிகால்சோழன் காலத்தில் கடைபிடிக்கப்பட்ட குடிமராமத்து என்கின்ற பழமையான, புரட்சிகரமான அந்தத் திட்டத்தை மக்கள் பங்களிப்போடு, விவசாயிகள் பங்களிப்போடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே காஞ்சிபுரத்திற்கு நேரடியாகச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கட்டமாக 100 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகளைத் தொடங்கி வைத்திருக்கின்றார்கள்.*

பிற்பகல் 3–25

இரண்டாவது கட்டமாக 300 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் மகிழ்ச்சியடையக்கூடிய வகையில் மிக விரைவில் அறிவிப்பு வெளியிடயிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயப் பெருமக்களுக்கு முழுக்க, முழுக்க வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதற்கும், நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கும், வறட்சி காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் என இந்த மூன்று நோக்கங்களை நிறைவேற்ற குடிமராமத்து என்கின்ற இந்த புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகிறது. செய்திகளிலும், ஊடகங்களிலும் நீங்களே பார்த்திருப்பீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்திற்கு நேரடியாகச் சென்று, மண் வெட்டியைக் கையில் எடுத்து, களத்திலே நின்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு என்றைக்கும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறதென்பதை அந்தச் செய்தி மூலமாக உலகத்திற்கு அறிவித்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள் வெள்ளம்போல் ஒரு free flow ஆக மிகவும் வேகமாகப், பேசிக்கொண்டிருந்தார். குறுக்கிடக் கூடாது interrupt செய்யக்கூடாது என்றுதான் நான் அப்போது குறுக்கிடவில்லை. நம்முடைய மீனவர்கள் அதுவும் பாக் நீரிணைப் பகுதியைச் சார்ந்த மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரின் கொடுமைக்கு ஆளாகும்போது, தாக்கப்படும்போது, சுடப்படும்போது, வலைகள் அறுக்கப்படும்போது, படகுகள் பிடிக்கப்படும்போது அவர்களை சுடக் கூடாது என்றும் காற்றின் வேகம் காரணமாக திசைமாறும்போது அவர்களது படகைப் பிடித்துவைக்கக் கூடாது என்றும் இதுபோன்ற செயல்களிலெல்லாம் ஈடுபட்டால் அவை கண்டிக்கத்தக்க செயலாக இருக்கும் என்றும் பலமுறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும் தற்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் புது தில்லிக்குச் சென்று அழுத்தம் கொடுத்துள்ளனர். ஆனால், துரதிருஷ்டவசமாக எல்லோருடைய கண்டனத்தையும் பெறுகின்ற வகையிலும், இந்தியாவின் கண்டனத்தைப் பெறுகின்ற வகையிலும் கடந்த 6 ஆம் தேதி பிரிட்ஜோ என்ற இளைஞன் சுடப்பட்டான். மேலும், சரவணன் என்ற இளைஞனுக்கும் கையில் குண்டு பட்டு காயம் ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 5 இலட்சம் ரூபாய் பிரிட்ஜோவின் குடும்பத்திற்கும் காயம்பட்டவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனை மற்றும் அறிவுரையைப் பெற்று உடனடியாக புது தில்லி சென்று மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் அவர்களைச் சந்தித்து, முக்கியமான 3, 4 கோரிக்கைகளைக் கொடுத்தோம். எந்தக் காலத்திலும் மீனவர்கள் பாதுகாப்பாக மீன் பிடிப்பதற்குரிய வழிவகைகள் காணப்பட வேண்டும். இதுபோன்ற கண்மூடித்தனமான, கொடூரமான தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவை இருக்கவே கூடாது. அப்படியே காற்று திசை காரணமாக எல்லை தாண்டும் மீனவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும். அதேபோன்று கிட்டத்தட்ட 136 படகுகள், காரைக்காலோடு சேர்த்து 139 படகுகள் அங்கே இருக்கின்றன. 85 மீனவர்கள் இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னவுடன் "நிச்சயமாக இதுபோன்ற மிக மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்க செயல்கள்

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 மார்ச் 23

வருங்காலத்தில் நடக்காது" என்று உறுதியாகச் சொன்னார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக மறுநாள் இராமேஸ்வரத்திலிருந்து மறுபடியும் 10 மீனவர்களது படகை இலங்கைக் கடற்படையினர் கொண்டு சென்றுவிட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் படகுகளையும் சேர்த்து அனைத்துப் படகுகளையும் விடுவிப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி தங்களுடைய கண்டனத்தையும் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, ஒட்டுமொத்த உணர்வுடன் எந்த அளவிற்கு மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு ஏற்கெனவே இலங்கையிலுள்ள 357 படகுகளை இந்தியாவிற்குக் கொண்டுவந்து பெருமை சேர்த்தவர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிச்சயமாக மீனவர் பக்கம் இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எப்போதும் மீனவர்களைக் கைவிடாது. இந்த அரசு அதிக அளவில் அக்கறை எடுத்து, உரிமையோடு, வேண்டிய அளவிற்கு அழுத்தம் கொடுத்து, அந்தப் படகுகளை மீனவர்களிடம் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இராமேஸ்வரம் பகுதிக்கான 350 படகுகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்தபோது அதில் 18 படகுகளைக் கொண்டுவர முடியவில்லை, அந்தத் துறைமுகத்திலேயே பலகாலமாக நிறுத்திவைக்கப்பட்டதன் காரணமாக அவை அப்படியே மூழ்கிவிட்டன. தாயுள்ளத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒவ்வொரு படகிற்கும் 5 இலட்சம் ரூபாய்வீதம் என 18 படகுகளுக்கு 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எந்த வகையில் பார்த்தாலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்களது இந்த அரசு, மீனவர்களை ஒருபோதும் கைவிடாது, அவர்களைக் கைதூக்கி முழுமையான அளவிற்குக் கரை சேர்க்கின்ற வேலையில்தான் நிச்சயமாக ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்கள்.

2017 மார்ச் 23]

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்களின் விளக்கங்களுக்கு நன்றி. நீர் மேலாண்மை குறித்து இன்னும் சில கருத்துகளை நான் கூற விரும்புகின்றேன். சமீபத்தில் தெலுங்கானா அரசு, 'Mission Kakatiya' என்ற ஓர் இயக்கத்தை உருவாக்கி, 8,000 நீர்நிலைகளை மீட்டிருக்கிறது. மூடப்பட்ட ஏரிகளை, குளங்களை இதுபோன்ற நீர்நிலைகளை மீட்டிருக்கின்ற காரணத்தினால் இத்திட்டத்திற்கு பொது மக்களிடம் வரவேற்பு கிடைத்திருக்கிறது. இதையே நாம் முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு தமிழ்நாட்டிலும் நீராதாரங்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரு மக்கள் இயக்கத்தை முன்னெடுக்கலாம் என்ற ஓர் ஆலோசனையை அரசிற்கு முன்வைக்கின்றேன்.

பிற்பகல் 3–30

இதை அரசு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே 39,202 ஏரிகள் இருந்தன என்று பழைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அவற்றில், இப்போது எத்தனை ஏரிகள் பயன்பாட்டில் உள்ளன என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் மேலாண்மை (Water Resource Management) குறித்து ஒரு கருத்துகூட உண்டு. இரண்டாம் உலகப் போரை இந்த உலகம் பார்த்திருக்கின்றது. மூன்றாம் உலகப் போர் (Third World War) என்று ஒன்று வந்தால் அது தண்ணீருக்காக மட்டும்தான் இருக்கும். காலத்தின் அவசியமாகக் கருதுகின்ற நீரின் தேவையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உணர்ந்ததன் காரணமாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இந்தியாவிலே எங்கும் இல்லாத குடிமராமத்து திட்டத்தைத் தமிழ்நாட்டில் கொண்டுவந்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அந்தத் திட்டத்தைத் துவக்கியும் வைத்தார்கள். மேலும், எல்லா அமைச்சர்களும் அந்தந்த மாவட்டங்களில் துவக்கி வைத்து, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா? நீர் வள ஆதாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை. . .

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர், சீக்கிரம் முடியுங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: நீர் வள ஆதாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 4,791 கோடி ரூபாயாகும். 1,000 கோடி 2,000 கோடி இல்லை. நீர்வள மேலாண்மைத் துறைக்கு, (Water Resource Management) நீர் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு ஒதுக்கிய தொகை 4,791 கோடி ரூபாயாகும். அதிலே, நபார்டு மூலமாக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 270 கோடியாகும்.

ஆண்டாண்டுக் காலமாக கனவுத் திட்டமாக இருக்கின்ற அத்திக்கடவு–அவிநாசி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 250 கோடி ரூபாயாகும். இதுவரையில் இல்லாத அளவிற்கு நீரின் அவசியத்தை உணர்ந்துதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த அளவிற்கு ஒரு பெரும் தொகையை ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, இன்று 4-00 மணிக்கு meeting இருக்கிறது. உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அந்தத் திட்டத்தைப்பற்றி நீங்கள் சிறப்பாகச் சொன்னீர்கள். சிறப்பான முறையில் அதைச் செயல்படுத்துவதற்கு நான் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை இன்று உலகம் முழுவதும் அதிகமாக முன்னெடுத்து வருகிறார்கள். எதிர்கால குடிநீர்த் தேவையைக் கருத்திற்கொண்டு அதிலும் நம்முடைய அரசு கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மழைக்காலங்களில் நதி நீர் கடலிலே கலப்பதைத் தடுக்கும்பொருட்டு ஆறுகளில் தடுப்பணைக் கட்டுவதில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதன்மூலம் அம்மா அவர்களின் கனவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக அடுத்த பத்தாண்டுகளில் தண்ணீர் மிகை மாநிலமாக நம்முடைய தமிழ்நாட்டை நாம் உருவாக்கிக் காட்ட முடியும். இதன்மூலம் நம் அடுத்த தலைமுறையினரின் தேவைகளைப் பாதுகாக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23] **[திரு. எம். தமிமுன் அன்சாரி]**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கன்னிப் பேச்சிலே சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட வேண்டுமென்று பேசினேன். நிலத்தடி நீரை உறிஞ்சி, காற்றின் ஈரப்பதத்தை உறிஞ்சி, சுற்றுப்புறச் சூழலை நாசப்படுத்தும் சீமைக் கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்ற வேண்டுமென்று நான் அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். இப்போதுகூட திரு. வைகோ அவர்கள் தொடர்ந்த வழக்கிலே மதுரை உயர் நீதிமன்றக் கிளை சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட வேண்டுமென்று ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. தமிழக அரசு அதிலே கவனம் செலுத்தி பல இடங்களிலே அதை அகற்றி வருவதை நான் பத்திரிகைகளில் பார்த்து வருகிறேன். இதிலே, பல இடங்களிலே நகரங்களிலே அப்பணிகள் சிறப்பாக நடைபெற்றாலும் அதை முழுமையாக அகற்றுவதற்கு தமிழக அரசு ஒரு சட்டத்தை இயற்றி, அதற்கென்று சிறப்பு நிதி ஒதுக்கினால் கேரளாவைப் போல 100 சதவிகிதம் சீமைக் கருவேல மரங்களற்ற ஒரு மாநிலமாக நம்முடைய தமிழ்நாட்டை உருவாக்க முடியும். சீமைக் கருவேல மரங்களை அகற்றிவிட்டு நம்முடைய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த மரம் நடும் திட்டத்தைச் செயல்படுத்தும்போது தமிழ்நாட்டை ஒரு பசுமை போர்த்திய மாநிலமாக எதிர்காலத்திலே உருவாக்க முடியும். அதையும் நம்முடைய அரசு கவனத்திலே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள ஏராளமான திட்டங்களை நான் பாராட்டியிருக்கின்றேன்; வரவேற்றிருக்கிறேன். அதேநேரத்தில், நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த பிறகு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து சிறுபான்மை சமூக மக்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய திட்டங்கள் ஏதுமில்லை. அதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்டினேன். உங்களுடைய கோரிக்கையை என்னிடத்தில் கொடுங்கள். பிறகு நான் அதை அறிவிப்பு செய்கின்றேன் என்று அவரும் என்னிடத்தில் சொன்னார்கள். அந்த அடிப்படையில் சில கோரிக்கைகளை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் 21 பல்கலைக்கழகங்களில் 9 பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் இல்லை. 8 பல்கலைக்கழகங்களில் பதிவாளர் இல்லை. 10 பல்கலைக்கழகங்களில் தேர்வுக் கட்டுப்பாட்டு

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2017 மார்ச் 23

அலுவலர் இல்லை என்ற ஒரு தகவல் வந்த நிலையில் இந்தப் பணியிடங்களை நிரப்பும்போது அதில் சமூக நீதி பேணப்பட வேண்டும். குறிப்பாக முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்றும் பழங்குடியின மக்களுக்கும் அவற்றிலே வாய்ப்புகளை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடமும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 10 பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் இல்லை என்பது தவறான தகவல். 3 பல்கலைக்கழகங்களில் மட்டும் துணை வேந்தர்கள் இல்லை. அதற்குரிய தேடுதல் குழு போடப்பட்டு அந்தத் தேடுதல் குழுவின் பணியானது முடிவடையும் தருவாயில் உள்ளது. கூடிய விரைவில் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு தேடுதல் குழு, 3 பேர் கொண்ட பட்டியலை வழங்கும். அதில் ஒருவரை நியமனம் செய்வார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு 10 என்று சொல்லியதை 3 என்று மாற்றிக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். புகழ்பெற்ற அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் தனது கிளைகளை மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் துவக்கியிருக்கின்றது. அதுபோல், தமிழ்நாட்டிலும் அவர்கள் தொடங்க விருப்பமாக இருக்கிறார்கள். அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய துணை அமைப்பு இங்கே துவங்கப்படும்போது பல்லாயிரக்கணக்கான சிறுபான்மை சமுதாய மாணவர்களும், பிற சமுதாய மாணவர்களும் பயன்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான

2017 மார்ச் 23] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

100 ஏக்கர் இடத்தினை அரசு ஒதுக்குமேயானால் இதர பணிகளை மத்திய அரசு முன் முயற்சிகளோடு தொடங்கும். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் முயற்சி எடுக்க வேண்டும். அடுத்ததாக என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலிகார் பல்கலைக்கழகத்தினை தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று யோசித்ததை வரவேற்கிறேன். இன்ஷா அல்லாஹ், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அனுமதி பெற்று, வக்ஃபு வாரியம்மூலம் வீசில் இடம் வழங்க ஏற்பாடு செய்ய பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்சாரி, உரையை முடியுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: முடித்துவிடுகிறேன். முக்கியமான விஷயம். நாகூரில் வக்ஃபு வாரிய இடத்தில் ஒரு பெண்கள் கல்லூரியை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் நீதிபதி ராஜேந்திர சச்சார் அவர்கள் தன்னுடைய பரிந்துரைகளை எல்லாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 10 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. அன்றைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிமுன் அன்சாரி அவர்கள் மூன்று கோரிக்கைகளை கொடுத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எப்படியாவது அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தினைச் சொன்னார்கள். முதலாவதாக நாகூரில் வக்ஃபு வாரிய இடத்தில் வக்ஃபு வாரியம் சார்பில் ஒரு பெண்கள் கல்லூரி தொடங்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள்.

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 மார்ச் 23

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டிருக்கின்றது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இன்று காலையில் இதுகுறித்து விவாதித்தோம். பெண்கள் கல்லூரி தருவதற்கு எந்தவிதமும் ஆட்சேபணையும் இல்லை என்ற கருத்தினை அவர்கள் சொன்னார்கள். ஆகவே, வக்ஃபு வாரியம் அந்த இடத்தினைக் கொடுக்கின்றபட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, அந்த இடத்தில் கல்லூரி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை இந்த அரசால் நிச்சயமாக எடுக்கப்படும்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் செயல்படும் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் கிளையைத் தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு சென்னை அல்லது சென்னைக்கு அருகில் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும். நான் 100 ஏக்கர் நிலம் இருக்கின்றதா என்று கேட்டேன். அவர்கள் இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, அவர்கள் 100 ஏக்கர் நிலத்தினை லீசுக்கு மாற்றம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அனுமதியினைப் பெற்று அதனையும் நாங்கள் செய்து கொடுத்துவிடுவோம். அதில் எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது.

அடுத்து, வெளியூரில் படித்துவிட்டு வேலைக்குச் செல்லும் முஸ்லிம் பெண்கள் சென்னையில் பல சிரமங்களுடன் கூடுதல் கட்டணத்தில் தனியார் விடுதியில் தங்குகின்றனர். அவர்கள் நலனுக்காக சென்னையில் உள்ள வக்ஃபு வாரிய இடத்தில் பெண்கள் விடுதி கட்டித்தர வேண்டும். வேலை செய்யும் பெண்களுக்கு ஒரு விடுதி வேண்டும் என்பது, ஒரு நல்ல கோரிக்கை. வக்ஃபு வாரியத்திற்கு சென்னையில் நிலம் அதிகமாக இருக்கிறது என்று கருதுகிறேன். அவர்கள் நிலம் கொடுத்துவிட்டால் அங்கு விடுதி கட்டுவதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃபு வாரிய இடத்தினை லீசில்தான் தர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத்தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சச்சார் குழுவின் பரிந்துரைகளில் ஒன்றான சம வாய்ப்பு ஆணையத்தினைப் பொறுத்தவரை நிபுணர் குழு தனது அறிக்கையினை மைய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையினை நன்கு ஆராய்ந்து ஆலோசனைகளை அளிக்கும்பொருட்டு, உரிய அமைச்சகத்திடம் அனுப்பப்பட்டுள்ள நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தியுள்ளது. கல்வி உதவித் தொகை, விடுதிகள், விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்குதல், மாநில, மாவட்ட அளவிலான பரிசுகள், உருது மொழி பயிலும் மாணவ மாணவிகளுக்கான பரிசுத் திட்டம், முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம், மறுவாழ்வு நிதியுதவித் திட்டம், உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம், ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி, கிறிஸ்துவ தேவாலயங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மேலும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் பொருளாதாரக் கடன் உதவித் திட்டங்கள், அதாவது தனி நபர் கடன் உதவித் திட்டம், சுய உதவிக் குழுக்கள்மூலம் சிறு கடன் வழங்கும் திட்டம், கல்விக் கடன் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, சீக்கிரம் உரையை முடியுங்கள். 4-00 மணிக்கு* meeting *உள்ளது.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்ததற்காக பொன்மனம் கொண்ட மாண்புமிகு அமைச்சர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: அதிகபட்சம் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். சச்சார் கமிட்டி பரிந்துரைகள் எந்தளவிற்கு தமிழ்நாட்டிலே அமல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது குறித்த ஓர் அறிக்கையை விரைவில் தர வேண்டும். அதன் மூலமாக சிறுபான்மை மக்கள் என்ன பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் தமிழகத்தில் 3.5 சதவிகித இட ஒதுக்கீடு முஸ்லிம் சமுதாய மக்களுக்கு எல்லா துறைகளிலும் கிடைக்கிறதா என்பதை ஆய்வு செய்ய தலைமைச் செயலாளர் தலைமையிலே ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட முக்கியமான ஒரு கோரிக்கையை முன்வைக்கிறேன். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள் சுருமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளிலே ஒன்று என்னவென்று சொன்னால், நிலுவையிலுள்ள விவசாய மின் இணைப்புகளை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட நாகப்பட்டினத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுகம் இருக்கிறது. அந்தத் துறைமுகத்தை கடந்த ஆட்சியிலே மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழே பசுமைத் துறைமுகமாகத் தனியார் பங்களிப்போடு செயல்படுத்தித் தரப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று என்னுடைய தொகுதிக்குட்பட்ட காவேரியின் உப ஆறான வெட்டாற்றிலே உத்தமசோழபுரம் மற்றும் நரிமணம் அருகிலே ஒரு தடுப்பணையைக் கட்டினால் அந்தத் தடுப்பணையின் மூலமாக 5 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறும். 45 வருவாய்க் கிராமங்கள் குடிநீரைப் பெறும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெட்டாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுவதற்கு தயவு செய்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கோரிக்கைகளில் முக்கியமான ஒன்று சிறைவாசிகளுடைய விடுதலை. 14 ஆண்டுகள் நிறைவு செய்த ஆயுள்

தண்டனைக் கைதிகளை விடுதலை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இரண்டு முறை நான் பேசியிருக்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பாக அருமைக்குரிய தாயார் அற்புதம்மாள் அவர்கள்கூட பேரறிவாளன் குறித்த விஷயங்களை எனக்கு நினைவூட்டினார். அம்மா அவர்களுடைய அரசால் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேருடைய விடுதலைக்காக இந்த மாமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். அதேபோன்று ஜாதி, மத, பேதம் இல்லாமல் 14 ஆண்டுகளை நிறைவு செய்த பாட்சா உள்ளிட்ட அனைத்து கைதிகளையும் விடுதலை செய்ய கருணை உள்ளத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிங்கப்பூருக்கும், மலேசியாவிற்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க சமீபத்தில் நான் சென்றிருந்தேன். அங்கிருக்கக்கூடிய தமிழர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். சிங்கப்பூர், மலேசியா, புருனே, பர்மா, இலங்கை உள்ளிட்ட நாடுகளிலே தமிழ் படைப்பாளிகள் எழுதியிருக்கக்கூடிய நூல்களையெல்லாம் தமிழக அரசு விலைக்கு வாங்கி, தமிழக அரசு நூலகங்களில் வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன் என்று சொல்லியிருந்தேன். புலம் பெயர்ந்து வாழக்கூடிய தமிழர்களுடைய படைப்புகளை தாய்த் தமிழ்நாட்டில் நாம்தான் அங்கீகரிக்க வேண்டும். இதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், உறுப்பினர்களின் சம்பள உயர்வு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால் பல உறுப்பினர்கள், அதாவது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே, நான் வந்த பிறகு, கட்சி வேறுபாடின்றி, அனைவரும் ஆதரித்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்தக்கூடிய கோரிக்கையாக இந்தக் கோரிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தமிமுன் அன்சாரி, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தனக்கென்று வாழாது மக்களுக்காக வாழ்பவர்கள். ஆகவே, அதனை நீங்கள் வற்புறுத்த வேண்டாம்.

[*2017 மார்ச் 23*

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வது சரிதான். சிங்கப்பூர் சிற்பி, (குறுக்கீடு) சிங்கப்பூர் சிற்பி திரு. லீக்–வான் யூ அவர்கள் சொன்ன ஒரு கருத்தை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மக்களுக்காகப் பணியாற்றக்கூடியவர்களுடைய முழுமையான தேவைகளை, நிறைவான சம்பளம் கொடுப்பதன் மூலமாக, ஊழல், தவறான முறைகேடுகள் எதுவும் நடக்காமல் தடுக்க முடியும் என்று சொல்லியிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எனக்கு மட்டுமல்ல. உலகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து பொதுநலவாதிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் பொருந்தும். அந்த அடிப்படையில், டெல்லியில் ஒரு M.L.A.–க்கு 2ஐ இலட்சம் ரூபாய் சம்பளம் தருகிறார்கள். அந்த அளவிற்கு யாரும் கேட்கவில்லை. ஆனால் இப்போதைய நிலையிலிருந்து உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பக்கத்தில் இருக்கக்கூடிய புதுச்சேரி மாநிலத்தில்கூட 60,000 ரூபாய் சம்பளம் தருகிறார்கள்.எனவே,உறுப்பினர்களுடைய ஏகோபித்த ஆதரவோடு, அமைச்சர்களுக்கு, M.L.A.–களுக்கு மட்டுமல்ல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பென்ஷன் தொகையையும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தொகுதி மேம்பாட்டு நிதி 2 கோடி ரூபாய் என்பது அந்த நேரத்தில் அது சரியானது. இப்போது அதை கேரளாவிலே 6 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, தொகுதி மக்களுடைய விருப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்யும் வகையிலே தொகுதி மேம்பாட்டு நிதியை 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தருமாறு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பல கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் செய்து தருவதாக இந்த அவையில் வாக்குறுதி அளித்ததற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பல கோரிக்கைகளை ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்து

2017 மார்ச் 23] **[திரு. எம். தமிமுன் அன்சாரி]**

பாராட்டியிருக்கின்றார்கள். அதற்காகவும் நான் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்சாரி, மாண்புமிகு உறுப்பினர்கள் உங்களுடைய உரையைச் சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று கேட்டார்கள். நீங்கள் வைத்த கடைசி கோரிக்கையில் எல்லோரும் ஆவலாக, உங்களை மேலும் பேசச் சொல்கிறார்கள். சீக்கிரம், முடியுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த சபை உறுப்பினர்களுடைய ஆதரவோடு என் கோரிக்கையை உங்கள் முன்னால் வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் என்னுடைய கோரிக்கையை ஆதரித்ததற்காக எனது நன்றிகளைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

12. அரசினர் தீர்மானம்
விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *24–3–2017 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32–ஐ 24–3–2017, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2017 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, 24–3–2017 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–3–2017) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

36. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

37. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—